*Issued* 11—11—1965]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

MONDAY, 9TH AUGUST 1965

**VOLUME XXXI—No. 5**

230

*CONTENTS*


| | | PAGES |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 435–464 |
| II | Announcement— | |
| | The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965 .. .. .. .. .. .. .. .. | 464 |
| III | Calling attention to the incidence of late blight disease in the Nilgiris district .. .. .. .. .. .. .. | 464–465 |
| IV | Presentation of Reports— | |
| | Report of the Committee on Estimates on— | |
| | (i) the State Khadi and Village Industries and | |
| | (ii) the Industrial Estates .. .. .. .. .. | 465 |
| V | Draft Outline of the Fourth Five Year Plan—Discussion *cont.* .. | 465–548 |
| VI | Papers laid on the table of the House .. .. .. .. | 548 |


©
GOVERNMENT OF MADRAS
1965

[illegible]bly Department
[illegible], Madras-9

PRICE 50[illegible]

V211, 31 N65
N65-31-5
64919

V2ll.31 N65
N65-31-5

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 9th August 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Expansion of the Government Hospital at Thittakudi.*

*94 *Q.*—SRI K. NARAYANASWAMY PILLAI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to expand the Government Hospital at Thittakudi in Vriddhachalam taluk and to increase its bed strength ; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) No proposals for the expansion of the Government Hospital, Thittakudi, have been received from the Director of Medical Services.

(*b*) Does not arise.

64919

*Crash programme for Family Planning in 1964–65.*

*95 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to implement a crash programme for family planning in 1964–65 ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) A crash programme on family planning is under implementation in this State.

(*b*) A statement [a] is placed on the Table of the House.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** சார், லூப் என்ற வளையம் மாட்டும் முறை உடல் நலத்தைப் பாதிக்கிறது என்று மருத்துவ நிபுணர்கள் சொல்லுகிறார்களே, அதை அரசாங்கம் பரிசீலித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இதைப் பரிசீலனை செய்து, இந்த முறையை ஜில்லாக்களிலே எக்ஸ்பெரிமெண்ட் செய்வதற்கு மருத்துவ அதிகாரிகளுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

---

[a] Printed as Appendix I on pages 550–551.

[9th August 1965

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தக் குறிப்பிலே தாசில்தார் கிரேடிலே 12 மாவட்ட அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்று இருக்கிறது. அப்படி என்றால் ஆண் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களா அல்லது பெண் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது அவர்களை மாற்றி பெண் அதிகாரிகளை நியமிப்பதற்கு உத்தேசம் இல்லை. இப்போது ஃபாமிலி பிளானிங் ஆபீசர்ஸ் பெண்களாகத்தான் இருக்கிறார்கள்.

### மதுரை மாவட்டம் சேடப்பட்டியில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

*121 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :<br>திரு. செ. மாதவன் :<br>திரு. து. ப. அழகமுத்து : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியப் தலைவர் தேர்தலின்போது போலீசாரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன ?

(உ) இதைக்குறித்து, நீதி விசாரணை நடத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Two persons died.

(c) No. But a magisterial enquiry by the District Revenue Officer was held.

திரு. து. ப. அழகமுத்து : விசாரணை முடிவு பெற்றுவிட்டது என்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விசாரணை முடிவு பெற்று ரிபோர்ட் வந்து, அந்த ரிப்போர்ட்டில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சரி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

### லஞ்சக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நிறுவனம்

*122 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இம்மாநிலத்தில் லஞ்ச ஊழல்களை விசாரிக்கத் 'தனி நிறுவனம்' (Independent Body) அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are no such plans at present.



9th August 1965]

### ஐ. ஏ. எஸ். அதிகாரி பதவி நீக்கம்

*123 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லஞ்ச ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் இம்மாநிலத்தில் ஐ. ஏ. எஸ். (I.A.S.) அதிகாரி யாரேனும் பதவி நீக்கம் செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes. An Indian Administrative Service Officer was dismissed from service by the Government of India with effect from 20th January 1965 for passing irregular orders of assignment after accepting illegal gratification in respect of lands of Chokkikulam village situated in Madurai Municipality.

திரு. கரு. சீமைச்சாமி : சாதாரணமாக சிறிய உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கினால் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் பெரிய ஐ. ஏ. எஸ். உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கினால் பதவி நீக்கம் மட்டும் செய்யப்படுவதன் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பதவி நீக்கம் மட்டும் செய்யப்படுகிறது என்று கனம் அங்கத்தினர் சொல்வது தவறு. கோர்ட்டிலே தண்டிக்கப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அவர்கள் அப்பீல் செய்து இருப்பதால் இதற்கு மேலும் கேள்வி கேட்கவோ, விவரம் கொடுக்கவோ இடம் இல்லை.

### *Hill Allowance for Gazetted Officers*

*124 Q.—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal under consideration of the Government to grant hill allowance to all the Gazetted Officers working in hill areas in the State ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have sanctioned with effect from 1st March 1965, hill allowance to all Gazetted Officers drawing pay up to Rs. 810 serving in hill stations.

திரு. ஜே. மாதா கவுடர் : எல்லா அதிகாரிகளுக்கும் ஹில் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா ? பள்ளிக்கூடத்தில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் ஹில் அலவென்ஸ் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹில் ஸ்டேஷன்களில் வேலை செய்யும் சர்க்கார் கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் எல்லோருக்கும் இந்த ஹில் அலவென்ஸ் கொடுக்கப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து :-தலைவர் அவர்களே, ஆசிரியர்களிடமிருந்து அப்படியொரு கோரிக்கை வந்திருக்கிறதா ?

[9th August 1965

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தக் கேள்வி சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பற்றித்தான் இருக்கிறது. 'கெஜடட் ஆபீசர்ஸ் வொர்க்கிங் இன் ஹில் ஏரியாஸ்' என்று தான் கேள்வியிலேயே இருக்கிறது. மேலும் விவரங்கள் வேண்டும் என்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

### திரு. ஷேக் அப்துல்லாவின் பராமரிப்பு

* 125 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :**
திரு. கோ. சி. மணி :
திரு. எஸ். ஆறுமுகம் :
} **கனம்** முதல் **அமைச்சர்** தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள ஷேக் அப்துல்லாவின் பராமரிப்பு இம்மாநில அரசின் கண்காணிப்பில் நடைபெறுகிறதா ?

(இ) ஆம் எனில், அதற்காக இம்மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) There is no expenditure to the State Government as the entire expenditure is reimbursed by the Government of India.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** கோடைக்கானலில் ஷேக் அப்துல்லாவை வைப்பதற்கு ரூ. 60,000 பங்களாவிற்குச் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இந்தச் செலவு நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்ததா ? அல்லது மத்திய அரசாங்கத்தைச் சார்ந்ததா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதனால் ஏற்படுகிற செலவுகளையெல்லாம் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** கோடைக்கானலில் இருக்கும் அந்த பங்களா சிவகெங்கை ராஜாவுடையது. அதற்கு 60,000 ரூபாய் செலவு செய்திருப்பதாக பத்திரிகைகளிலே செய்தி பார்த்தோம். அதை வாங்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகைகளைப் பார்த்துக் கேள்வி கேட்பது சரியல்ல. பத்திரிகையிலே வருவதெல்லாம் சரியான செய்தி என்று சொல்ல முடியாது. இப்போது இந்த பங்களாவை வாங்குவதாகவோ அல்லது அதற்காகச் செலவு செய்வதாகவோ உத்தேசம் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஷேக் அப்துல்லாவை இந்த மாநிலத்திலே வைத்திருப்பதால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆதலால் அவரை வேறு மாநிலத்திற்கு மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த மாநிலத்திலே இருந்தால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று கனம் அங்கத்தினர் கூறுகிறார்கள். நான் அப்படிக் கருதவில்லை. இந்த மாநிலத்திலிருந்து



9th August 1965]

வேறு மாநிலத்திற்கு மாற்றவேண்டும் என்று கூறுகின்ற யோசனை சரியான யோசனை அல்ல என்பதை கனம் அங்கத்தினர் ஏற்றுக் கொள்வார்கள்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஷேக் அப்துல்லாவை மலைப்பிரதேசத்தில் வைப்பதால் போலீஸ் பந்தோபஸ்துக்காக ஒவ்வொரு நாளும் போலீஸ்காரர்கள், மேல் உத்தியோகஸ்தர்கள், கலெக்டர் இவர்கள் எல்லாம் அங்கே போக வேண்டி இருக்கிறது. இதற்கு அவர்களுக்கு ஆகக்கூடிய வாகனச் செலவுகளை யார் ஏற்றுக் கொள்ளுகிறார்கள் ? இதையெல்லாம் ஏன் நம் மாநிலம் செலவு செய்ய வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நம் மாநிலம் தான் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நமது மாநிலத்திற்கு அகில இந்திய பாதுகாப்பில் அக்கறை இருக்கிறது. ஆதலால் இதற்காக நாம் செலவு செய்தாலும் பாதகம் இல்லை என்று கருதுகிறேன்.

### குண்டர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல்

* 126 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குண்டர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

### 'நாம் தமிழர்' தொண்டர்கள் கைது

* 127 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் சேலம் மாவட்டத்திற்கு ஜனாதிபதி விஜயம் செய்ததை யொட்டி 'நாம் தமிழர்' தொண்டர்களைக் கைது செய்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes. Some persons belonging to this party were arrested during the President's visit to Salem, as it was feared that their proposed black flag demonstration would disturb public order. They were released soon after the President left Salem.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அவர்கள் எதற்காகக் கருப்புக் கொடி காண்பித்தார்கள் ? அவர்களுடைய கோரிக்கைகள் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஏதோ சேலம் உருக்காலை பற்றி ஜனாதிபதி முன்பு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்று ஆரம்பித்தார்கள். ஆர்ப்பாட்டம் செய்தால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்ற காரணத்திற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது.

[9th August 1965

### *Corruption in Transport Department*

* 128 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR :
SRI S. MADHAVAN :

Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any of the officers in the Transport Department were involved in corruption charges during the year 1964–65; and

(*b*) if so, the number and the action taken against them ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) Two officers were involved. One officer was sentenced to rigorous imprisonment for one year by the Special Judge, Coimbatore. The case against the other officer is pending.

**திரு. செ. மாதவன் :** இந்தக் குற்றச்சாட்டைக் கண்டுபிடிக்க ஈடுபட்டது ஆண்டி-கரெப்ஷன் டிபார்ட்மெண்டா அல்லது டைரக்டர் ஆப் விஜிலென்சா ? டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் இதற்காக ஒரு பிரிவு அமைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதில் விஜிலென்ஸ் டிபார்ட்மெண்ட் தான் ஈடுபட்டது.

**திரு. ஆ. தங்கவேலு :** பெரிய அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்று சொன்னார்கள். எந்த எந்த பதவி வகிப்பவர்கள் நீக்கப்பட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒருவருடைய கேஸ் கோர்ட்டிலே இருப்பதால் அதற்குப் பதில் சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன். மற்றொருவர் மோட்டார் வெஹிகல்ஸ் இன்ஸ்பெக்டர்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த டிரான்ஸ்போர்ட்டில் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காக, குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதற்காகப் புதிய அமைப்புகள் தோற்றுவிக்கப்படுமா ? அப்படியென்றால் அவற்றின் விவரம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டிலே இன்டென்சிவ் டெஸ்ட் செய்யப்படுகிறது. இன்டென்சிவ் செக் குறிப்பிட்ட இடத்திலே இரண்டு நாட்கள் தொடர்ந்து எல்லா அதிகாரிகளும் இருந்து டாக்ஸ் கட்டாமல் இருந்தது, எவேஷன் செய்தது, ஓவர் ஸ்பீடிங் முதலியவைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்படுகின்றன. லஞ்சக் குற்றச்சாட்டுகளை விஜிலென்ஸ் டிபார்ட்மெண்ட்டுக்குத்தான் அனுப்பி விடுகிறோம்.

### *Singing Media for warning the Motorists*

* 129 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be plesaed to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to introduce what is called " singing media " for warning the motorists against crossing the prescribed line; and

(*b*) if so, the details thereof ?



9th August 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Highways Department have been investigating a new type of highway median strip known as the " Singing median ", which has been developed by the Ontario Highways Department in Canada. The design consists of alternate bends of corrugated concrete surface about four feet long (with four and half inches in spacing of corrugations and a depth of half inch) and of six feet smooth surface. When vehicles run over these medians, an unmistakable pattern of resonance is produced to the sensation of the motorist. This is to be tried in Mount Road between Gemini and Eldams Road intersection.

**திரு. வை. சங்கரன் :** அது வெற்றிகரமாக இருந்தால் இதர இடங்களுக்கும், சென்னைக்கும், மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பரிட்சை செய்து பார்த்த பிறகுதான் சொல்ல முடியும்.

### வாடகைக் கார்களில் கட்டண மீட்டர்களைப் பொருத்துதல்

* 130 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வாடகைக் கார்களில் கட்டண மீட்டர்கள் பொருத்தப்படவேண்டிய முறை எந்தெந்த மாவட்டங்களில் அமுல் படுத்தப்பட்டு வருகிறது ?

(இ) அதனை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் எப்போது அமுலாக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Fare meters should be fixed in the taxis plying in the City of Madras and the towns of Coimbatore, Tiruchirappalli and Madurai.

(*b*) The question of enforcing fitment of meters in the taxis plying in other District Headquarters will be considered later, subject to availability of meters.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, திருச்சி போன்ற நகரங்களில் டாக்சி சொந்தக்காரர்கள் மீட்டர் வைப்பதற்குத் தடை உத்திரவை ஹைக்கோர்ட்டிலிருந்து வாங்கியிருக்கிறார்கள். அதிலே முடிவு தெரியும் வரையில் மற்ற டாக்சிக்காரர்கள் மீட்டர் இல்லாமல் ஓட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தவித உத்தேசம் இல்லை.

[9th August 1965

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த வாடகைக் கார்களுக்கான கட்டணம் எல்லா ஊர்களிலும் ஒரே மாதிரியான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ஊருக்கு ஊர் மாறுபடுகிற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும். கட்டணங்கள் ஹில்சுக்கு வேறு, ப்ளெயின்சுக்கு வேறு இருக்கின்றன.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னையிலே உள்ள வாடகைக் கார்களுக்கு மீட்டர் வைக்கப்பட்டிருக்கிறது. கார்களை ஓட்டுகிற போது ஒரு இடத்தில் ஒருவரை இறக்கி விட்டவுடன் மற்றொருவரை ஏற்றிக்கொள்ள வழி இருக்கிறது. மற்ற நகரங்களில் இம்மாதிரி மீட்டர் வைப்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள். நகரத்திலிருந்து ஒருவரை ஏற்றிக்கொண்டு 15-20 மைல் போனால் திரும்பும் போது ஒருவரும் இல்லாமல் வெற்று வண்டியுடன் திரும்ப வேண்டியிருக்கிறது. அந்த வகையில் ஆலோசித்துக் கட்டணத்தைத் திருத்தி அமைக்கச் சர்க்காருக்கு எண்ணம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மீட்டர் வைத்தால் கார் வைத்துக் கொண்டு டாக்சி ஓட்டுகிறவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது. மீட்டர் வைக்காவிட்டால் பொது மக்களுக்குக் கஷ்டம் இருக்கிறது. சர்க்கார் பொது மக்கள் கஷ்டத்தை மிகவும் கவனித்திருக்கிறார்கள். இதிலே அவர்கள் அதிகமாகக் கட்டணம் வேண்டுமென்றோ அல்லது திருத்தி அமைக்க வேண்டுமென்றோ கேட்டால் பரிசீலனை செய்யலாமே தவிர, மீட்டரே வைக்காமல் இருக்க வேண்டுமென்றால் அதைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்கில்லை.

**திரு. வை. சங்கரன் :** மதுரை நகரத்தில் ஒவ்வொரு இடமும் ஷார்ட் டிஸ்டன்சில் அமைந்திருக்கிறது. லாங் டிஸ்டன்ஸ் இல்லாமல் ஷார்ட் டிஸ்டன்சில் இருப்பதால் பேட்ரனேஸேஷன் இல்லாமல் இருப்பதால், மீட்டர் ரேட்டையாவது அதிகப்படுத்துவது பற்றி மதுரை நகரத்தைப் பொறுத்தவரையிலாவது கன்சிடர் செய்யப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முதலில் கேட்ட அதே கேள்வி தான் இது.

**திரு. செ. மாதவன் :** மாநிலத்தில் கட்டணத்தில் இடத்திற்கு இடம், மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் இருப்பதால், ஒரு இடத்தில் லைசென்ஸ் வாங்கிவிட்டு இன்னொரு இடத்தில் ஓட்டும் நிலைமை ஏற்படுகிறது. அதைத் தடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எந்தெந்த மாவட்டங்களில் மீட்டர் போடவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறதோ, அந்த மாவட்டங்களில் மீட்டர் போட்டுத்தான் ஓட்டவேண்டும். மற்ற மாவட்டங்களில் ரிஜிஸ்டர் செய்தது என்று சொல்லி சென்னையில் மீட்டர் இல்லாமல் வந்து ஓட்ட முடியாது.



9th August 1965]

### 1964-65-ல் ஏற்பட்ட லாரி விபத்துக்கள்

*** 131 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1964-65-வது ஆண்டில் ஏற்பட்ட லாரி விபத்துக்கள் எத்தனை?

(இ) அதனால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The number of lorry accidents that occurred in Madras State during 1964-65 is as follows :—

| | |
|---|---|
| Fatal accidents ... ... ... ... | 419 |
| Major accidents ... ... ... ... | 481 |
| Minor accidents ... ... ... ... | 1,379 |
| Accidents in which no human being suffered any injury ... ... ... | 352 |
| Total ... | 2,631 |

(*b*) Rs. 5,58,870.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இந்த விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்கான தனிச் சட்டம் இருக்கிறது. தேர்ட் பார்ட்டி இன்ஷ்யூரன்ஸ் இருக்கிறது. அதன்படி கொடுக்கப்படும்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, இந்த லாரி ஆக்சிடெண்டுகள் அநேகமாக லைசென்ஸ் வாங்கி விட்டார்கள் என்ற ஒரே காரணத்தினால் ஓட்டிச் செல்லுவதால் ஏற்படுகின்றன. அவர்களுக்கு முறையாக டிரைவிங் ஸ்கூல் வைத்துப் பயிற்சி கொடுத்தால் இப்படிப்பட்ட ஆக்சிடெண்டுகளைத் தடுக்க முடியும் அல்லவா? அதைச் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** என்னுடைய அபிப்பிராயத்தில், வேகமாக ஓட்டுகிறதால் தான் இந்த விபத்துக்களெல்லாம் ஏற்படுகின்றன. நானும் அடிக்கடி ரோடிலே டிராவெல் செய்யக் கூடிய ஒருவர். நான் பார்த்த அளவில் எந்த லாரியும் ஸ்பீட் லிமிட்டிற்குள் ஓடுவதே கிடையாது. ஹெவி லோடு ஏற்றிக் கொண்டு வேகமாக ஓட்டுவதால்தான் ஆக்சிடெண்டுகள் ஏற்படுகின்றன.

**திரு. வை. சங்கரன் :** பொதுவாக ரோடில் ஏற்படும் விபத்துக்களில் லாரி விபத்துக்களே அதிகமாக இருப்பதால் லாரிகளுக்காவது ஸ்பீடை கன்ட்ரோல் செய்ய இன்ஸ்ட்ருமெண்ட்டைப் பொருத்த உத்தரவிடுவது பற்றி சர்க்கார் யோசிக்குமா?

[9th August 1965

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது பல வருஷங்களாக ஆலோசனை செய்யப்பட்டது. இதிலே இரண்டு வித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. கவர்னர் வைத்து ஸ்பீடை கன்ட்ரோல் செய்து விட்டால், அதுவே ஆக்சிடெண்டுக்குக் காரணமாகவும் ஆகலாம். அவசரமாக ஒரு இடத்தில் ஓவர்டேக் செய்ய வேண்டும் ஆக்சிடெண்ட்டைத் தவிர்ப்பதற்கு என்ற நிலை வரும்போது, தவிர்க்க முடியாது போகக்கூடும். இந்தக் காரணத்தினால் இந்த யோசனையை அமலுக்குக் கொண்டுவருவதற்கில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த லாரி விபத்துக்களின் காரணமாக 419 பேர்கள் இறந்து விட்டார்கள், 481 விபத்துக்கள் ஏற்பட்டன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவைகளுக்கு அடிப்படையான காரணங்கள் என்ன என்று கண்டுபிடிக்கப்பட்டதா? அவைகளைப் போக்கி விபத்துக்களைத் தடுக்க நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைத் நான் நான் ஆரம்பத்தில் சொன்னேன். ஓட்டுகிறவர்கள் ரெக்லஸாக ஓட்டுகிறார்கள். ஸ்பீட் லிமிட்டைக் கவனிப்பது கிடையாது. இதைத் தடுக்க திடீர் திடீரென்று சோதனைகளை இப்போது ஏற்படுத்துகிறோம். ஒரு மாதத்திற்கு முன்பு ராஜ்யம் பூராவும் சோதனை நடத்தப்பட்டது. அதிலே பிடிபட்டவர்கள், முதல் தடவை என்று வார்னிங் கொடுத்து விடப்பட்டார்கள். இரண்டாவது தடவை ஒரு ஜில்லாவில் சோதனை நடத்தப்பட்டது. இனி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த தேர்ட் பார்ட்டி இன்ஷூரன்ஸ் திட்டத்தின் அடிப்படையில் க்ளெயிம்கள் எல்லாம் செட்டில் ஆக நீண்ட கால தாமதம் ஆகிறது. அந்த மாதிரித் தாமதம் ஆகாமல் தடுக்க சர்க்கார் முயற்சிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது சர்க்கார் கையில் இல்லை. ட்ரிப்யூனல் கையில் இருக்கிறது.

**திரு. ஆ. தங்கவேலு :** க்ளீனர்களாக இருக்கிறவர்கள் குறுகிய காலத்தில் வண்டி ஓட்டக் கற்றுக்கொண்டு, லைசென்ஸ் எடுத்துக் கொண்டு லாரி ஓட்ட வருவதால் அதிகமாக லாரி விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறைந்த அளவில் இத்தனை வருஷம் சர்வீசாவது உள்ளவர்கள்தான் லாரி ஓட்டலாம் என்று இருந்தால் இந்த விபத்துக்களைத் தடுக்க வசதி ஏற்படும். ஆகையால் அந்த மாதிரி விதி ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்வீஸ் என்றால், லாரி ஓட்டுகிற சர்வீசா அல்லது மோட்டார் ஓட்டுகிற சர்வீசா என்று தெரியவில்லை. லாரி ஓட்டுகிற சர்வீஸ் என்றால், நீந்தத் தெரிந்தவர்கள் தான் தண்ணீரில் போகவேண்டும் என்று சொல்லுகிற நிலை வந்து விடும். லைசென்ஸ் கொடுப்பதை ஸ்ட்ரிக்ட்டாகச் செய்யலாம் என்று சர்க்காருக்கு யோசனை இருக்கிறது.



9th August 1965]

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்த லாரி விபத்துக்கள் அதிகமாக சென்னையிலிருந்து திருச்சி போகிற ரோடிலும், சென்னையிலிருந்து பங்களூர் போகிற ரோடிலும் தான் ஏற்படுகின்றன. இந்த இரண்டு ரோடுகளிலும் இரண்டு மோட்டார் வெஹிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டர்களை அமர்த்தி தினசரி செக் செய்ய ஏற்பாடு செய்தால் விபத்துக்களைத் தடுக்கலாம். அம்மாதிரி ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது ஒரு ஸஜெஷன் தான்.

**திரு. வை. சங்கரன் :** பொதுவாக இரவு நேரத்தில் லாரி ஓட்டுகிறவர்கள் 8 மணி, 10 மணி தூங்காமல் ஓட்டுவதால் தான் இந்த விபத்துக்கள் ஏற்படுவதால், இரண்டு டிரைவர்கள் போட்டு நான்கு மணிக்கு ஒருவர் என்ற முறையில் மாற்றுகிற விதியை அமைக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது ஏற்கனவே யோசனை செய்யப்பட்டு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியில் கூட விவாதிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான முடிவு எடுக்கப்படவில்லை. அது ஆலோசனையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## கைத்தொழில் அபிவிருத்தி

* 132 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அறிவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட செயற்குழுவின் அறிக்கையும், அதன்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் விபரமும் அடங்கிய நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : The various recommendations of the State Working Group are still being examined.

## *Demand for Yarn Produced in the State*

* 133 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that there has been a fall in demand for yarn produced in this State in the Northern Indian markets ; and

(*b*) if so, the reasons therefor ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Due to glut in the yarn market there has been a general fall in demand for yarn produced or consumed in every part of the country.

**திரு. வை. சங்கரன் :** இன்றைக்கு வட ராஜ்யங்களிலே, குறிப்பாக ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம் போன்ற ராஜ்யங்களிலே புதியதாக நூற்பு ஆலைகள் திறக்கப்படுவதன் காரணத்தினால், தம்

மூடைய தென் இந்தியாவில், குறிப்பாக சென்னை ராஜ்யத்தில் தயாரிக்கப்படுகிற நூலுக்கு கல்கத்தா மார்கெட் போன்ற வட இந்திய மார்கெட்டில் கிராக்கி குறைந்திருக்கிறது என்று சொல்லப் படுகிறது. அது வாஸ்தவம் தானா ?

THE HON. SRI R. VENKATARAMAN : In a free economy such temporary excesses of supply and demand cannot be avoided But I am not sure that this is due to new mills that have been started in North Indian States.

### கூட்டுறவு நூற்பு ஆலையைத் துவக்குதல்

*134 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திண்டிவனம் வட்டம் சாரம் கிராமத்தில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை துவக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) திண்டிவனம் வட்டத்திலுள்ள சாரம் கிராமத்தில் 12,000 கதிர்களுடன் கூடிய கூட்டுறவு நூற்பு ஆலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. அந்த ஆலையின் கட்டட வேலை பூர்த்தியாகும் தறுவாயில் உள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் அது உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

திரு. ஆ. தங்கவேலு : திண்டிவனம் கூட்டுறவு நூற்பு ஆலை சம்பந்தமாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிய மாதிரி முக்கால் வாசி கட்டட வேலை முடிவுபெற்று வருகிறது. அந்த ஆலையில் எப் பொழுது நூற்புவேலை துவங்கும் என்று நான் கேள்வி கேட்டேன், ஆனால், அந்தக் கேள்வியில் நூற்பு ஆலை துவங்கும் உத்தேசம் உண்டா என்று இருப்பதினால், இந்தக் கேள்வியைப் பார்ப்ப வர்கள் கட்டடம் முக்கால்வாசி முடிந்துவிட்டது, இப்பொழுது இந்த மாதிரி கேள்வி கேட்கிறார்கள் என்று தவறாகப் புரிந்து கொண்டு என்னை என்னுடைய நண்பர்கள் கேட்டார்கள். இப்படி நான் போட்ட ஒரு கேள்வியைத் தவறாகத் திருத்தியதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனி யாவது நல்லமுறையில் திருத்தி அமைக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் கனம் அங்கத்தினர் எதை மனதில் வைத்துக்கொண்டு கேட்டார்களோ, அதற்கு பதில் கொடுத்திருக்கிறேன். 'இந்த ஆண்டு இறுதிக்குள் அது உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்று. கனம் அங்கத் தினர் எவ்விதம் கேள்வி கேட்டபொழுதும் கூட, இதையும் சேர்த்து பதிலில் கொடுத்திருக்கிறேன்.





### மிருக வைத்தியக் கல்லூரி

*135 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தமிழகத்தில் மிருக வைத்தியக் கல்லூரி திறுவும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) There is already one Veterinary College at Madras. There is no proposal at present to open another in the State.

(b) Does not arise.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள மிருக வைத்தியக் கல்லூரிகளில் எவ்வளவு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ? இந்த ஆண்டு எவ்வளவு பேர் விண்ணப்பித்தார்கள் ? எவ்வளவு பேர்களுக்கு இடம் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இருக்கிற காலேஜ்களில் இருக்கிற இடங்களின் எண்ணிக்கை தெரியாது. எவ்வளவு விண் ணப்பங்கள் வந்துள்ளன என்ற விவரம் இப்போது என்னிடம் இல்லை. இந்த வருஷம் 132 காண்டிடேட்ஸ் ஸெலக்ஷன் ஆகியிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன் : புதியதாக, நான்கு மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு புதிய யுனிவர்ஸிடி திறக்கப்படுவதினால் அந்த யுனிவர்ஸிடி 'ஸெல்ப்-கண்டைன்டு' ஆக இருக்கும் வகையில், இந்த நான்கு மாவட்டங்களில் ஒரு மாவட்டத்தில் இந்தக் கால் நடைக் கல்லூரியை ஆரம்பிப்பதற்குச் சர்க்காருக்கு யோசனை உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன்: At present there is no such proposal. இப்பொழுது அப்படிப்பட்ட 'ப்ரபோஸல்' இல்லை. பின்னால் அரசாங்கம் அதைப்பற்றிக் கவனிக்கும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : வேறு ஒரு மிருக வைத்தியக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படாவிட்டாலும், இருக்கிற கல்லூரியில் இடங்களை அதிகப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குத் தனியாக ஒரு கேள்வி போட வேண்டும்.

### பள்ளத்தூரிலுள்ள கால்நடைப் பண்ணை

*136 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பள்ளத்தூர் (செட்டிநாடு) கால்நடைப் பண்ணையில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை என்ன ?

[9th August 1965

(இ) அதற்காக ஆண்டு தோறும் ஆகும் மொத்தச் செலவு என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (i) One thousand three hundred and thirty-nine 1,339 cattle and seven hundred and forty-eight (748) sheep were maintained at the Ramanathapuram District Livestock Farm as on 31st March 1965.

(ii) A sum of rupees eight lakhs seventy-four thousand two hundred and ninety-nine (Rs. 8,74,299) and a sum of rupees eight lakhs seventy-four thousand nine hundred and eleven (Rs. 8,74,911) were spent towards the maintenance of cattle in the Farm during 1963-64 and 1964-65 respectively. A sum of rupees eighteen thousand one hundred and ninety-one (Rs. 18,191) and a sum of rupees nineteen thousand and forty-nine (Rs. 19,049) were spent towards the maintenance of sheep during 1963-64 and 1964-65 respectively.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, அந்தப் பண்ணையில் உள்ள கால்நடைகளுக்குத் தீனி வாங்குவதற்கு ஆண்டு தோறும் ஆகிற செலவுகளை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு மொத்தத்தில் சொன்னேன். 1963-64-ல், 1964-65-ல் தீனிக்கு, இதரச் செலவுகளுக்கு, மருந்துக்கு, வேலை ஆட்களுக்கு எல்லாவற்றிற்கும் எவ்வளவு செலவு ஆகியிருக்கிறது என்று சேர்த்துத் தான் நான் சொன்னேன்.

**திரு. பி. முருகையன் :** நான் கேட்டது கால்நடைகளுக்குத் தீனைச் செலவு எவ்வளவு ஆகியிருக்கிறது என்று கேட்டேன். ஆனால், கேள்வியைத் திருத்தி அமைக்கும்பொழுது இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. தற்பொழுது அங்கு இருக்கிற கன்டிராக்டருக்கும், அங்கு இருக்கிற அதிகாரிகளுக்கும் ஏதோ சில உடன்படிக்கை இருக்கிற காரணத்தினால், அங்கே வண்டியையும் சேர்த்து எடை போடுகிறார்கள் வைக்கோலை நிறுக்கும்பொழுது என்று சொல்லப்படுகிறது. அதை அரசாங்கம் பரிசீலித்ததா? அந்த அதிகாரி வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டபொழுது, அவர் தொடர்ந்து அங்கேயே இருக்கவேண்டும் என்று மேற்படி கான்டிராக்டர் அதே அதிகாரியைத் தொடர்ந்து வேலைபார்க்க உத்தரவு வாங்கியதாகச் சொல்லப்பட்டதும் அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்ததா ? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் அவர்களுக்கு யார் சொன்னார்களோ தெரியாது. இருந்தாலும், அந்த வண்டி வந்தால் வைக்கோலோடு வருகிறது. அப்பொழுது வண்டியையும் வைக்கோலையும் சேர்த்து நிறுத்துவிட்டு, பிறகு தனியாக வண்டியை மட்டும் நிறுத்து, அதைக் கழித்துக்கொண்டு, வைக்கோலுக்கு என்ன விலை கொடுக்க வேண்டுமோ, அதைத் தான் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



9th August 1965]

**திரு. லவ. சங்கரன் :** ரூ. 8 லட்சம் செலவு என்று சொல்லப்படுகிறது. ரூ. 8 லட்சம் என்பதில் எந்தெந்த வகையில் செலவு என்பதை விவரமாகச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : The above maintenance charges include the cost of cattle feed, cost of ropes, cost of medicine etc., wages to regular and casual mazdoors and leave wages to regular mazdoors.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்நடைப் பண்ணையில் செலவழிக்கப்படுகிற தொகைக்கு ஏற்ப பலன் ஏற்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பலன் ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால் தான் இந்தப் பண்ணையை நாம் நீடித்து வைத்துக் கொண்டிருக்கிறோம்.

**ஓசூர் கால்நடைப் பண்ணையில் இறந்துபோன ஆடுகள்**

* 137 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :<br>
திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் உள்துறை<br>
திரு. செ. மாதவன் :

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓசூர் கால்நடைப் பண்ணையில் 1964 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் எத்தனை ஆடுகள் இறந்தன ?

(இ) 14—10—1964-ல் எத்தனை ஆடுகள் இறந்தன ?

(உ) ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

(எ) இறப்புக்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) to (d) A statement [a] is placed on the table of the House.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த அறிக்கையிலே 'பிஜோவிஸ்' மருந்துக்கு பதிலாக வேறு மருந்து கொடுக்கப்பட்டதால் மொத்தம் 202 ஆடுகள் இறந்துவிட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. மொத்த ஆடுகள் 413. ஆடுகள் இறந்தவுடனேயே டைரக்டருக்கு டெலிபோன் செய்யப்பட்டு, அங்கிருந்து பேராசிரியர் இந்தப் பண்ணைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்டுப் பண்ணை மேற்பார்வையாளருக்குச் சரியான மருந்து கொடுப்பதற்குக் கூடத் தெரியாதா ? இந்தப் பண்ணை இம்மாதிரி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இதை ஏன் அரசாங்கம் நீடித்து நடத்தவேண்டும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இங்கு பயிர்களுக்குத் தெளிக்க வேண்டிய பூச்சி மருந்தை ஆடுகளுக்குக் கொடுக்கவேண்டிய மருந்து என்று நினைத்து அவர்கள் தெரியாத்தனமாகக் கொடுத்து

[a] Printed as Appendix II at pages 551-552.

[9th August 1965

விட்டார்கள் இரண்டும் ஒரே ஸ்டோரில் இருந்ததால் அதைக் கவனியாது கொடுத்து விட்டார்கள். அதைக் கவனித்து அவர்களுக்குத் தக்க தண்டனை கொடுக்கவேண்டும் என்று சொல்லி, போர்டு மெம்பர் திரு. ராமகிருஷ்ணன், ஐ.ஸி.எஸ். அவர்களை அனுப்பி விசாரணை செய்து, நான்கு பேர்களை ஸஸ்பென்ஷனில் வைத்திருக்கிறோம், மேற்கொண்டு அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-00 a.m. **திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்பு, ராஜஸ்தான் ஆடுகளுக்கு, இதுமாதிரி நிலைமை ஏற்பட்டது. ஒரு மருந்துக்குப் பதிலாக இன்னொரு மருந்து கொடுப்பதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்கே இருக்கும் சூப்பரின்டென்டென்ட் பொறுப்போடு நடப்பார்கள் என்றுதான் நினைத்து உத்தரவுகள் போட்டிருக்கிறோம். ஆனால் சில சமயங்களில் சிப்பந்திகள் தவறாக நடந்து கொண்டு விடுகிறார்கள், அதற்காகத்தான், நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நடவடிக்கை எடுத்தால், இனிமேலாவது பயந்துகொண்டு நல்ல முறையில் நடப்பார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

**திரு. கரு. சிலைச்சாமி :** சார், இந்த ஹொசூர் கால்நடைப் பண்ணையைக் கால்நடை ஆபீசர் கவனிக்கிறாரா அல்லது சாதாரண சிப்பந்திகள் கவனிக்கிறார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒரு சூப்பரின்டென்டென்ட் இருக்கிறார், ஒரு அஸிஸ்டென்ட் வெடரினரி ஆபீசரும், சில சிப்பந்திகளும் இருக்கிறார்கள். ஸ்டோர் கீப்பர், அஸிஸ்டென்ட் வெடரினரி ஆபீசர் இவர்களுடைய அஜாக்கிரதையினால் இந்தமாதிரி ஏற்பட்டுவிட்டது. அதற்காகத்தான் அவரை சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறோம்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** சார், அந்த வெடரினரி அஸிஸ்டென்ட் படித்து பாஸ் செய்து விட்டு வந்தவரா அல்லது சிபாரிசின் பேரில் வேலைக்கு வந்தவரா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அவர் பாஸ் செய்தவர் என்பதோடு அல்லாமல், அந்நிய நாடுகளுக்கும் சென்று கற்று வந்திருக்கிறார். (சிரிப்பு)

**திரு. செ. மாதவன் :** இம்மாதிரியான கேஸை பொதுக் கணக்குக் குழு ஏற்கனவே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. இந்த மாதிரிக் கால்நடைகள் ஆகஸ்டு மாதம் செத்திருக்கின்றன, மறுபடியும் அக்டோபரில் செத்து இருக்கின்றன. இப்படித் தொடர்ந்து நடப்பதற்கு என்ன மூல காரணம் என்று அரசாங்கம் பரிசீலித்ததா ?



9th August 1965]

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆடுகள் வயிற்றில் வரும் கிருமிகளைக் கொல்வதற்காக "ஃபிநோதியஸின்" என்கிற மருந்து கொடுக்கப் படுகிறது. அதைக் கொடுப்பதற்குப் பதிலாக, பயிர்களுக்குத் தெளிக்கும் "ஃபைட்ரலின்" என்கிற மருந்தைக் கொடுத்ததன் காரணமாக, ஆடுகள் மயக்கம் அடைந்து செத்து விட்டன.

**திரு. சா. ராமசாமி :** தலைவர் அவர்களே, தவறான மருந்து கொடுக்கப் பட்டதால் 202 ஆடுகள் இறந்திருக்கின்றன. பயிருக்குத் தெளிக்கும் கிருமி நாசினியை ஆடுகளுக்கு உபயோகப்படுத்தியதால் என்றால், இந்த இரண்டு மருந்துகளும் ஒன்றாக வைக்கப் பட்டு இருந்தனவா, அல்லது வேறு எந்த வகையில் இந்தத் தவறு ஏற்பட்டது என்று அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஸ்டோரில் இந்தமாதிரி இரண்டு மருந்துகளையும் வைத்ததால் நடந்தது என்பதால் தான் அந்த சூப்பரின்டென்டு—மேலேயும் நடவடிக்கை எடுத்து அவருடைய எக்ஸ்பிளநேஷன் கேட்கப்பட்டிருக்கிறது. அவருடைய பிரமோஷன்கூட தடைசெய்யப் பட்டு பனிஷ்மெண்ட் கொடுத்திருக்கிறோம்.

*Cattle Farms for calves*

* 138 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal under consideration of the Government to open Cattle Farms for abandoned, neglected and ill-nourished calves in the State, particularly in Madras City ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI P. KAKKAN : (a) The answer is in the negative.

(b) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சங்கரன் :** இந்த மாதிரி கண்ணாவியை, கைவிடப் பட்ட கன்றுக் குட்டிகளை, கவனிப்பாரற்று இருக்கும் கன்றுகளைக் காப்பாற்ற ஜீவகாருண்யக் கமிட்டியார் பிஞ்சராபோல் வைத்திருப்பது போல, இந்தக் கன்றுகளுக்கும் ஏதாவது ஸ்தாபனத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** மிகவும் மோசமாக இருக்கும் கால்நடைகளை மேலும் கவனிப்பதைவிட, நல்ல கால்நடைகளை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது. இதிலே கவனம் செலுத்துவதை விட அந்தமாதிரியான நடவடிக்கையினால் நல்ல பலன் ஏற்படும் என்று செய்யப்படுகிறது.

[9th August 1965

திரு. கரு. சீமைச்சாமி : இந்தக் கால்நடைப் பண்ணையில், கூட்டுப் பண்ணையில் அரசாங்கத்திற்கு எந்த லாபமும் இல்லை என்பதும், நஷ்டம்தான் ஏற்படுகிறது என்பதும் தெரிந்திருந்தும், இதை ஏன் அரசாங்கம் நடத்த வேண்டும்? மேலும், மேலும் நஷ்டம் வரும் இப்பண்ணையை விட்டுவிட்டு அந்தந்த விவசாயிகளிடத்திலேயே பொறுப்பை விட்டால் நலமாக இருக்கும் என்பதால் அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் பண்ணைகளைப் பார்த்துவிட்டு, விவசாயிகளிடம் விட்டால் கால்நடைகள் அபிவிருத்தி ஏற்படுமா என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் தாங்களே நடத்துவதோடுகூட, சம்சாரிகளிடமும் மாடுகளை, ஆடுகளைக் கொடுத்து அபிவிருத்தி செய்யப்பாடுபடுகிறது.

*Cattle Farm in Madurai District*

* 139 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal under consideration of the Government to start a cattle-farm in the Madurai district; and

(b) if so, the details thereof ?

The Hon. Sri P. KAKKAN : (a) & (b) The Government of India propose to establish a cattle Farm for the Tharparker breed of cattle in this State during the Forth Five-Year Plan and they have consulted this Government on the availability of lands and other facilities for this purpose. The suitability of the lands available in Madurai district is also being considered in this respect.

(அ), (இ) நான்காவது திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் தார்பார்க்கர் வகை மாடுகளுக்காக கால் நடைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் கருதியுள்ளது. இதற்காக வேண்டிய நிலங்கள், ஏனைய வசதிகள் முதலியவற்றைக் குறித்து இம் மாநில அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் கலந்தாலோசித்துள்ளது. மதுரை மாவட்டத்தில் கிடைக்கிற நிலங்கள் இதற்குப் பொருத்தமானவையா என்பதும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**போலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக லஞ்சக் குற்றச்சாட்டுகள்**

* 140 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லஞ்சக் குற்றச் சாட்டுகளின்பேரில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய கைது செய்யப்பட்ட போலீஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்களில் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஒன்று.

(இ) ஒன்று.

(a) One.

(b) One.



9th August 1965]

திரு. கரு. சீமைச்சாமி : சார், எத்தனை போலீஸ் அதிகாரிகள் லஞ்சக் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டார்கள் ? நிரூபிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்கள் அவர்களில் எத்தனை பேர்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒருவர் தான் உடனடியாகக் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். எத்தனை பேர்கள் என்கிற தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. செ. மாதவன் : லஞ்சக் குற்றத்தில் சப்-இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் கான்ஸ்டபிள், ஹெட் கான்ஸ்டபிள் போன்றவர்கள் அதிகமாக இருக்கிறார்களா அல்லது கெஜடட் ராங்கில் அதிகமாக இருக்கிறார்களா என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ம. கமலநாதன் : சார், இந்த லஞ்சக் குற்றங்களைப் போலீஸ்காரர்களைக் கொண்டே கண்டு பிடிப்பதால், அதிகமான குற்றங்களைக் கண்டுபிடிக்க இயலாத நிலைமை இருக்கிறது என்று சொல்லுவது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : உண்மையில்லை என்பதைத் தெரிவிக்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தத் தண்டனை பெற்ற ஒரு அதிகாரி போலீஸ் சூப்பிரின்டென்டா அல்லது சப்-இன்ஸ்பெக்டரா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : சப்-இன்ஸ்பெக்டர்.

*Registration of Ceylon Repatriates*

* 141 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of families registered as repatriates from Ceylon so far ; and

(b) the details of concessions granted to such families for rehabilitation ?

The Hon. Sri V. RAMAIAH : (a) (i) Number of persons registered as repatriates in Thanjavur, Madurai and Ramanathapuram district—5,975.

(ii) Number of families registered in other districts—13,889.

(b) (1) *Madurai district.*—Three children of Ceylon repatriates were granted boarding expenses during 1963-64 and two children during 1964-65.

(2) *Ramanathapuram district*—

(i) Two children were granted boarding expenses during 1963-64 and 1964-65 ;

(ii) A sum of Rs. 5,000 was allotted for the year 1964-65 for granting loan to artisan repatriates.

[9th August 1965

(3) *Tirunelveli district*—

(i) A sum of Rs. 15,000 was distributed to artisan repatriates as loan for 1963–64 and a sum of Rs. 16,000 was allotted for 1964–65.

(ii) During 1963–64, a sum of Rs. 58,729 was spent for grant of residential scholarships to the children of repatriates studying in Post and Pre-Matric courses and also professional courses. During 1964–65, a sum of Rs. 57,300 has been spent.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** சார், இலங்கையிலிருந்து திரும்பக் கூடியவர்களை, அவ்வப்பொழுது பதிவு செய்யக் கூடிய பொறுப்பு யாரிடத்தில் இருக்கிறது? இது வரையிலும் திரும்பி வந்திருக்கிறவர்கள் எத்தனை பேர்கள் என்று ஜில்லாவாரியாக தகவல் கொடுக்க முடியுமா?

**கனம் திரு. வெ. ராமையா :** சற்றுமுன் தான் ஜில்லாவாரியாகத் தகவல் கொடுத்தேன்.

| | |
|---|---|
| (*a*) (*i*) Numer of persons registered as repatriates in Thanjavur, Madurai and Ramanathapuram district ... ... | 5,975 |
| (*ii*) Number of families registered in other districts ... ... ... ... | 13,889 |

இவர்கள் அந்தந்த கலெக்டர் ஆபீசில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத்தலைவர் அவர்களே, வரும் ஆண்டில் எவ்வளவு குடும்பங்கள் வரக்கூடும் என்று அரசு எதிர்பார்க்கிறது? அவர்களுக்காக எடுக்கப்பட்டிருக்கிற முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகள் என்ன?

**கனம் திரு. வெ. ராமையா :** இலங்கையிலிருந்து எத்தனை பேர்கள் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடிய நிலையில் நாம் இன்னும் இல்லை.

**திரு. செ. மாதவன் :** இலங்கையில் புதிய அரசாங்கம் தோன்றிய பிற்பாடு எவ்வளவு நாளுக்கு ஒரு முறை, எவ்வளவு மக்கள் அனுப்பப்படுவார்கள் என்ற விவரம் தெரியுமா? அவர்கள் அங்கிருந்து வரும்போது அவர்களுடன் எவ்வளவு தொகை கொண்டுவர முடியும் என்பது பற்றியும் புதிய ஏற்பாடு ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா :** சமீபத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு, அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இலங்கையிலிருந்து வரக்கூடிய தமிழர்கள் தேயிலை உற்பத்தியில் நல்ல பயிற்சி உள்ளவர்களாதலால், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் வாழ்வதற்கு அவர்களுக்கு இடம் அளித்து ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது பரிசீலனை செய்யுமா?



9th August 1965]

**கனம் திரு. வெ. ராமையா :** இதுவரை வந்தவர்களுக்கு என்ன செய்தோம் என்ற கேள்விக்குப் பதிலளித்தேன். இனிமேல் வரக்கூடியவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பதை முன்கூட்டியே ஆலோசனை செய்யும்போது, தேயிலைத் தோட்டங்கள் புதிதாக ஏற்படுத்த முடியுமா என்பதும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இலங்கையிலிருந்து வரக்கூடியவர்களின் எண்ணிக்கை ஐந்தரை லட்சம் என்றும், அவர்கள் பதினைந்து ஆண்டு இடைவெளியில் ஆண்டொன்றுக்கு 36 ஆயிரம் மக்கள் வீதம் அனுப்பப்படுவார்கள் என்றும் சொல்லப்படுகிறதே, அதுபற்றி நிலைமை என்ன?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏற்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தத்தைப்பற்றிச் சொன்னார்கள். அந்த ஒப்பந்தம் நடைமுறையில் வருவதற்கு வேண்டிய பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

**திரு. வை. சங்கரன் :** இலங்கையிலிருந்து வரக்கூடியவர்கள் அங்கே என்ன தொழில்களை நடத்திப் பழக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரங்கள் சேகரித்துக் கூடுமானவரை அந்தத் தொழில்களிலேயே அவர்களை இங்கே அமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கையைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளுமா?

**கனம் திரு. வெ. ராமையா :** கலெக்டர் ஆபீசில் ரிஜிஸ்டர் செய்யும்போது, அவர்கள் அங்கே என்ன தொழில் செய்தார்கள் என்ற விவரங்கள் கொடுக்கிறார்கள். கூடுமானவரை அதே தொழில்களை இங்கே நடத்துவதற்கு உதவி கொடுக்க முடிந்தால் அதையும் அரசாங்கம் கவனிக்கும்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இந்த நாட்டில் ஆரம்பிக்கக் கூடிய சிறு தொழில்களுக்கு லைசென்ஸ், பர்மிட் வழங்குகிறபோது, இங்கேயே சில காலம் தொழில் நடத்தி வந்தவர்களுக்குத்தான் அந்தச் சலுகை இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அந்த நிலையில், சிலோனில் இதே தொழிலை மேற்கொண்டிருந்து இங்கே வந்தால் காலக் கெடு தடங்கலாக இருக்குமா? இது போன்று லைசென்ஸ், பர்மிட் பெற அத்தகைய காரியங்களில் சலுகை காட்ட அவர்களுக்கும் அது பொருந்தும்படியாகச் செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அல்லது எடுக்க உத்தேசித்திருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமையா :** அரசாங்கம் கடனோ மற்ற உதவிகளோ செய்யும்போது இலங்கையிலிருந்து வருகிறவர்களுக்கும் அங்கீகாரம் கொடுத்து உதவி செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** இலங்கை, பர்மாவிலிருந்து வரக்கூடியவர்களுக்குத் தமிழகத்தில் இடம் இல்லாதபோது, வட மாநிலங்களிலும் அவர்களைக் குடியேற்ற வேண்டும் என்ற ஒரு கருத்து பரிசீலிக்கப்பட்டதா? அதனுடைய முடிவு என்ன?

[9th August 1965

**கனம் திரு. வெ. ராமையா :** ஒப்பந்தம் ஏற்படும்போது, சிலோனிலிருந்து வரக்கூடிய எல்லோரையும் தமிழகத்திலேயே 'ஸெட்டில்' செய்வது கஷ்டம் என்ற காரணத்திற்காக, இந்த நாட்டின் பிரதம அமைச்சர் அவர்கள் இதை ஒரு தேசியப் பிரச்னையாக ஏற்றுக்கொள்ளவேண்டும், மற்ற மாநிலங்களும் இவர்களை எடுத்துக்கொள்வதற்கு உதவி செய்யவேண்டும் என்ற கோரிக்கையைக் விடுத்திருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** இந்த மாதிரி இலங்கையிலிருந்து வருகிறவர்களுடைய தொகை கணிக்கப்பட்டு, அவர்களுடைய கல்வி முதலியவற்றிற்கு மட்டுமின்றி, வீடு, வாழ்க்கைக்கு வேண்டிய பிற தொழிற் துறை முயற்சிகள், இவற்றில் உதவி வேண்டியவர்கட்கு எல்லாம் ஒரு கணக்கெடுத்து, அந்தக் கணக்கின் அடிப்படையிலே இப்பொழுது அரசாங்கம் உதவியோ அல்லது வாய்ப்பு வசதியோ செய்துகொண்டிருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** செய்துகொண்டிருக்கிறது. கல்வித் துறையில் மட்டுமல்ல ; அவர்கள் தொழில் நடத்துவதற்கும் பிற கடனுதவியும் கொடுக்கிறது. அங்கிருந்து திரும்பி வந்திருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கக் கூடிய முறையிலே நாஸரேத்தில் ஒரு ஸ்பின்னிங் மில்லை ஆரம்பம் செய்திருக்கிறார்கள். இன்னும் மற்ற, மற்ற உதவிகளும் கொடுக்கப்படுகின்றன. அங்கிருந்து திரும்பக்கூடியவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களாக இருந்தால், அவர்களுக்கு இராமநாதபுரம் ஜில்லாவில் தென்னை வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் தென்னை வளர்க்க மானிய உதவி கொடுப்பதோடு, ஐந்து ஏக்கர் நிலமும் கொடுக்கிறோம்.

### *Electrification of new Rail Lines*

* 142 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the State Government have requested the Union Government for electrification of new rail lines in the State during the Fourth Five-Year Plan period; and

(*b*) If so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Yes; the State Government have requested the Government of India for electrification of the railway lines from Madras to Arkonam and from Madras to Vijayawada in that order of priority during the Fourth Plan period. The Government of India have indicated that project investigations are being made by the Railway.

**திரு. சா. கணேசன் :** இந்த மாதிரி இவ்வளவு நீளத்திற்கு எலெக்ட்ரிக் ட்ரெயின்ஸ் விடுவதனால், இப்பொழுது இருந்து கொண்டிருக்கிற மின்சாரப் பற்றாக்குறை மேலும் அதிகப்படக் கூடுமானால் அப்பொழுது அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ? அதற்காக டீஸல் முறையையோ அல்லது வேறு முறையையோ கைக்கொள்ளுவதற்குத் திட்டம் போட்டு



9th August 1965]

அந்த அடிப்படையில் இது சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா ? இப்பொழுது சிபார்சு செய்யப்பட்டு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதே, அந்த ஆலோசனை என்ன நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** போக்குவரத்துத் தேவையை அனுசரித்து இந்த செக்ஷனிலே மின்சாரம் பொருத்துவது நல்லதா டீஸல் இன்ஜின் ஓட்டுவது நல்லதா என்றெல்லாம் பரிசிலனை செய்து முடிவு எடுக்கவேண்டும். அதெல்லாம் இன்வெஸ்டிகேஷனில் இருந்துகொண்டிருக்கிறது. மின்சாரம் போதாவிட்டால் அதை அதிகப்படுத்த வேண்டியதுதான்.

### சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வரை இரட்டை இரயில்பாதை

* 143 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து விழுப்புரம், திருச்சிராப்பள்ளி வரை இரட்டை இரயில் பாதை ( Double line ) போடும் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படி இம்மாநில அரசு மத்திய அரசாங்கத்திடம் சிபாரிசு செய்ய உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) No. However, to meet the growing industrial needs, the laying of a new broad gauge line from Villupuram to Chingleput and Arkonam and conversion of the Tiruchirappalli–Villupuram metre gauge line to broad gauge is being suggested to the Government of India for inclusion in the Fourth Plan.

**திரு. ஆ. தங்கவேலு :** தலைவர் அவர்களே, டபிள் லைன் இல்லாத காரணத்தால் கால தாமதம் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து, அதைத் தவிர்ப்பதற்காவது டபிள் லைன் ஏற்படுத்த இனியாவது முயற்சிப்பார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுதிருக்கக்கூடிய முயற்சியெல்லாம், இருக்கக்கூடிய மீட்டர் கேஜ் லைனை ப்ராட் கேஜாக மாற்றவேண்டும் என்பதுதான்.

**திரு. செ. மாதவன் :** இந்த ரயில்கள் தாம்பரத்திற்கு வந்து, அங்கிருந்து எழும்பூருக்கு வருவதற்கு மிகக் கால தாமதம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் இரட்டை லைன் இல்லாதது தான். தாம்பரம் வரையிலாவது டபிள் லைன் போட அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுது அது பரிசீலனையில் இல்லை.

[9th August 1965

*Economy in the use of cement*

* 141. *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have received any request from Union Government for taking steps to economise the use of the available cement; and

(*b*) if so, the action taken ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The suggestions of the Government of India are under examination.

**மாவட்டங்களில் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள்**

* 145 கேள்வி.—திரு. கி. நாராயணசாமிபிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள் திறக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் ஏதேனும் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :
(*a*) No.
(*b*) Does not arise.

**பிரதம சுகாதார நிலையங்களைத் தொடங்குதல்**

* 146 கேள்வி.—திரு. கி. நாராயணசாமிபிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-66-ல் எத்தனை பிரதம சுகாதார நிலையங்கள் தொடங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : 120 Primary Health Centres.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஒரு பஞ்சாயத்து யூனியனில் ஒன்றிரண்டு ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு மேல் ஆரம்பிக்கக் கூடாது என்று. . . .

கனம் சபாநாயகர் : ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் தான்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் தான் கொடுக்கப்படும்.



9th August 1965]

திரு. ம. கமலநாதன் : ஆரம்பிக்கப்படவிருக்கும் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்ஸரிக்குக் கட்டட வசதி அளிக்கப்படுகிறதா ? கட்டடம் ஏதாவது கொடுத்தால் அங்கே இது ஆரம்பிக்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாக்டர் இருப்பதற்கும் நல்ல வசதியுள்ள கட்டடமாகக் கொடுத்தால் அத்தகைய இடங்களில் ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இதுவரை ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் எத்தனை கட்டப்பட்டிருக்கின்றன என்ற கணக்கை அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். இனி எத்தனை கட்டப்பட வேண்டும் என்று தெரிவிப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஒவ்வொரு ப்ளாக்குக்கும் ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் கொடுக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம். இன்றைக்கு இருப்பது 156 ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள்.

**மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் நீராவி சலவைச்சாலை**

* 147 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் Steam Laundry வைக்க உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால் எப்போது முதல் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) 1965-66-ல் மதுரை அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனையில் நீராவிச் சலவைச் சாலை ( Steam Laundry ) ஒன்றை அமைக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அது குறித்த வேலை இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

திரு. வை. சங்கரன் : அதன் மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதன் மதிப்பீடு 33,750 ரூபாய்.

**சிவில் நீதிமன்ற பிராஸஸ் சர்வர்கள்**

* 148 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவில் கோர்ட் பிராஸஸ் சர்வர்களிடமிருந்து உத்தியோக உயர்வு, பிரயாணப்படி ஆகியவை சம்பந்தமாக நமது மாநில அரசாங்கத்திற்கு அண்மையில் கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளனவா ?

[9th August 1965

(இ) ஆம் எனில், அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** (அ) ஆம்.

(இ) இக் கோரிக்கைகள் கவனமாக ஆலோசித்துப் பார்த்த பின்னர் நிராகரிக்கப்பட்டன.

**திரு. செ. மாதவன் :** கோர்ட் பிராஸஸ் சர்வர்களிடமிருந்து நீண்ட நாட்களாக இந்த கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் மீது இருக்கிற லஞ்சப் புகார்களைக் குறைப்பதற்கு இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வது அவசியமில்லையா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய லஞ்சப் புகார்கள் சம்பந்தமாக என்னிடத்தில் தகவல் இல்லை.

### பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் தாயகம் திரும்புவர்களுக்கு தேயிலைத் தோட்ட வேலை

* 149 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் திரும்பும் தமிழர்களுக்கு தேயிலைத் தோட்டம் போட்டுக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** (அ) & (இ) தேயிலை, காப்பி, ரப்பர் போன்ற சில மலைத்தோட்டப் பயிர்களுக்கு காடுகளிலும், காடுகளுக்கு புறம்பாக உள்ள பகுதிகளிலும் ஏற்ற இடங்கள் உள்ளனவா என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. போதுமான பரப்பளவு நிலங்கள் இருக்குமேயாளுல் 4-வது திட்டக் காலத்தில் தேயிலை, காப்பி வேறு சில மலைத்தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம் பர்மா, இலங்கை அகதிகளுக்கு வேலை வசதி தரும் திட்டம் ஒன்று வகுக்க முடியும். இதற்காக ஒரு வன உதவிப் பாதுகாவலரையும், தேவையான துணை அலுவலர்களையும் கொண்ட ஆய்வுக்குழு ஒன்று 1—4—1965-ல் இருந்து நியமிக்கப்பட்டுள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேயிலை, காப்பி, வேறு சில மலைத்தோட்டப் பயிர்களைச் சாகுபடி செய்யத் தோட்டம் அமைக்கப்படும் என்ருர்கள். பர்மா, இலங்கை இந் நாடுகளில் இருந்து வருகிற தமிழர்களுக்கு உடனடியாக வாழ்வளிக்க இந்தத் தோட்டங்கள் அமைக்கப்படுமா ? நான்காவது திட்டத்தில் அமைக்கப்படும் என்ருல் அதுவரை அவர்கள் எப்படி வாழ்வார்கள் ?



9th August 1965]

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** தேயிலை, காப்பி பயிரிடக்கூடிய இடங்கள் எங்கே இருக்கின்றன என்று பார்த்துத்தான் முடிவு செய்ய முடியும்.

### நீதித்துறையில் லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிக்கத் தனி நிறுவனம்

* 150 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீதித்துறையில் லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க தனி நிறுவனம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIYAR : (*a*) & (*b*) A special officer in the rank of District Magistrate is in-charge of Vigilance Cell constituted in the High Court. He is assisted by specially selected Police personnel with experience in Vigilance and Anti-Corruption.

**திரு. செ. மாதவன் :** இந்த விஜிலன்ஸ் செல்லை திறப்பதற்கு முன்னல் உயர்நீதி மன்றத்திடம் இந்த அரசாங்கம் ஏதேனும் கருத்துத் தெரிவித்ததா ? இந்தத் துறையை ஏற்படுத்துவதற்கு அவர்கள் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்திருக்கிருர்கள் ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** இந்த மாதிரி விஷயங்களில் உயர்நீதி மன்ற யோசனை கேட்கப்பட்டுத் தான் காரியங்கள் செய்யப்படும்.

### சேலம் சப்-ஜெயில் கைதியின் தற்கொலை

* 151 **கேள்வி.—திரு. எம். எஸ். மணி :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு மார்ச் திங்களில் சேலம் சப்-ஜெயிலில் யாரோ ஒரு கைதி தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து விட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) சிறையிலிருந்த கைதி எக்காரணத்திற்காகத் தற்கொலை செய்துகொண்டார் எனக் குறிப்பிட வெளிப்படையான சான்று எதுவும் இல்லை.

**திரு. செ. மாதவன் :** ஏன் இறந்தார் என்பதை எப்படிப் பரிசீலித்தார்கள் ? டாக்டர் அறுவைச் சிகிச்சை செய்திருப்பாரே, அதில் கண்ட உண்மை என்ன ?

[9th August 1965

**கனம் திரு. கோ. பூவராகன் :** அவர் தற்கொலை செய்து கொண்டார் என்பது தான் முடிவு.

**திரு. சா. கணேசன் :** அவர் எதற்காக இறந்தார் என்பதைக் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் எப்படி இறந்தார் என்பதைக் கண்டு பிடித்திருப்பார்களே.

**கனம் சபாநாயகர் :** எதற்காக, எப்படி என்றால் ?

**திரு. சா. கணேசன் :** அவர் வயிற்று வலி காரணமாக இறந்தாரா அல்லது வேறு என்ன காரணத்தினால் இறந்தார் என்று சொல்ல முடியாமல் இருக்கலாம். ஆனால் அடித்து உதைக்கப்பட்டு இறந்தாரா? தற்கொலை செய்து கொண்டு இறந்தாரா என்பது கண்டுபிடிக்கப்பட்டு இருக்குமே. ஆக, இறந்ததற்குக் காரணம் தெரியாவிட்டாலும், இறந்த தன்மை என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தார் என்பது முடிவு.

### மத்திய சிறைச்சாலை வார்டர்கள்

* 152 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மத்திய சிறைச்சாலையிலுள்ள வார்டர்களின் வேலைப் பளுவைக் குறைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இல்லை.

**திரு. ஆ. தங்கவேலு :** கனம் அவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலையில் உள்ள வார்டர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருப்பதனால் ஓய்வு அதிகம் இல்லாமல் ஜன்ம தண்டனை அளிக்கப்பட்டவர்களைப் போல அவதிப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு வேலை நேரத்தை இனியாகிலும் குறைக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** தேசீய நெருக்கடி காரணமாக அதைப் பரிசீலனை செய்வதாக இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மத்திய சிறைச்சாலையில் உள்ள வார்டர்களுக்கு 8 மணி நேர வேலை என்பது சேலம் சிறைச்சாலை மட்டும் தான் அமுலில் இருக்கிறது. மற்ற சிறைச்சாலைகளிலும் இது அமுல் செய்யப்படுமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அது தான் மூலக் கேள்விக்கான என்னுடைய பதிலில் இப்போது அம்மாதிரி செய்வதாக இல்லை என்று சொன்னேன்.



9th August 1965]

### நகரசபைப் பொருட்காட்சி, மதுரை

* 153 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965-ல் மதுரை நகரசபை பொருட்காட்சி நடத்தியதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஆம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** பொருட்காட்சி நடத்துவதற்கு மதுரை நகரசபைக்கு எவ்வளவு செலவாயிற்று, வரவு எவ்வளவு, அதில் லாபம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஆடிட் ரிப்போர்ட் வந்த பிறகு தான் அதைப் பற்றிய விவரம் சொல்ல முடியும்.

### சிவகெங்கை பஞ்சாயத்து யூனியன் அலுவலகம்

* 154 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவகெங்கை பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்காக எவ்வளவு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்.

(இ) நஷ்ட ஈடு அளிப்பதற்காக ரூ. 18,000 அனுமதிக்கும்படி மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். விரைவில் இத்தொகையை அனுமதித்து ஆணைகள் வெளியிடப்படும். இதற்காக நிதி வகைசெய்யப்பட்டவுடன், நில ஆர்ஜித அதிகாரி தீர்ப்புக் கூறி, அத் தொகையை வழங்குவார்.

**திரு. கரு. சீமைச்சாமி :** பஞ்சாயத்து யூனியன் கட்டடம் கட்டப்பட்டு ஐந்து வருஷம் ஆகிறது. அந்தக் கட்டடம் கட்ட நிலம் கொடுத்தவருக்கு இதுவரை பணம் கொடுக்கப்படவில்லை. கூடிய சீக்கிரம் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே சர்க்காரின் சாங்ஷனுக்கு வரவில்லை. சர்க்கார் சாங்ஷன் ஆன பிறகு நில ஆர்ஜித அதிகாரி அவார்டு பாஸ் செய்து அந்தப் பணத்தைக் கொடுத்து விடுவார்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ரெவின்யூ அதிகாரிக்கும், நில ஆர்ஜித அதிகாரிக்கும் நிலத்தின் மதிப்பீடு சம்பந்தமாகத் தகராறு இருப்பதாகச் சொல்லப்பட்டது. அது தான் தாமதத்திற்கும் காரணம் என்று அறிகிறேன். உடனடியாக நிலத்தின் கிரயத்தையும், அதற்கான வட்டியையும் சேர்த்துக் கொடுக்க உத்தரவு போடுவார்களா ?

[9th August 1965

கனம் திரு. சே.ம.அ. மஜீத் : கனம் அங்கத்தினர் சொல்வது போலத் தகராறு எதுவும் இல்லை. நிலத்தின் மதிப்பு, நான்கு சதவிகிதம் வருட வட்டி எல்லாம் சேர்த்துத்தான் 18 ஆயிரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்று சொன்னேன்.

### பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடங்களைக் கட்டுதல்

* 155 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் முடிய பஞ்சாயத்து யூனியன்களுக்காக கட்டப்பட்டிருக்கும் அலுவலகக் கட்டடங்களின் எண்ணிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 266

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterish at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ANNOUNCEMENT.

### THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL, 1965.

MR. SPEAKER : The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1965, introduced in the House the other day is a short Bill giving extension to the existing enactment. It was not discussed in the Business Advisory Committee. The other day the hon. Leader of the Opposition raised a question regarding that. This is a short Bill which has to be taken into consideration to-morrow or the day after. I want to know the sense of the House. Because it is a short Bill, I think we can waive notice, admit and take the Bill into consideration to-morrow or the day after. The other Bill, namely, the Madras Medical Practitioners Bill, 1965, is going to be referred to a Select Committee, I think. It may not come up for discussion at this session. I want to know the sense of the House. (After a pause) I think the House has no objection to take the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1955; for consideration to-morrow or the day after.

Now we shall pass on to the next item.

## III.—CALLING ATTENTION TO THE INCIDENCE OF LATE BLIGHT DISEASE IN THE NILGIRIS DISTRICT.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற விதி 41-இன் கீழ், "நீலகிரி மாவட்டத்தில்: உருளைக் கிழங்கு கருகல் நோய் ஏற்பட்டு உருளைக் கிழங்குப் பயிர்கள் பலன்



9th August 1965] [திரு. ஜே. மாதா கவுடர்]

தராமை—பருவ மழை பொய்த்தல்—உருளைக்கிழங்கு பயிரிடுவோரின் இன்னல்கள்" ஆகியவைப்பற்றி கனம் உள்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement :— 9-30 a.m.

*Potato Crop*.—(*i*) The incidence of Late Blight was comparatively mild this year. There was no incidence of Late Blight in the irrigated crop of potatoes. Stray case of incidence of Late Blight has been reported in the main crop. The intensity of the late blight is reported to be about 5 to 8 per cent in the main crop as revealed by on the spot inspection of the crop in the villages by the Special District Agricultural Officer.

(*ii*) The reason for low incidence is the timely action taken by the extension workers of the Agricultural Department. The agriculturists were also advised to take up large scale prophylactic, spraying of the potato crop, with fungicides, viz., Diathene and Zineb. About 30 tons of fungicides were distributed at concessional rate at 50 per cent. There is adequate ready stock of the fungicides amounting to 13 tons for further distribution.

(*iii*) However, the total failure of the monsoon has adversely affected the main crop of potato crops in many villages. It is too early now to assess the damage caused on this account and the extent of damage caused thereof can be assessed only when the harvest begins.

*Tea crop*.—Details regarding tea crops will be obtained from the Tea Board and the matter will be looked into.

## IV.—PRESENTATION OF REPORTS—REPORTS OF THE COMMITTEE ON ESTIMATES ON— (i) STATE KHADI AND VILLAGE INDUSTRIES AND (ii) INDUSTRIAL ESTATES.

SRI K. S. SUBRAMANIA GOUNDER : Sir, I rise to present the Reports of the Committee on estimates on (i) the State Khadi and Village Industries and (ii) the Industrial Estates.

## V.—DRAFT OUTLINE OF THE FOURTH FIVE-YEAR PLAN—DISCUSSION—*cont*.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நகல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டில் ஜனநாயக சோஷலிசத்தை அமல் நடத்தவும், இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுடைய நிலையை உயர்த்த வேண்டுமென்றும், கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற கோடானகோடி மக்களுக்கு உண்ணுவதற்கு உணவும், உடுப்பதற்கு உடையும், இருப்பதற்கு இடமும் அவசியம் கொடுத்தாகவேண்டு

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [9th August 1965

மென்பதற்காகவும் ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய லட்சியத்தின் அடிப்படையிலே இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அமைந்திருக்கிறது.

முதலாவதாக, இந்த நாட்டிலே மக்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் நிமிஷத்திற்கு நிமிஷம் ஆண்டொன்றுக்குச் செத்தது போக ஒரு கோடியே பத்து லட்சம் என்ற அளவில், ஆஸ்திரேலியாவின் ஜனத்தொகை போன்று அதிகரித்துக்கொண்டு வரும் காரணத்தாலே எங்கெங்கெல்லாம் தரிசு நிலங்கள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் பயன்படுத்தி, எப்படியெப்படியெல்லாம் உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமோ அந்த அடிப்படையிலே உற்பத்திப் பெருக்குவதற்காக அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள் கொடுப்பதில், ஓரளவிற்கு அவர்கள் கேட்கும் அளவுக்குக் கொடுத்திருந்தபோதிலும் கூட, இந்த பம்பு செட்டுகளினுடைய விலையைக் காட்டிலும் சப்மெர்ஜிபிள் பம்புசெட்டுகளுடைய விலை அதிகமாக இருந்தாலும் கூட, இன்னும் அதிகமான அளவில் சப்மெர்ஜிபிள் பம்புசெட்டுகளை இன்ட்ரொடியூஸ் செய்து விவசாயிகளுக்கு அவற்றை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தால் நிச்சயமாக நிலைமை அபிவிருத்தியடையும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பம்ப் செட்டு வைக்க வேண்டுமென்றால் விவசாயிகள் இதற்காகக் கிணறு வெட்டவேண்டும்; ரூம் கட்டவேண்டும். இதைத்தவிர சப்மெர்ஜிபிள் பம்புசெட்டுகளுடைய ஸ்பேர் பார்ட்ஸ் இங்கே கிடைக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகையால், இந்த சப்மெர்ஜிபிள் பம்புசெட்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று 2 ஏகர், 3 ஏகர், 4 ஏகர் என்று கொஞ்சமாக நிலம் வைத்திருக்கிறவர்கள் நல்ல முறையிலே உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எந்த அளவிற்கு வழிவகை செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை பார்க்கும்பொழுது, அவர்களுக்கு தேவைப்படக் கூடிய அளவுக்குச் செய்துகொடுக்கவில்லையென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிறிய சிறிய நிலச்சுவான்தார்கள் வைத்திருக்கக்கூடிய நிலங்களை, 30 ஏகர், 40 ஏகர், 50 ஏகர் என்ற அளவிலே இணைத்து, மொத்தமாக ஒரு கிணறு அரசாங்கத்தின் சொந்தப் பொறுப்பிலேயே வெட்டி பாசன வசதியைக் கொடுத்தால், அதற்காக அவர்களிடமிருந்து தண்ணீர் தீர்வை கூட வசூல் பண்ணிக்கொள்ளலாம்—இன்னும் அதிகமான அளவுக்கு சிறிய சிறிய விவசாயிகள்கூட உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்பதையும், இது சிறு சிறு விவசாயிகளுக்கு அரசாங்கம் நல்ல ஊக்கத்தையும், ஆக்கத்தையும் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிளானில் புறம்போக்கு நிலத்திற்கு 50 கிணறுகள் வெட்டிக்கொடுக்கப்படும் என்று இருக்கிறது. அதே மாதிரி சிறிய சிறிய நிலச்சுவான்தார்களின் நிலங்களையும் ஒன்றாக இணைத்து, அவர்களும் உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அளவுக்கு கிணற்றுப் பாசனத்தைப் பெருக்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று வைகை, பெரி-



9th August 1965] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

யாறு போன்ற ஆறுகளின் தண்ணீரை எங்கள் மாவட்டத்தில் பாசன வசதிக்காகக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறோம். நான் வித்தியாசமாகச் சொல்கிறேன் என்று யாரும் ரொம்ப வருத்தம் அடையக்கூடாது. உபரித் தண்ணீர் எவ்வளவு வந்தாலும் அது ராமநாதபுரம் ஜில்லாவுக்கே போய்விடுகிறது. எங்கள் ஜில்லாவுக்கு அது கிடைப்பதில்லை. இதில் பாரபட்ச நிலைமை இருக்கிறது. ஆகவே, பெரியாறு, வைகை இவைகளுடைய உபரித் தண்ணீரை குறிப்பாக நிலக்கோட்டைத் தாலுகாவிற்குக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், நிலக்கோட்டைத் தாலுகாவை எடுத்துக் கொண்டால் அது மிகவும் வறண்ட பகுதி. பக்கத்திலே உள்ள சோழவந்தான் பார்ப்பதற்கு மிகவும் கண்ணுக்கு இனிமையாக இருக்கிறது. அங்கே பாசன வசதிகள் எல்லாம் சரியாக நடைபெறுகின்றன. ஆனால் நிலக்கோட்டை, பாலமேடு, வத்தலகுண்டு போன்ற இடங்களில் இன்றைக்கு முக்கால் பங்கு வறண்ட பகுதியாக இருக்கிறது. ஏதோ மழைத் தண்ணீர் கிடைத்தால் உண்டு. இல்லையென்றால், கிணறுகளில் கூடத் தண்ணீர் இல்லாமையால், உற்பத்தி பெருகமுடியாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. வைகையிலிருந்து ரிசர்வாயர் மூலம் தண்ணீர் கொண்டுபோகக் கூடிய திட்டத்தை இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே, அதையும் செய்யுங்கள், அத்துடன் அதை விரிவுபடுத்தி அணைப்பட்டியில் ஒரு ரிசர்வாயர் போட்டுத் தண்ணீரை இங்கே இருக்கின்ற 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் அந்தப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களினுடைய சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல முறை பல அங்கத்தினர்கள் இதைப்பற்றி இந்தச் சட்டமன்றத்திலே கூறியிருக்கிறார்கள். அதையொட்டி "காட்டில் (Cattle) இன்ஷூரன்ஸ், கிராப் இன்ஷூரன்ஸ்" என்று திட்டங்களைப் போட்டு இருக்கிறார்கள். இதைப்பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் இதை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்ததற்காக என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த "காட்டில் இன்ஷூரன்ஸ்", (குறுக்கீடு) இந்தத் திட்டத்தைப் படித்துப்பார்த்தால்தான் தெரியும், "காட்டில் (Cattle) இன்ஷூரன்சை" இன்னும் அதிகமாக விரிவு படுத்தியிருந்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். ஏனென்றால், ஏற்கனவே மாடுகளைப் பறிகொடுத்துவிட்டவர்களும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களையும் இதிலே சேர்த்துக் கொண்டு அவர்களும் பயன் அடைவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேகூட ஒவ்வொரு தாலூகாத் தலைநகரிலும் ஒரு தொழிற்பேட்டை வைக்கவேண்டுமென்று இருந்தது. இன்னும் எல்லாப் பகுதிகளிலும் அது அமைக்கப்படவில்லை. ஆகவே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் ஆண்டு, அல்லது இரண்டாவது ஆண்டிற்குள்ளேயாவது, எல்லாத் தாலூகா தலைநகரங்களிலும் தொழிற் பேட்டைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்

கொள்கிறேன். அதேபோன்று இந்த சுற்றுலா மாளிகைகளையும் எல்லாப் பகுதிகளிலும் . . . (மணியடிக்கப்பட்டது). நான் ஐந்து நிமிஷங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**கனம் சபாநாயகர்** : சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : எல்லாத் தாலூகாத் தலை நகரங்களிலும் சுற்றுலா மாளிகைகள் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், எல்லாத் தாலூகா தலைநகரங்களிலும் உள்ள ஆஸ்பத்திரிகளில் பலவிதமான வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று போட்டிருக்கிறது. இதற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் துரிதமாக இதற்காக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி குடிநீரைப் பொறுத்த அளவிலும், பல இடங்களில் காம்பாக்ட் ஸ்கிம் போட்டு இதன் மூலம் 3 மைல், 5 மைல் தூரத்தில் உள்ள இடங்களை எல்லாம் ஒன்றாக இணைத்து, 10, 15 கிராமங்களை ஒன்றாக இணைத்து, குடிநீர்த் திட்டத்தைப்போட்டு, எல்லோருக்கும் குடி தண்ணீர் வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோழவந்தானை எடுத்துக்கொண்டால் அங்கே 24 மணி நேரமும் தண்ணீர் வரவேண்டும். ஆனால் அங்கே கூடக் குடி தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. நிலக்கோட்டை, வத்தலகுண்டு போன்ற பகுதிகளுக்கு இந்த மஞ்சளாறு பகுதியிலே ஒரு பெரிய ரிசர்வாயர் கட்டி அதன்மூலம் தண்ணீரை குடிநீர் இல்லாத பகுதிகளுக்குக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டிலே மாத்திரம் 1 லட்சத்து 25 ஆயிரம் பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கல்லூரிகளில் சேருவதற்கு இடம் கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே, குறைந்தது ஒவ்வொரு தாலூகாவிலும் எங்கெங்கெல்லாம் 10 ஹைஸ்கூல்களுக்கு அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் ஒரு கல்லூரியை அரசாங்கக் கல்லூரியாகவோ, தனியார் கல்லூரியாகவோ ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வது நம்முடைய குழந்தைகள் மேல் படிப்பு படிக்க ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பதாக அமையும். எஞ்சினியரிங் காலேஜும், மெடிகல் காலேஜும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொன்றுவீதம் இருந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். எவ்வளவு டாக்டர்களை உற்பத்தி செய்தாலும் வேலை வாய்ப்புக் கிடைக்கும். எஞ்சினியர்களும் அதிகமாக இருந்தாலும் அவர்களை அயல்நாடுகளுக்கும், மற்றும் இதர மாகாணங்களுக்கும் அனுப்ப முடியும். கல்வித் துறையில் ஆரம்பக் கல்வியைப் பொறுத்தும், மதிய உணவுத் திட்டம் செயல் படுவது பற்றியும் அதற்கென்று தனியாக ஒரு பிரிவைப் போட்டால் கூட நலமாக இருக்கும். அந்த அடிப்படையில் பரிசீலனை





செய்து உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடிப்பவர்களுக்கு எதிலே ஆர்வம் இருக்கிறது என்று பார்த்து அந்தத் துறையிலே அவர்களை ஈடுபடுத்தவேண்டும் . . .(மணி அடிக்கப்பட்டது).

SRI K. S. SUBRAMANIA GOUNDER : Mr. Speaker, Sir, I move—

'Add at the end the following :—

"and on such consideration this House approves the draft outline of the Fourth Five-Year Plan".'

SRI M. D. THIAGARAJA PILLAI : Sir, I second the amendment.

**திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்** : கனம் சபாநாயகர் அவர்களே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே நம்முடைய ராஜ்ய அரசாங்கம் மிக நல்ல முறையில் ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். அகில இந்தியாவிலும் திட்டம் எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டுமென்பது பிரச்சினையாக இருந்தாலும் நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரை 750 கோடி ரூபாய் அளவுக்கு உள்ள ஒரு திட்டத்தை நம்மால் நிறைவேற்ற முடியுமா இல்லையா என்பதைத்தான் நாம் இப்போது ஆராயவேண்டும். நாம் சென்ற ஐந்தாண்டுத் திட்டங்களிலே எந்த அளவுக்குக் காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று பார்க்கும்போது நிச்சயமாக அந்த அளவுக்குக் குறைவு இல்லாத வகையிலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடித்துவிட முடியும் என்ற நம்பிக்கை இந்தச் சபையிலுள்ள எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கும் நிச்சயமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. திட்டமே வேண்டாம் என்று சொல்லக் கூடிய வாதம் நாட்டிலே இருப்பதாவது வியக்கத் தக்கதாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். திட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் நாட்டிலே அபிவிருத்திக்கான காரியங்களைச் செய்யத்தான் போகிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதை முன்கூட்டியே யோசித்துச் சொல்வதைத் திட்டம் என்று சொல்கிறோம். அந்த அளவிலே திட்டம் பெரிதாக இருந்தால்தான் சீக்கிரத்தில் அபிவிருத்தி அடைய முடியும்.

விவசாயத்தைப் பொறுத்தவரையிலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் தான் நாம் வெளிநாட்டிலிருந்து உணவு இறக்குமதி செய்வதை விட்டு, முதலிலே நம்முடைய சுய தேவையைப் பூர்த்தி செய்து, அதற்குப் பிறகு தேவைக்கு மேல் அதிகமாகச் செய்ய முடியும். நம்முடைய ராஜ்யத்தை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்ல முறையில் உணவு உற்பத்தியைச் செய்திருந்தாலும் இன்னும் அதிகமாகச் செய்ய வழி இருக்கிறது என்பதை மறந்து விட முடியாது. உணவு உற்பத்தியைப் பெருக்க ரசாயன உரங்கள் தேவை. அதிலே நைட்ரஜனும், சூப்பர் பாஸ்பேட்டும்

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [9th August 1965

அதிகமாகத் தேவைப்படுகிறது. இவை அதிகமாகக் கிடைப்பதில்லை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டுமென்றாலும் ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் (restrictions) அதிகமாக இருக்கின்றன. இப்போது உரத்தை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படாததன் காரணமாக, பின்னால் உணவுப் பொருள்களையே இறக்குமதி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. சூப்பர் பாஸ்பேட் பர்டிலைசர், நைட்ரஜன் பர்டிலைசர் எவ்வளவு தேவை என்பதைப் பார்த்து வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். நான்காவது திட்ட காலத்தில் இந்திய அளவிலே எவ்வளவு உரம் தேவை என்று பார்த்து அந்த உரத்தை உற்பத்தி செய்வதிலே நம்முடைய ராஜ்யம் மிகவும் முன்னணியில் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாயில் டெஸ்டிங் பொறுத்தவரையிலே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே பூரணமாக முடியுமென்று இருந்தாலும் பூரணமாகவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது பூரணமாக எல்லா இடங்களிலும் சாயில் டெஸ்டிங்கை முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிகமாக விவசாயத்திற்குத் தேவைப்படுவது நீர்ப்பாசன வசதி. நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய ஆறுகளின் தண்ணீரையெல்லாம் பயன்படுத்துவதற்கான திட்டங்களை நிறைவேற்றிவிட்டோம். கிருஷ்ணா-கோதாவரித் தண்ணீரை நான்காவது திட்ட காலத்தில் கொண்டு வருவதற்கு நம்முடைய அமைச்சரவை முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இது சுலபமான காரியமாக இல்லாவிட்டாலும் அண்டை ராஜ்யத்தோடு கலந்து பேசி, மத்திய சர்க்காரை வற்புறுத்தி சீக்கிரமாக இந்தத் தண்ணீர் தென் பகுதிக்கு வரும்படிச் செய்தால் உணவு உற்பத்தியை அதிகரிக்க உபயோகமாக இருக்கும். மேற்குப் பக்கத்தில் பாயும் நதிகளின் தண்ணீரையும் கேரள அரசாங்கத்தோடு பேசி நம்முடைய ராஜ்யத்திற்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யவேண்டும். அதிகமாக நாம் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே முயற்சி செய்ய வேண்டி இருப்பது 'சப்-சாயில்' வாட்டரை வைத்து எந்த அளவு விவசாயம் செய்ய முடியும் என்பதைப் பற்றித்தான். சாதாரணமான கிணறுகளை வெட்டினால் அதிலிருந்து அதிகமாகத் தண்ணீர் பாய்ச்ச முடிவதில்லை. மிக ஆழமான கிணறுகளை 'டீப் போர் செட்' வைத்து வெட்டினால் எல்லா இடங்களிலும் நல்ல முறையில் விவசாயம் செய்ய வசதியாக இருக்கும்.

சேலம் ஜில்லாவிலே மேட்டூர் வாய்க்கால் பள்ளிபாளையத்துடன் முடிந்திருக்கிறது. அதை ஜேடர்பாளையம் வரை விஸ்தரிக்க வேண்டும். மேட்டூரிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வரையில் எடுத்துக்கொண்டால் காவிரி அருகில் பாசன வசதி இல்லாதிருக்கும் இடம் இந்த 10, 15 இடங்கள்தான். அதில் தண்ணீர் பாய லெவல் சரியாக இருக்கிறது. அதற்கும் தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவில் ஏற்பாடு செய்யவேண்டும்.



9th August 1965] [திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]

ஜேடர்பாளையத்தில் உள்ள 'பெட் ரெகுலேட்டர்' நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பி.டபிள்யூ.டி. அமைச்சராக இருந்தபோது ஏற்படுத்தப்பட்டது. அதனால் சேலம் ஜில்லாவிலே விவசாயத்தை விஸ்தரிக்கக் கூடிய அளவிலே வசதி இருந்தும் செய்ய முடியாமல் இருக்கிறது. அதையும் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மெம்பர்கள் கேட்டுக் கொண்டது போல் கிராப் இன்ஷூரன்ஸ், கேட்டில் இன்ஷூரன்ஸ் திட்டங்களை நான்காவது திட்ட காலத்திலே மிக நல்ல முறையிலே விரிவாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயிகள் அதிகமாக விவசாயம் செய்ய சௌகரியமாக இருக்கும். சாதாரணமாக, விவசாயம் லாபகரமாக இருப்பதற்கு என்னென்ன வழிகளையெல்லாம் அனுசரித்துக் காரியங்களைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் ஹொகனெகல் திட்டத்தை சீக்கிரமாக அமல்படுத்தவேண்டும். அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் நல்ல முறையில் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். அதற்காகப் போட்டிருக்கக்கூடிய திட்டத்தை நிச்சயமாக அமலாக்கிவிட முடியும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. அதையும் சீக்கிரத்தில் செய்ய வேண்டும். கிராமங்களைப் பொறுத்தவரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்ல முறையில் நாம் இந்தத் துறையில் முன்னேறி இருக்கிறோம். நான்காவது திட்ட காலத்திலே கிராமங்களிலே இருக்கக்கூடிய எல்லா ஹாம்லெட்டுகளுக்கும் மின்சாரத்தைக் கொடுப்பது என்பது மாத்திரமல்லாமல் எல்லாக் கிணறுகளுக்கும் பம்ப் செட்டுக்கு மின்சாரத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் உண்மையிலேயே அது விவசாயத்திற்கு உகந்ததாக இருக்கும். கிராமங்களுக்கு ரன்னிங் வாட்டர் சப்ளை செய்யும் அளவிலே ஏற்பாடு இருக்கவேண்டும்.

சேலம் அயர்ன் அண்டு ஸ்டீல் பிளாண்டைப் பொறுத்த வரையில் நான்காவது திட்டத்தில் வந்து விடும் என்று சொன்னார்கள். சேலத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு இது மகிழ்ச்சிகரமான செய்தியாகும். இதற்கான ஏற்பாடுகளை எவ்வளவு துரிதமாகச் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு விரைவாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்வேயைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழகத்தில் எல்லா இடங்களிலும் பூரணமாக முடிந்து விட்டது என்று சொல்ல முடியாது. தொழில் வளர முக்கியமாக நமது நாட்டில் ஜியாலஜிகல் சர்வே டிடைல்டாக எல்லா இடங்களிலும் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் பல தொழில்களை ஆரம்பிக்க ஏதுவாக இருக்கும். ஜியாலஜிகல் சர்வேயைப் பூரணமாக இந்த

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [9th August 1965

நான்காவது திட்ட காலத்தில் செய்து முடித்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிமெண்ட் தொழிற்சாலைகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்ற காரணத்தால் அவற்றையும் அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு ப்ளாக்கிற்கு ஒரு இண்டஸ்ரியல் எஸ்டேட் என்ற அளவில் ஏற்பாடு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தால், நலம். அதை நிச்சயமாகச் செய்ய முடியும். அதை இப்போதே செய்வதாக இருந்தால் ஃபேஸ்ட் ப்ரோக்ராமாகப் போட்டு எந்த அளவில் செய்யவேண்டுமோ அந்த அளவில் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ராட்கேஜ் ரெயில்வே பாதை அமைக்கும் திட்டம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சேலம்-பங்களூருக்குப் புதிதாகப் போடுவதை மீட்டர் கேஜாகப் போட்டு பிறகு அதை ப்ராட்கேஜாகச் செய்வதற்குப் பதில் இப்போதே அதை ப்ராட்கேஜாகப் போட ஏற்பாடு செய்தால் அதுதான் உண்மையிலே சிக்கனமாகவும், லாபகரமாகவும் இருக்கும். அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மிக நல்லமுறையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று இந்தச் சபையைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: தகுதிமிக்க தலைவர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அவர்களால் இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற இந்த நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்களுடைய குறிப்பிலேயே இது முதல் குறிப்பு என்று கூறப்பட்டிருக்கிற காரணத்தினால் இன்னும் பல குறிப்புகள் பிறகு வரும் என்ற நம்பிக்கையில் இந்த விவாதத்தில் கலந்து கொள்கிற எங்கள் வாதங்களையும் நாங்கள் சொல்கிற கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு வரஇருக்கிற அவர்கள் குறிப்புகளிலே அதையும் இணைத்து நல்ல பல திட்டங்களை நிறைவேற்றித் தருவார்கள் என்று நம்புகிறேன். நம் முதல் அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தில் முதலாவதாக உணவு, உடை, கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் வசதி போன்றவற்றிற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் நிறைவேற்றப்படாது மீதியிருக்கிற வேலைகளையும் நான்காவது திட்டத்தில் நிறைவேற்றி விடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக நாட்டுக்குப் போடப்படுகிற இந்தத் திட்டங்களை, நாங்கள் தேவை இல்லை என்று குறிப்பிடுகிறவர்கள் அல்ல. ஒரு தனி மனிதன் வாழ்க்கைக்கே ஒரு திட்டம் அவசியந்தான். ஆனால் மனிதன் இப்படித்தான் வாழவேண்டுமென்று நிர்ணயித்துக் கொள்வது ஒரு திட்டம், எப்படிவேண்டுமானாலும் வாழலாம் என்பது ஒரு திட்டம். அதேபோல் சர்க்கார் எடுக்கிற காரியங்களை இப்படித்தான் செய்யவேண்டுமென்பது ஒரு திட்டம், எப்படியாவது நிறைவேற்றி விடலாம், எங்கேயிருந்தாவது கடன் வாங்கி



9th August 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

எதைச் செய்தாவது நிறைவேற்றி விடலாம் என்று போடுவது ஒரு திட்டம். இப்படித்தான் போடவேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறப்படுகிற திட்டம் நிச்சயமாக நிறைவேறும். எப்படிவேண்டுமானாலும் நிறைவேற்றி விடலாம் என்றால் அத்திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படுவது கிடையாது. மூன்று திட்டங்களின் முடிவுகளையும் பார்க்கிறபோது நம் நாட்டில் பெரும் முன்னேற்றத்தை அடைந்து வருகிறோம் என்று சொன்னாலும் இந்தத் திட்டங்களினால் நாட்டில் ஏற்பட்டிருக்கிற பலன்களைப் பார்க்கிறபோது நம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள், சராசரி நபர் வருமான உயர்வில் இந்த மாநிலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் திட்டங்களை நிறைவேற்றுவதில் கணிசமான அக்கறை காட்டப்பட்ட போதிலும் பொதுவான வாழ்க்கைத் தரம் இன்னும் குறைந்த நிலையிலேயே இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கிறபோது போடப்படுகிற திட்டங்கள், யாருடைய நலனுக்காகத் தீட்டப்படுகின்றனவோ அவர்களுடைய நிலை இன்னும் உயர்ந்தபாடில்லை. நிறைவேற்றுவதற்காகப் போடப்படுகிற திட்டங்கள் ஏன் நிறைவேற்றப்பட முடியாமல் போகிறது என்பதை அருள்கூர்ந்து கவனிக்கவேண்டும். நாங்கள் சொல்கிறோம் என்ற காரணத்தினால் அது தவறு என்று சுட்டிக்காட்டி விடலாம். நாங்கள் சொல்கிற காரணத்தால் அவற்றைத் தட்டிக் கழித்து விடலாம். ஆனால் பத்திரிகைகளைப் பார்க்கிறபோது, நாம் போடுகிற, நிறைவேற்ற இருக்கிற இந்தத் திட்டங்கள்கூட விரைவில் வெட்டப்படலாம் என்று கருதுகிறேன். அப்படி வெட்டப்படுகிற நிலையில் ஒட்டுப் போடுவதற்காகவாவது எங்கள் வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி நாங்கள் குறிப்பிட்ட நேரத்திலெல்லாம், நாட்டில் ஆளுகிற சர்க்கார் திட்டங்களினால் ஏற்பட்ட பலன்களைப் பிரசாரம் மூலம்தான் தெரிந்து கொள்ளவேண்டிய தொரு நிலை நாட்டு மக்களுக்கு இருக்கிறது. தவிர, பிரசாரத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி பிரசாரம் செய்து வந்தும்கூட மக்களுக்குத் திட்டங்களினால் ஏற்பட்ட பலனை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறும்போது, இவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு விரோதிகள் என்று எங்களைப்பற்றி நிச்சயமாகப் பலர் பேசுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நாங்கள் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிச்சயமாக விரோதிகள் அல்ல. காலம் சென்ற பண்டித நேரு அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, குடிசையில் வாழ்கிற மக்கள் குடிசையில் வாழ, ஏற்கனவே உள்ள நல்ல வீடுகள் மாடி வீடுகளாக உயர்வதற்குப் பயன்படுகிறது இத்திட்டம், இத்திட்டத்தில் எங்கேயோ ஓட்டை இருக்கிறது அதனால் பலன் எங்கேயோ போய்ச் சேருகிறது, எனவே அதைக் கண்டு அறிய ஒரு குழு நியமிக்க வேண்டுமென்று ஒரு குழு அமைத்தார்கள். மகலானோபிஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி ஏற்படுத்தி அதைப் பரிசீலனை செய்தார்கள். அந்தக் கமிட்டியின் முடிவு என்ன என்பது இன்னும் தெரியவில்லை. அடுத்த

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [9th August 1965

திட்டக் குழுவில் இருந்து திட்டத்தை தீட்டுபவர்களே கூட திட்டத்தைக் குறை கூறி வருகிறார்கள். இன்னும் சமீப காலத்தில் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த கனம் காமராஜ் அவர்கள் பேசுகிற பேச்சுக்களைப் பார்க்கிறபோது, ஏழைகளுக்காகப் போடப்பட்ட திட்டம் பணக்காரர்களுக்குத்தான் பயன்பட்டு வருகிறதே தவிர ஏழை மக்கள் முன்னேற்றம் அடையவில்லை என்று சொல்வதைப் பார்க்கும்போது அப்போதிருந்த முதல் மந்திரி வேறு, இப்போதிருக்கிற முதல் மந்திரி வேறு, அப்போதிருந்த அரசாங்கம் வேறு, இப்போதிருக்கிற அரசாங்கம் வேறு என்று பொருள்படத்தக்க நிலையில்தான் இருக்கிறது. இதிலே இருக்கிற உள்நோக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. 17 ஆண்டுகாலமாக இந்தியாவில் காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி புரிந்து கொண்டு வருகிறது. இந்த 17 ஆண்டு காலத்தில் நான் போட்டிருக்கிற சிறிய கணக்குப்படி பார்த்தால் இந்த 17 ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 45,000 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இருப்பது 40 கோடி மக்கள். இதனால் ஏற்பட்டிருக்கிற பலனைப் பார்க்கிறபோது அது மிகவும் குறைவாகத்தான் இருந்து வருகிறது. விவசாயத்திற்காக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாய உற்பத்தியை நாம் நாளுக்குநாள் அதிகமாக பெருக்குகிறோம் என்று சொல்லப்பட்டு வந்தாலும் நம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிலேயே, இம்மாநிலத்தில் பெரிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலம் பாசன வசதிகளைப் பெருக்க புதுப்பகுதிகளைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இந்த மாநிலத்தில் அதிக அளவில் இல்லை என்று இருக்கிறது. கட்ட வேண்டிய அணைகள் கட்டி முடிந்தாகி விட்டது, வெட்ட வேண்டிய வாய்க்கால்கள் எல்லாம் வெட்டி முடிந்தாகிவிட்டது, ஆகவே இனி கட்ட வேண்டியதோ அல்லது வெட்டவேண்டியதோ ஒன்றுமில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். சிறிய நீர் பாசனத் திட்டங்களுக்காக போடப்பட்டிருக்கிற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல முடியும். கட்டுப்படுத்த முடியாமல் ஓடுகிற காட்டாறுகள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றைத் தேக்கி வைத்து தூர்ந்து போயிருக்கிற குளங்களில் தூர் எடுத்து தண்ணீரைப் பாய்ச்சினால் உண்மையில் அது நல்ல பலன் உள்ளதாக இருக்கும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் என் தொகுதியில் சென்ற பதினேழு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஒரு திட்டத்திற்கான எல்லா முயற்சிகளும் எடுத்திருக்கிறார்கள். அங்கு பல பெரிய ஏரிகள் இருக்கின்றன. அங்கு எங்கிருந்து தண்ணீர் வந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. வட்டார வளர்ச்சிக் கூட்டத்தில் மட்டுமல்ல, மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்தில் கூட இதுபற்றிக் கேட்டபோது எங்கிருந்து தண்ணீர் வருகிறது என்று கண்டு பிடிக்க முடியாமல் இதற்கு வசதி இல்லை செலவழிக்கும் பணத்திற்கு ஏற்ற வருமானம் இருக்காது என்று கணக்கைக் காட்டி விடுகிறார்கள். அதைப் போலவே விவசாயத்தில் விவசாயிகளுக்



9th August 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

குப் போடப்பட்டிருக்கின்ற திட்டங்களைப் பார்க்கின்றபோது விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு என்று பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் ஏதாவது விவசாயிக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்பதை நம்மால் சொல்லமுடியும். வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் என்று சொல்வார்கள். ஆனால் எத்தனை தான் உற்பத்தியைப் பெருக்கினாலும் கூட நிச்சயமாக விவசாயிகளின் நிலைமை முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. விவசாயியின் வயிறு காயக் காய பயிரும் காய்ந்து கொண்டே போகிறது. இவ்விதம் விவசாயி கஷ்டப்பட, கஷ்டப்பட பஞ்சம் ஏற்பட்டே தீரும். விவசாயிகளுக்கு என்று பல திட்டங்கள் நாட்டில் தீட்டப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற கஷ்டங்களைப் பார்த்தால் மிகவும் வேதனையாக இருக்கின்றது. உரம் எவ்வளவு போட்டாலும் சரி, தண்ணீர் எவ்வளவு பாய்ச்சினாலும் சரி, நிலத்தில் விவசாயி ஒரு நாளைக்குப் போய் வயலைச் சுற்றிப்பார்க்கவில்லையென்றால் விவசாயமே கெட்டுப் போய்விடும். விவசாயியினுடைய கால்தூசு படாவிட்டால் பயிரே கெட்டுப் போய்விடும் என்று எங்கள் பகுதியில் பழமொழியாக சொல்லுவார்கள். ஆனால் இன்றையதினம் வயல் பக்கமே போக முடியாத அளவுக்கு அவனுக்குப் பல தொல்லைகள் இருந்து கொண்டிருக்கின்றன. முக்கியமான காரணம் விவசாயிக்கு நேரம் கிடையாது. கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டங்களின் காரணமாக ஏழை விவசாயிகள் தினமும் ரெண்ட் கோர்ட்டுக்குப் போவதும், அதற்கு மேல் உள்ள ரெவின்யூ கோர்ட்டுக்குப் போவதும், ஹைகோர்ட்டுக்கு அலைந்து கொண்டும் இருக்கின்ற நிலைமையில்தான் இன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சட்டங்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கென்று தனியாக நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் இருக்கின்றன. விவசாயிகளுக்கென்று தனியாக நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களின் காரணமாகப் பல வழக்குகள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மற்ற வழக்குகளில் எல்லாம் அரசாங்க வக்கீல்கள் உதவுவது போல இவ்வழக்குகளுக்கும் தனியாக வக்கீல்களை அமர்த்திக்கொள்ள விவசாயிகளுக்கு வசதி இருக்க வேண்டும். விவசாயிகள் பேரில் ஏதாவது ஒரு வழக்கு வந்து விட்டால் சுமார் 10 ஆண்டு காலம் அவர்கள் கோர்டுக்குப் போய்க்கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி முடியாததால் பல ஆண்டுகாலம் விவசாயம் செய்த விவசாயி நிலத்தை விட்டு விடவேண்டியிருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு நன்மை செய்து கொடுக்கின்ற முறையில் விவசாயிகளுக்கென்று தனியாக சர்க்கார் மூலமாகக் கோர்ட்டுகளில் வாதாடுவதற்கு வக்கீல்களை அமர்த்திக்கொடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று குடிதண்ணீர் வசதியைப் பார்க்கும்போது, ஏறத்தாழ சுதந்திரம் அடைந்து 17 ஆண்டுகள் ஆகியும், சாதாரண கிராமங்களில் குடிதண்ணீர் வசதியில்லாமல் மக்கள் எவ்வளவோ

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [9th August 1965

கஷ்டப்படுகிறார்கள். குடிதண்ணீர்த் திட்டம் என்று பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் தேசியப் பாதுகாப்புக் குடிநீர்த் திட்டம், ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் போன்ற பல திட்டங்கள் போடப்படுகின்றன. ஆனால் இத்தனை திட்டங்களும் இன்னும் பரிசிலனை செய்து கொண்டிருக்கின்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக ஜெயங்கொண்டம் பகுதியில் உபயோகிக்கின்ற குடிதண்ணீரால் கொக்கிப்புழு நோய்வருவதால் அதை உபயோகிக்கின்ற மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். திட்டக் குழு அங்கே சென்ற நேரத்தில், அந்தத் தண்ணீரைக் காட்டுவதற்காக எல்லோரும் ஒவ்வொரு கிளாசிலும் தண்ணீரை எடுத்துக் காட்டினார்கள். அந்தத் தண்ணீரைப் பார்த்துவிட்டு, இந்தத் தண்ணீரையா இங்குள்ள மக்கள் உபயோகிக்கிறார்கள் என்று மிகவும் ஆச்சரியமாக இருந்தது எல்லோருக்கும். சுதந்திரமடைந்து 17 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அந்தத் தண்ணீரையேதான் உபயோகித்து வருகிறார்கள். இன்னும் அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியவில்லை. போடுகின்ற திட்டங்களை அதிகாரிகள் இன்னும் பரிசீலனை செய்து கொண்டுதான் இருக்கிறார்களே, தவிர நிறைவேற்றுவதற்கு எந்த விதமான முயற்சியும் எடுப்பதாகக் காணோம். இதைப்பற்றி அதிகாரிகளிடத்தில் நாங்கள், ஜெயங்கொண்டம் பகுதிக்குக் காவேரி ஆற்றிலிருந்து நீரைக்கொண்டுவந்து கொடுக்கலாம் என்று சொன்னால், நீங்கள் எல்லாம் டெக்னிக்கல் பீப்பிள் அல்ல, உங்களுக்கு அதைப்பற்றி அதிகமாகத் தெரியாது, நாங்கள் தான் இதைப்பற்றிச் சொல்லமுடியும், என்று எங்களிடம் சொல்லிவிடுகிறார்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்க முடியாது, நாங்கள் குழாயைப்போட்டு போட்டு பிடுங்கிக்கொண்டேயிருப்போம், நீங்கள் சொல்வதை நாங்கள் பரிசீலனை செய்ய மாட்டோம் என்று சொல்கின்ற அளவில் அங்குள்ள அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்கு என்று தனியாகப் பொறியர். ஒருவர் இருக்கிறார்கள். அரியலூர், ஜெயங்கொண்டம் பகுதிக்கு நிச்சயமாகக் காவேரி ஆற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டு வரலாம் என்று சொன்னால் அதைப்பற்றி யாரும் பரிசீலிக்கத் தயாராக இல்லை. அதற்கு நேர்மாறாக குழாய்களைப் போட்டு பிடுங்கி மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் தாங்களாகவே குழாய்க் கிணறுகளைப்போட்டுக் கொள்ள முடியாது ஐந்தாறு பஞ்சாயத்துக்கள் ஒன்று சேர்ந்து இணைந்து, குழாய்கள் மூலம் கொள்ளிடம் ஆற்றிலிருந்து அந்த ஏரியாவுக்குத் தண்ணீர் சப்ளை செய்யலாம். எங்கள் பகுதியில் இருக்கும் டால்மியாபுரத்தில் இருக்கின்ற மானேஜ்மெண்டார், இரண்டு குழாய்க் கிணறுகளைப்போட்டு, அவர்களுடைய தொழிலாளர்களுக்குக் குடிதண்ணீர் வசதிசெய்து கொடுக்கிறார்கள். ஆனால் பக்கத்திலிருந்து வருகின்ற கல்லக்குடிக்கு அவர்கள் தண்ணீர் கொடுப்பதில்லை. இதன்



9th August 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

காரணமாக அங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இம்மாதிரிப்பட்ட குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக வெட்டிப்பார்த்துவிட்டோம், 130 அடி வரை தோண்டிப் பார்த்தாகிவிட்டது. தனி மனிதர்கள் யாரும் இதைச் செய்துவிட முடியாது. ஆனால் பக்கத்திலுள்ள டால்மியாபுரம் மானேஜ்மெண்ட் இரண்டு கிணறுகளை அமைத்து தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் நம் நாடு சுதந்திரம் அடைந்து 17 ஆண்டுகள் ஆகியும் இன்னும் குடிதண்ணீருக்காகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றால், இந்தச் சர்க்கார் குடிதண்ணீருக்காகத்திட்டங்களின் மூலமாக என்ன செய்திருக்கிறார்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே, கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், கல்விக்காக நாம் அதிகமான அளவு தொகை ஒதுக்குகின்றோம். இதை வேண்டாம் என்று சொல்லவில்லை, பொதுவாக திட்டம் வேண்டாம், திட்டம் தேவையில்லை என்று சொல்பவர்கள் நாங்கள் அல்ல என்பதை நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இந்த மாநிலத்தில் 11-வது வரையிலும் பிள்ளைகள் இலவசமாகப் படிக்க வேண்டும் என்று நாம் சொல்கிறோம். ஆனால் 11-வது வகுப்பு வரை படிக்க வைக்கின்ற பெற்றோர்கள், 11-வது வகுப்பு தேறிய பின்னால் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பவேண்டும் என்று முன் வருகின்ற நேரத்தில் எங்கு சென்றாலும் இடமில்லை இடமில்லை என்று சொல்லுகின்ற நிலைமை தான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. நமது முதலமைச்சர் அவர்கள், கேட்கிறார்கள், 11-வது வகுப்பு தேறினவர்கள் அத்தனை பேரும் கல்லூரியில் சேர்ந்துதான் ஆகவேண்டுமா என்று. அப்படியானால் நான் கேட்பது, எல்லாக் குழந்தைகளும் 11-வது வகுப்பு வரையிலும் படித்துத்தான் ஆகவேண்டுமா? 11-வது வகுப்பு வரை எல்லோருக்கும் படிப்பு சொல்லிக்கொடுக்காமல் இருந்த நேரத்தில் நாடு கெட்டுப் போய்விட்டதா? கட்டாயப்படிப்பு என்று சொல்லிவிட்டு, அவர்கள் 11-வது வகுப்பு வரை படித்துப் தேறிய பிறகு கல்லூரிக்குப் போக வேண்டிய அவசியமில்லை என்று சொல்வது அவ்வளவு பொருத்தமான வாதமாகாது. கிராமங்களில் இருக்கின்ற மக்கள், பெற்றோர்கள் என்ன நினைக்கிறார்கள், நாம் படிக்கவில்லை, நமது மூதாதையோர் படிக்கவில்லை, நம்முடைய பிள்ளைகளாவது கல்லூரியில் சென்று படிக்கட்டும் என்ற நினைப்பில், 11-வது வகுப்பு தேறிய பின்னால், கல்லூரிக்குச் செல்லவேண்டும் என்று விரும்புகிறார்கள் அவ்விதம் சேரவேண்டியதில்லை என்று, முதலமைச்சர் அவர்கள் சொல்வது சரியான வாதமாக இராது என்பதைத் தங்கள் மூலமாக அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கல்லூரியில் சேர்க்கவேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு பெற்றோரும் அலைகின்ற அலைச்சலை நான் நேரடியாகப் பார்த்தேன். முன்னூறு மார்க்குகள் வாங்கிய பிள்ளைகளுக்கு இடமில்லை என்று சொல்கிறார்கள். இதற்கு ஒரு விதியை வைத்து விட வேண்டும். முன்னூறு மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்கள் தான் College Course அதற்கு குறைவாக வாங்குபவர்கள் Passed S.S.L.C

என்று போட்டுவிடுங்கள், 300-க்கு மேற்பட்டு மார்க் வாங்கினவர்களுக்குத் தான் காலேஜில் இடம் கிடைக்கும், மற்றவர்களுக்கு எஸ். எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்கள் மட்டும் என்று ஒரு ஸ்டாம்பைக் குத்திக் கொடுத்துவிட்டால் பெற்றோருக்காவது ஒருவிதத்தில் மிச்சம் ஏற்படும் என்று நினைக்கிறேன் எப்படியாவது, கல்லூரியில் சேர்த்துவிட வேண்டும் என்று நினைத்து பெற்றோர்கள், எங்கிருந்தாவது கடனை வாங்கிக் கொண்டு கல்லூரி பிரின்ஸ்பாலிடம் வருகிறார்கள். அப்போது சாதாரண மனிதராக பிரின்ஸ்பால் தெய்வமாகத் தோன்றுகிறார், பெற்றோர்களுக்கு இவ்விதம் தோன்றுகின்றவரிடம் சென்றாலும் 310 மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. எப்படியாவது சேர்த்துவிட வேண்டும் என்று பலபேர்களைப் போய் நாடுகிறார்கள். கல்லூரியில் சென்றால் மார்க் போதாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் அங்கேயிருக்கின்ற கல்லூரி கமிட்டி மெம்பர்களுக்கு யாரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்வதற்குச் சட்டம் இருக்கிறது, மெம்பரின் பேரில் எத்தனை பேர்களை வேண்டுமென்றாலும் சேர்த்துக்கொள்வதற்குச் சட்டம் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் 310 மார்க் வாங்கின பிள்ளைகளை எடுப்பதில்லை, 230 மார்க் வாங்கினவர்களை எடுத்துக் கொள்கிறார்கள் என்றால் உண்மையில் இந்தப் பிரச்னையை நாம் எப்படித் தீர்ப்பது என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று யூனிவர்சிடி ஆரம்பிக்கின்ற விஷயத்தில் மதுரையில் நாம் யூனிவர்சிடி ஆரம்பிக்கப் போகிறோம், அதைக்கேட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் இவ்விதம் ஆரம்பிக்கும் நேரத்தில் கிராமங்களின் பக்கத்தில் இம்மாதிரிப்பட்டவைகளை ஏற்படுத்தினால், கோயில் குளம் தெரியாது இருக்கின்ற என்னைப்போன்றவர்களுக்குக் இவைகளைப் பார்த்தாவது நல்ல முறையில் பிரச்சாரம் செய்கின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வீடுகட்டும் திட்டத்தைப் பொறுத்த அளவில், அரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் விஷயத்தில் கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்படுகின்றன. இதற்காகக் கொடுக்கப்பட்ட பல இடங்கள் இன்னும் தரிசாகக் கிடக்கின்றன. கொடுக்கப்பட்ட இடங்களைப் பார்த்தால், நன்செய், புன்செய்களாகிவிட்டது, புன்செய், நன்செய்களாகிவிட்டது. வீடுகள் கட்டப்படாமல் கொடுக்கப்பட்ட மனைக்கட்டுகளெல்லாம் தரிசாகக் கிடக்கின்றன. இவர்களுக்கெல்லாம் கடன் உதவி கொடுப்பதற்காக சற்றுக் கூடுதலாக நிதி ஒதுக்கி வீடுகள் கட்டிச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே பின்னிலை வகுப்பாருக்கும் வீடுகட்டிக் கொடுப்பதற்காக அதிக நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு சாலைப் பராமரிப்புக்காக, இப்போது ஆள் ஒன்றுக்கு 40 ந. பை. என்று கொடுப்பதை மாற்றி அந்த வட்டாரத்தில் இருக்கின்ற சாலை அளவைக் கணக்கிட்டு,



அதன் தூரத்திற்கேற்ப பஞ்சாயத்துக்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. க. மாரப்ப கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நான்காவது திட்டம் ஆரம்பிக்கையில் இந்த நாட்டில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டில் இருக்கின்ற நிலையில், கிடைத்த அனுபவத்தை வைத்துக்கொண்டு இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே குறிப்பாக விவசாயம், தொழில், மின்சாரம் போன்ற காரியங்களுக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். இந்த மூன்றுக்கும் முதலிடம் கொடுக்கும் காலத்தில், குறிப்பாக விவசாயம் கிராமப் பகுதிகளில் உள்ள கிராம மக்கள் செய்யக் கூடிய ஒன்று என்பது எல்லோருமே அறிந்த விஷயம். கிராம முன்னேற்றத்திற்கு அது மிகவும் முக்கியமானது. ஆகையினாலே அந்த முறையில் இந்தத் திட்டத்தைத் தயாரித்த நமது கனம் முதல் அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

குறிப்பாக இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, பல வருஷங்களாக அனாதை போல் வரண்ட பகுதிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதாக இருப்பதைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். ஏனென்றால், இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் 1957-ம் வருஷத்தில் கோரிக்கைவிடப்பட்டது. இந்தத் திட்டம் இரண்டு, மூன்று தடவைகள் கைவிடப்பட்டிருக்கிறது. அப்படி இருந்ததின் காரணத்தினால் 1961-ம் வருஷத்தில் முதல் அமைச்சராக இருந்த நமது நாட்டின் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கிற திரு. காமராஜ் அவர்கள், எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, எங்கள் பகுதிக்கு வந்து பல கிராமங்களுக்கும் சென்று அங்கு இருக்கக் கூடிய விவசாய மக்களின் கஷ்டத்தை நன்கு அறிந்தார்கள். அதன் காரணமாக இன்று இந்தத் திட்டம் உருவாகியிருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருந்தாலும் கூட, இந்தத் திட்டத்தைப் பார்க்கும்போது, இந்தத் திட்டம் அவனாசிக்கு மட்டுமல்லாமல், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளுக்கும் கொடுப்பதாக இருக்கிறது. அவனாசியைப் பொறுத்த வரையில் இந்தத் திட்டத்தின் 20-வது பக்கத்தில் 30,000 ஏக்கர்கள் என்று காணப்படுகிறது. 67-வது பக்கத்தில், அவனாசி பகுதிக்கும், கோயம்புத்தூர் பகுதிக்கும் 1,08,000 ஏக்கர் என்று கண்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது, என் தொகுதி மக்களின் சார்பில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை நம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட காலத்திலே இந்தத் திட்டம் அவனாசிக்குத் தான் என்று கூறியிருக்கிறார்கள். குறிப்பாக 1962-ம் வருஷத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் எங்களுடைய தொகுதி மக்களும் நானும்

முதல் அமைச்சர் அவர்களை பேட்டி கண்டு பேசியபோது, இந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறதோ அந்தத் தண்ணீரையெல்லாம் அவனாசி பகுதிக்கு, எங்கெங்கு கொடுக்க வேண்டுமோ அங்கெல்லாம் கொடுத்துவிட்டு, மீதி இருந்தால்தான் வெளியில் கொடுக்க முடியும் என்று கூறி இருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதோடு மட்டுமல்லாமல் இந்த வருஷத்தில் மார்ச் மாதத்தில் முதல் அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் ஜில்லாவின் எம்.எல்.ஏ-க்கள், எம்.எல்.ஸி.-க்கள் எல்லோரையும் கூப்பிட்டு, சில அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு இந்தத் திட்டத்தைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள். அந்த சமயத்தில் தான் 1,08,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்று கூறினார்கள். அந்த சமயத்தில் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டேன், இந்தத் திட்டம் கூடிய சீக்கிரம் நிறைவேறி, எங்கள் அவனாசி பகுதியின் வரட்சியை நீக்கவேண்டும் என்று கூறினேன். அதற்கு மேலே கோயம்புத்தூர் பகுதி எம்.எல்.ஏ. ஸ்ரீமதி குழந்தை அம்மாள் அவர்களும், ஸ்ரீமான் எல்லம நாயுடு அவர்களும் இந்தத் திட்டத்தின் மூலமாகத் தங்கள் பகுதிக்கும் வேண்டுமென்று அன்றுதான் எடுத்துக் கூறினார்கள். அதற்கு மேல் நமது முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து பார்ப்போம் என்று பதில் தெரிவித்தார்கள். குறிப்பாக நம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், 1962-ம் வருஷத்திலே இந்த அசெம்பளி கூட்டத்தில் அவனாசிக்குத் தண்ணீர் கொடுப்பதாக இருந்த ஒரு காரணத்தினால் ஈரோடு மெம்பர் கனம் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் 'அவனாசிக்கு தண்ணீர் கொடுப்பார்களேயானால் எங்கள் பகுதி மிகவும் பாதிக்கப்படும்' என்று கூறிய சமயத்திலே நமது முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் 'அவனாசிக்கு எப்படியாவது பாசனம் கொடுக்கத்தான் வேண்டும், நீங்கள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்' என்று கூறியிருப்பதை சபை நன்கு அறியும். ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலம் அவனாசிக்கு 1,08,000 ஏக்கருக்குப் பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அவனாசியில் 2,50,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக ஒரு லட்சம் ஏக்கருக்குக் கொடுத்தாலும் கூட, இன்னொரு பகுதி இன்னும் மோசமாகத்தான் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கோயம்புத்தூரை எடுத்துக்கொள்வோமானால், அது நல்ல வளம் பெற்ற பகுதி என்பது எல்லோருக்கும் தெரியும். கோயம்புத்தூருக்கு மேற்கே உள்ள பகுதிகளெல்லாம் மேற்குத் தொடர்ச்சி மலை தண்ணீர் காரணமாக கோயம்புத்தூருக்கு மேலே நன்கு செழிப்புற்றிருக்கிறது. அது நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதோடு மட்டுமல்லாமல் கோயம்புத்தூரிலே உள்ள பாமர மக்கள் நல்ல முறையில் வாழ்கிறார்கள். அங்கு இருக்கிற கூலி ஒவ்வொருவருக்கும் மாதம் 150 ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது. ஆனால், அவனாசி தாலூகா போன்ற வரண்ட பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் 30 ரூபாயிலிருந்து, மீறினால் 40 ரூபாய் கிடைக்கிறது. இந்த நிலையை அமைச்சர் அவர்கள் நன்கு அறியவேண்டும். இந்த நிலையிலே, கோயம்புத்தூருக்குக்



கிழக்கே உள்ள பகுதியில் விவசாயக் கூலியை எடுத்துக்கொண்டாலும் கூட அங்கு நல்ல முறையில் விவசாயம் நடந்து வருகிறது. கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் வரையில் பார்ப்போமானால் இருபுறங்களிலும் நல்ல தொழிற்சாலைகள், நல்ல நூற்பு ஆலைகள், இன்னும் பல பல கட்டடங்கள் இடைவிடாமல் காட்சி அளிப்பதை நமது முதல் அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த ரோடிலே உள்ள எல்லா கிராமங்களிலும் உள்ள விவசாயத் தோட்டங்களிலே நல்ல முறையில் விளைந்திருப்பதைப் பார்த்திருப்பார்கள் என்றே எண்ணுகிறேன். குறிப்பாக நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த செஷன் முடிந்தவுடன் என்னுடைய பகுதிக்கு நேரில் வந்து பார்வையிட்டு வேண்டியதைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

* **திரு. வீ. ராமனுதன்** : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நான்காவது திட்ட முதற்குறிப்பை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இந்த நான்காவது திட்டத்திலே விவசாயத்திற்கும், தொழில் துறைக்கும், மின்சாரத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். விவசாயத்தைப் பொறுத்த அளவில் ஐந்தாண்டுத் திட்டங்களால் நம்முடைய நாடு முன்னேறி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. வேண்டுமென்றால் முன்னேற்றம் இன்னும் அதிகமாகத் தேவை என்று கூறலாமே தவிர முன்னேறவில்லை என்று கூறுவது அவ்வளவு சரியாகாது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த சந்தர்ப்பத்திலும் விவசாயிகள் கஷ்டப்படுகிற நிலையையும் இந்த மன்றத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தற்போது கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. பயிர்களுக்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. இந்தக் கடன்கள் மூன்று மாதம் அல்லது ஆறு மாதங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நன்செய் பகுதியில் வாழும் விவசாயிகள் வருகிற விளைச்சல் மூலமாக வாங்கிய பணத்தைத் திருப்பிகொடுத்து விடுகிறார்கள். புன்செய் பகுதியில் வாழும் விவசாயிகள் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கிராமங்களில் இருக்கிற வார வட்டிக்காரர்களிடமிருந்து பணத்தை வாங்கிக்கொடுத்து மேலும் கடனாளிகளாக ஆகிவிடுகிறார்கள். கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 1,000-க்கு 6 மாதத்திற்கு ரூ. 50 வட்டி. மீண்டும் திருப்பிக் கொடுக்கும்பொழுது ஒரு மாதத்திற்கு ரூ. 1,000-க்கு ரூ. 100 வட்டி கொடுக்கக்கூடிய நிலை இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, இந்தக் கிராமங்களில் இருக்கிற வாரவட்டிக்காரர்களின் கொடுமையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத் துறையைப் பொறுத்துப் பேசுகின்ற நேரத்தில் என்னுடைய தொகுதியில் கொடகனாறுத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தி

[திரு. வீ. ராமனுதன்] [9th August 1965

லாவது நிறைவேற்றப்பட வேண்டும். கொடகனாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சென்னை—மைசூர் எக்ரிமெண்டு குறுக்கே இருந்தது. அந்தக் கொடகனாற்றில் வெள்ளக்காலங்களில் வருகின்ற மழைத் தண்ணீரை வாய்க்கால் மூலமாக திருப்பிவிட்டு, எங்கள் பகுதியிலுள்ள பொன்னையனை, உப்பிடமங்கலம், விராக்கியம் பகுதியில் உள்ள குளங்களுக்கு அந்தத் தண்ணீரை அளித்தால், புஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும். அப்படிச் செய்து அந்தப் பகுதிகளில் இருக்கிற குளங்களுக்கும் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குளித்தலை தாலூகா தலைநகரமாக இருக்கிறது. அங்கு ஒரு நல்ல ஆஸ்பத்திரி கிடையாது. அங்கு ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, விரைவிலே நில ஆர்ஜிதம் செய்து, 50 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியை கூடிய சிக்கிரம் அங்கே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மன்றத்தில் பெரியவர்கள் பலர் நமது நாட்டில் உயர்நிலைப்பள்ளிகள் பெருகிய அளவுக்கு, ஆரம்பப் பள்ளிகள் பெருகிய அளவுக்கு, கல்லூரிகள் பெருகவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதையும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கரூரில் ஒரு கலைக் கல்லூரியும், பாலிடெக்னிக்கும் அமைப்பது மிகவும் அவசியம். அதை விரைவிலே நடத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். கரூர் தாலூகா தலைநகரமாக இருப்பதினால், விரைவிலே அங்கு ஒரு தொழில் பேட்டை அமைக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குளித்தலை—முசிறிக்கு இடையிலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் ஒரு பாலம் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருச்சியிலிருந்து கரூர் செல்லவேண்டுமென்றால், அந்த ரோடு மிகவும் குறுகலாக இருக்கிறது. அதிலே பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. மணவாசியிலிருந்து திருச்சி வரையிலே மங்கம்மாள் சாலை என்ற ஒரு பழைய சாலை இருக்கிறது. அங்கே நல்ல முறையில் ரோடு போடுவதற்கு எஸ்டிமேட் தயார்செய்யப்பட்டதாகவும் கேள்விப்படுகிறேன். ஆகவே, ஷுகர் கேன் செஸ் பண்டிலிருந்து மங்கம்மாள் சாலையை விரைவிலே நல்ல முறையிலே அமைத்துக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அந்த சாலை போடப்பட்டுவிட்டால், கரூர்—திருச்சி போக்குவரத்து மிகவும் சுலபமாகிவிடும். பட்டவாய்த்தலை ஷுகர் பாக்டரிக்கு கரும்பு கொண்டு வருவதும் மிகவும் சுலபமாகிவிடும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இது போன்ற பல திட்டங்களை நிறைவேற்றி எனது தொகுதியை வளப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



9th August 1965] [திரு. வி. ராமநாதன்]

கடைசியாக மின்சாரத் துறையைப்பற்றி கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மின்சாரத் துறை நம்முடைய இந்தியாவிலேயே சென்னை மாநிலத்தில் சிறப்பாக பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. நடப்பு ஆண்டு முடிவில் மொத்தம் 235,000 கிணறுகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2½ லட்சம் பம்பு செட்டுகள் வழங்கப்படும் என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்று மின்சாரத் துறையை அதற்காக பாராட்டுகிறேன். அதே நேரத்தில் என்னுடைய பகுதியிலே சவுத் மதராஸ் கார்ப்பரேஷன் என்ற தனியார் நிறுவனம் நல்ல முறையில் செயல்படவில்லை. அங்குள்ள விவசாயிகளுக்கு போதிய அளவு நல்ல முறையிலே மின்சாரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. தனியார் துறையிலே உள்ள மின்சார நிறுவனங்களை அரசாங்கம் ஏற்கப் போகிறது என்று நான்காவது திட்ட அறிக்கையிலே கண்டிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆகவே, இது போன்ற திட்டங்களையெல்லாம் விரைவிலே நிறைவேற்றிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்து கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பி. முருகையன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் நமது முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை கூற முற்படுகிறேன். இந்த அறிக்கையிலே வேளாண்மையின் முக்கியத்துவத்தைப்பற்றி பல இடங்களில் அழுத்தம் திருத்தமாக கூறப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கிற நோக்கில் தஞ்சை மாவட்டத்தில் 5 கோடி ரூபாய் செலவு செய்து வடகிழக்கு பருவ காலத்தில் மழையின் காரணமாக அங்கு உபரியாக வருகிற தண்ணீரை கடலில் கொண்டுபோய் விடுவதற்காக ரூ. 5 கோடிக்கு செலவிட திட்டமிட்டிருக்கிறார்கள். இப்படி ரூ. 5 கோடி செலவு செய்வதை சற்று குறைத்து ரூ. 2 கோடிக்கு ஒரு திட்டத்தை தயார்செய்து, மழை காலத்தில் உபரியாக இருக்கிற தண்ணீரைத் தேக்கி, புதுக்கோட்டை, ராமனாதபுரம் போன்ற பின்தங்கிய பகுதிகளுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தினால் தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால் ஏற்படுகின்ற அபாயத்தை நீக்கி, பாதிக்கப்பட்டிருக்கிற புதுக்கோட்டை, ராமனாதபுரம் பகுதிகளுக்கு இந்தத் திட்டத்தின் மூலமாகத் தண்ணீரைக் கொண்டு செல்வதற்கு இலகுவாக இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். பாதிக்கப்பட்ட பகுதியை வளமான பகுதியாக்க இது மிகவும் தேவையான திட்டமாகும்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே அக்கினியாற்றில் ஒரு அணை கட்டி, கடந்த ஆண்டு முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் அந்த அணையை திறந்துவைக்கின்ற நேரத்தில், தண்ணீர் இல்லாத அணையிலே லாரியில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து அணையை நிரப்பி அணையை திறந்து வைத்தார்கள். இன்றுவரை அந்த அணையில் தண்ணீர் இல்லாமலே இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப் போடுகின்ற திட்டம்

[திரு. பி. முருகையன்] [9th August 1965

வீணாகாது இருக்கவேண்டும். இப்பொழுது உளவயல் வாய்க்காலை விரிவுபடுத்தி அந்தக் கால்வாய் மூலம் அந்தத் தண்ணீரை அந்த அக்கினி ஆற்று அணையிலே கொண்டு வந்து நிரப்பி, அங்கிருந்து பிரித்து விட்டால் 38 கண்மாய்களுக்கு விடுவோமானால், அதன் மூலம் காம்பக்குடி, மழையூர் போன்ற பிற்பட்ட வறண்ட பகுதிகள் நல்ல செழிப்பான பகுதிகளாக அமையும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கான திட்டம் தற்போது பரிசீலனையில் இருப்பதை துரிதப்படுத்த வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு திட்டத்தைப்பற்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ராமநாதபுரம், தென் ஆற்காடு போன்ற பகுதிகளில் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தி, அங்கு விவசாயத்திற்கு நல்ல ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொடுப்பதுபோல், புதுக்கோட்டை, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு தாலுகா பகுதிகளுக்கு இந்தக் குழாய்க் கிணறுத் திட்டங்கள் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டால், அந்தப் பகுதியில் உள்ள விவசாய மக்களுக்கு நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு இலகுவாக இருக்கும். அந்தப் பகுதிகளை வளப்படுத்துவதற்கு, செழிப்படையச் செய்வதற்கு அனுகூலமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தங்கள் மூலம் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக இருக்கிற பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலே ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எல்லாம் அமைத்து விடவேண்டும் என்று நம்முடைய சர்க்கார் அறிக்கையில் கூறப்பட்டிருந்தும், இப்பொழுது ஏதோ 11 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் அவர்கள் கேள்வி ஒன்றுக்கு பதில் கொடுத்தார்கள். ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டடம் இல்லாத இடங்களில் ஆரம்பிப்பதற்கு இப்பொழுது முயற்சி நடந்து கொண்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். நேற்று முன்தினம் அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபொழுது, அரசாங்க டிஸ்பென்சரிகளாக இருப்பதை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவார்களேயானால், ஏற்படுகின்ற கட்டடச் செலவும், அதிலே ஏற்படுகின்ற எஸ்டாபிளிஷ்மெண்டு செலவும் மீதமாக இருக்கும் என்று நான் அமைச்சர் அவர்களுக்கு விளக்கிக் கூறிக்கொண்டிருந்தேன். அதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். ஆகவே, டிஸ்பென்சரிகளாக இருப்பதை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் சுகாதார அமைச்சர் அவர்களை தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி கிராமங்களில் ஏற்படுத்துகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு டாக்டர்கள் சரியாக வருவதும் இல்லை. ஆகையால் அந்த சுகாதார நிலையங்கள் பல மூடப்பட்டு விடுகின்றன.

அடுத்தபடியாக, அண்டை மாநிலங்களிலிருக்கிற தண்ணீரை நம்முடைய மாநிலத்திற்கு பயன்படுத்திக் கொள்வதற்கு அண்டை மாநிலங்களுடன் உடன்பாடுசெய்து நமது மாநிலத்தில்



9th August 1965] [திரு. பி. முருகையன்]

பயன்படுத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விரைவிலே அண்டை மாநில சர்க்கார்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, நல்ல முறையில் கிருஷ்ணா, கோதாவரியில் உபரியாக இருக்கிற தண்ணீரையும், மேற்கே கேரள மாநிலத்தில் ஓடுகிற தண்ணீரையும் திருப்பி விட்டு, அதனால் நம்முடைய மாநிலம் மேலும் அதிகமாக நீர்ப்பாசன வசதி பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அதனால் கோவை, திருச்சி போன்ற வட்டாரங்களில் விவசாயிகளாக இருப்பவர்களுக்கு நல்ல ஒரு வசதி ஏற்படும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கல்வியினுடைய தரம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக தொகையை அதிகமாக ஒதுக்கியதும் வரவேற்க வேண்டியது. கல்வி பயிலுகிற மாணாக்கர்களுக்கு கல்லூரிகளில் சேர முடியாமல் இட நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, மாவட்டங்களில் இன்னும் அதிகமாக கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டும். அதாவது, அப்படி கல்லூரிகளை அமைக்கும்பொழுது, ஒவ்வொரு தாலுகா தலைநகரத்திலும் ஒரு கல்லூரியை அமைத்து, உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கிற மாணாக்கர்கள் பள்ளி இறுதித் தேர்வில் எவ்வளவுக்கு எவ்வளவு தேர்வு பெறுகிறார்களோ, அந்த அளவுக்கு கல்லூரிகளை ஏற்படுத்தினால், இந்த மாணாக்கர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்கள் சற்று குறையும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு கல்லூரிகளிலும் உணவு விடுதிகளிலும் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் ஒரு ஆண்டுக்குத்தான் வழங்கப்படுகின்றன. ஒரு ஆண்டுக்கு என்று கூறியிருப்பதை சற்று நீடித்து, இன்னும் ஒரு ஆண்டு காலத்திற்கு அவர்களுக்கு நீடித்துக் கொடுத்தால், இன்னும் அவர்களுக்கு நல்ல முறையில் கல்வி கற்றுக்கொள்வதற்கு இலகுவாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

தற்பொழுது கல்லூரிகளில் படிக்கின்றவர்களுக்கும், விடுதிகளில் சேருகின்ற மாணவர்களுக்கும் காஷன் டெபாசிட் என்று வாங்குகிறார்கள். இம்மாதிரி காஷன் டெபாசிட் தாழ்த்தப்பட்ட மாணவர்களிடமிருந்து வாங்கக்கூடாது என்று சர்க்கார் உத்தரவு இருந்தும், இப்பொழுது இருக்கிற கோவை விவசாயக் கல்லூரியிலும், தஞ்சை சரபோஜிக் கல்லூரியிலும், இன்னும் சில கல்லூரிகளிலும், தாழ்த்தப்பட்ட மாணவர்களிடமிருந்து ஹாஸ்டலில் சேருவதற்கு காஷன் டெபாசிட் வாங்கித்தான் அவர்களை சேர்த்து கொண்டிருக்கிறார்கள் என்ற குறை இருந்துகொண்டு வருகிறது. கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் இதனை ஆலோசித்து, உடனடியாக உத்தரவு பிறப்பித்து, அரிசன மாணவர்களிடமிருந்து காஷன் டெபாசிட்டு வாங்காமல் இருக்கும் வகையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. பி. முருகையன்] [9th August 1965

பின்தங்கியவர்களுக்கு, மனைகள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. அப்படி வாங்கிக் கொடுக்கப்படும் நேரத்திலே, அவர்கள் அந்த இடத்தில் சரியானபடி வீடுகள் கட்டிக்கொள்வதில் சில நடங்கல்கள் இருக்கின்றன. காரணம் அவர்கள் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது, நிலச்சொந்தக்காரர்களுக்குத் தெரியாமலேயே செய்து விடுவதால், அதனால் நிலச்சொந்தக்காரர்கள் தகராறு செய்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படி ஏற்படும் காலதாமதத்தைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு கூட அவர்களுக்கு வீடு கட்ட வேண்டிய தொகையையும் இனாமாகக் கொடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. சிவ. சுமு. சிவராமன் அம்பலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நமது கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கும் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை வரவேற்கிறேன். மேலூர் பகுதிக்கு பெரியார் திட்டத்தினால் மிகவும் நல்ல பயன் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள நஞ்சை நிலங்களுக்கும் மத்தியில் உள்ள புஞ்சை நிலங்களையும் நஞ்சையாக மாற்றிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலூர் பகுதியில் பல இடங்களுக்கு மின்சாரம் கொடுத்திருப்பதற்காக சந்தோஷம். என்னுடைய தொகுதியில் பல வருஷமாக முயற்சித்தும் காலதாமதம்தான் ஏற்பட்டிருக்கிறது. மேலூரில் ஒரு கலைக் கல்லூரியும், ஒரு தொழில் கல்லூரியும் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பர் பெரியாறு திட்டத்தை துரிதமாக நிறைவேற்றிக் கொடுத்தால், மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள வறண்ட பிரதேசங்கள் வளமாக முடியும். எங்கள் பகுதியில் கோடைக் காலத்தில் சாகுபடி செய்ய கிணறுகள் வெட்ட உதவியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடந்த ஆண்டு டிசம்பரில் புயலால் பாதிக்கப்பட்ட அரிசன மக்களுக்கு உதவி அளிக்க வேண்டும். ஏற்கெனவே அரிசன இலாகாவினால் கொடுக்கப்பட்ட வீடுகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பழுது பார்த்து, நல்ல முறையிலே கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வீடு இல்லாதவர்களுக்கு மனையும், சொசைடி கடன்களையும் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ஆதி. அ. ப. சௌந்தரவேல் சேர்வை:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கடந்த 15 ஆண்டுகளில், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நமது நாட்டிலே நிறைவேற்றப்பட்டு, ஒவ்வொரு திட்டமும், வெற்றிகரமாக நடந்திருக்கிறது. அவை மக்களுக்கு உபயோகமாகவும் இருந்து இருக்கிறது. இன்றைய நிலையிலே, நான்காவது



9th August 1965] [திரு. ஆதி. அ. ப. சௌந்தரவேல் சேர்வை]

திட்ட அறிக்கையை கனம் அமைச்சர் அவர்கள் இந்த சபையிலே சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கை மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். முக்கியமாக விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்து, விவசாயத்தை பெருக்க வேண்டும் என்ற நோக்கத்திலே செய்து இருக்கிறார்கள். மின்சாரத்தையும், விவசாயத்தையும் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும், மக்களுக்கு உதவிகள் அளிப்பதனாலும் நல்ல முறையிலே உற்சாகம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்திலே இந்த திட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள். குறிப்பாக இந்த திட்டம் வெற்றிகரமாக மக்களுக்கு உபயோகப்பட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த நோக்கிலே எமது மதுரை ஜில்லாவிலே தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் நிலங்கள் எடுக்கப்பட்டு நல்ல முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு இருப்பதனால் எமது ஜில்லாவில் விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடிய பணத்தை, அவர்கள் அடைய வேண்டிய வசதிகளை காலாகாலத்தில் அவர்கள் அடைய அதிகாரிகள் செயல்பட்டு அவர்கள் விவசாயத்திற்கு தகுதியான ஆதாரங்களைப்பெற்று விவசாயத்தைப் பெருக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு என் தொகுதியைப் பொறுத்த அளவில், அது ஒரு மலை ஓரத்தில், திருவாங்கூர் பார்டரை ஒட்டி இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதி புஞ்சைக் காடுகள் நிறைந்ததாக இருக்கிறது. அங்கே நஞ்சை நிலங்கள் இல்லை. அந்த நிலங்கள் மலை ஓரமாக இருப்பதால் அதிகமான தண்ணீர் கிடைக்கிறது. இவ்விஷயத்தை நல்ல முறையிலே சர்க்கார் கவனித்து, அங்கே தண்ணீரை தேக்க வசதி செய்யவேண்டும். தற்சமயம் குளங்களில் கூட தண்ணீரைத் தேக்க முடியாத அளவிற்கு இருக்கிறது. ஆகவே அரசாங்கம் அதைக் கவனித்து அங்கே உள்ள கொட்டக்குடி ஆற்று தண்ணீரை நல்ல முறையில் தேக்க ஒரு அணையைக் கட்டி வசதி செய்து கொடுக்க வேண்டும். அந்தத் தண்ணீர் 15 குளங்களுக்கு பெருக்கப்படுகிறது. அந்த இடத்தில் ஒரு அணை கட்டினால் சுமார் 10,000 எக்கர் நிலத்திற்கு தண்ணீர் பெருக்கிக் கொடுக்க முடியும். அதனால் அங்கேயுள்ள விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும். விவசாயத்தைப் பெருக்குவதற்கு ஏதுவாக இருக்கும். அதோடு என்னுடைய தொகுதியில் மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. இந்த மூன்றிலும் பல பஞ்சாயத்து ரோடுகள் இந்த யூனியன்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் ஹைவேஸ் டிபார்ட்மெண்டால் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களால் பராமரிக்கப்பட்டு பஸ்கள் விடப்படுகின்றன. ஆனால் அவர்களால் அந்த ரோடுகளை நல்ல முறையில் பராமரித்து வர முடியவில்லை. ஆகவே, அவற்றையெல்லாம் ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்து அதிகமான பஸ்களையும் விட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. ஆர். அ. பெ. சௌந்தரவேல் சேர்வை] [9th August 1965

போடிநாயகனூரில் பாதாள சாக்கடை வேண்டும் என்று பல நாட்களாகக் கேட்டுக்கொண்டு வருகிறோம். சென்னை மாநிலத்திலேயே அங்கேதான் முதல் தரமான வாட்டர் சப்ளை இருக்கிறது. அந்த நகரத்தில் சர்ப்ளஸ் வாட்டர் சப்ளை இருக்கிறது; குடிதண்ணீர் திட்டங்கள் மற்ற நகரங்களில் எங்கள் திட்டத்தைப் பார்த்துத்தான் செய்தார்கள். ஆகவே, இந்த நான்காவது திட்டத்திலாவது, போடிநாயகனூர் பாதாளசாக்கடை திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம். பல தடவை இதுபற்றி அமைச்சரிடத்திலும், அரசாங்கத்திடமும் கேட்டும், அது இதுவரை கவனிக்கப்படவில்லை. அதை கவனித்து அரசாங்கம் சர்ப்ளஸ் வாட்டர் சப்ளை இருக்கும் இந்த நகரத்திற்காவது இந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு, போடிநாயகனூர் பக்கத்தில், சுமார் 8,000 அடி உயரத்திலிருந்து கொட்டக்குடி ஆற்று தண்ணீர் கொட்டுகிறது. இதுவரை மின்சார இலாகா அதைப் பார்வையிடவில்லை. அதைப் பார்வையிட்டு, மின்சாரத்தைப் பெருக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். 8,000 அடி உயரத்திலிருந்து வரும் தண்ணீரை நல்ல முறையில் உபயோகிக்க வழிவகை காணவேண்டும். இதை மின்சார இலாகாவின் கவனத்திற்கு அரசாங்கம் கொண்டு வர வேண்டும் என்றும், அங்கே மின்சாரம் எடுக்க வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் தேவாரம் என்ற ஒரு சிறு பஞ்சாயத்து இருக்கிறது. அதைச் சுற்றி மணல் பிரதேசங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. காற்றடித்தால் அங்குள்ள மக்களெல்லாம் விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள். மணல் தடுப்புத் திட்டம் தயார் செய்து, மணல் தடுப்பு அதிகாரிகள் சில 'பெல்ட்'-களைப் போட்டு, மணல் தடுப்பு வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதை இன்னும் நல்ல முறையில் கவனிக்க வேண்டும்.

எங்கள் பகுதியில் நிறைய குழாய்க் கிணறுகள் போட வசதி இருக்கிறது. சுமார் ஆறு, ஏழு அடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கிறது. இப்பொழுது ஏழடி ஆழத்திற்குக் குழாய் போட்டுத் தண்ணீர்ப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறோம். அந்த இடங்களில் ஆயிரம் குழாய்க் கிணறுகள் போட வசதி இருக்கிறது. குழாய்க் கிணறுகள் போட வசதி செய்து கொடுத்தால், அங்குள்ள விவசாயிகள் அத்தனை பேருக்கும் மணலைத் தடுப்பதற்கும், விவசாயத்தைப் பெருக்குவதற்கும் ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புட்டிப்புறம், தேவாரம், இராமகிருஷ்ணாபுரம் வரையில் ஒரே பாலைவனமாக இருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர்களுக்குப் பல தடவை ஞாபகப்படுத்தியிருக்கிறேன். முன்னாள் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் அந்த வழியில் செல்லும்போது கலெக்டர் அவர்கள் 'அந்த வழியாகப் போக வேண்டாம்' என்று சொல்லி விட்டார்கள். (மணி அடிக்கப்பட்டது.)



9th August 1965]

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். இந்தத் திட்டத்தில், நாங்கள் பல ஆண்டுகளாகச் சொல்லிவந்த திருமணிமுத்தாறு திட்டம் இடம் பெறும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், அந்தத் திட்டம் இதிலே இடம் பெறவில்லை என்று நான் படித்த வகையில் அறிந்து கொண்டேன். கடந்த பத்தாண்டுகளாக இந்தச் சட்ட மன்றத்தில் மட்டுமல்லாமல் வெளியிலும் விவசாயிகள் மாநாடுகளைக் கூட்டியும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். குறிப்பாக உணவு அமைச்சர் அவர்களிடம் நாங்கள் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அமைச்சரவை இந்தத் திட்டத்தைத் தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்திலே இதை மறுபரிசீலனை செய்து சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சேர்த்துக்கொள்வார்கள் என்றும் நான் எதிர்பார்க்கிறேன்.

புதிய ஏரிகள் நிறைய வெட்டப்படும் என்று சொல்லப்பட்டது. நாங்கள் கொல்லிமலை அடிவாரத்தில் நிறைய ஏரிகள் வெட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தோம். மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும் தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தோம் எஸ்டிமேட் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தோம். ஆனால், 'குட்டைகள் வெட்டுவதற்கில்லை' என்று அரசாங்கத்திடமிருந்து பதில் வந்திருக்கிறது. சிறிய பாசனத் திட்டத்தின் கீழ் இதுபோன்ற புதிய ஏரிகள் வெட்டப்படும், விவசாயிகளுக்கு நல்ல பலன் ஏற்படும் என்று சொல்லப்பட்டிருந்தும், எஸ்டிமேட் போட்டு அனுப்பியதற்கு ஏன் அம்மாதிரி அரசாங்கத்திடமிருந்து பதில் வருகிறது என்று தெரியவில்லை. இதுபோன்று புதிய குட்டைகளை வெட்ட நம்முடைய அரசாங்கம் நல்ல முறையில் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

எங்களுடைய மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்று நிறுவப்படவேண்டும் என்று மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். ரயில்வே செஸ் நிதி இருக்கிறது. அதை முதலீடாக வைத்து எங்களுடைய மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியொன்றை ஏற்படுத்த இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஒன்றை நிறுவவேண்டும் என்றும் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். அதையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். நாமக்கல்லில் பாலிடெக்னிக் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கொல்லிமலை ஒரு பின்தங்கிய பகுதி என்பது நம்முடைய அமைச்சரவைக்குத் தெரியும். அந்தக் கொல்லிமலையை ஒரு உல்லாச நகரமாக்குவதற்கு ஏற்கெனவே ஒதுக்கிய தொகை இன்னும் செலவிடப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. கொல்லி

மலையை ஒரு உல்லாச நகரமாக்குவதற்கு நம்முடைய அமைச்சரவை தனி கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சேந்தமங்கலம் குடி தண்ணீர்த் திட்டத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் முதல் அமைச்சர் அவர்கள் கல்நாட்டு விழா செய்திருக்கிறார்கள். அதையும் பரிசிலனை செய்து சேந்தமங்கலம் குடி தண்ணீர் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலிருந்து நாமக்கல் வழியாக திருச்சிக்கு ஒரு ரயில் பாதை அமைத்துத் தரவேண்டும் என்று மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் தீர்மானம் போட்டு இருக்கிறோம். மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்றும் தீர்மானம் போட்டிருக்கிறோம். அதையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள மத்திய அரசாங்கத்தோடு கலந்து, ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினருக்கு வீடுகள் கட்டித் தருவது மிகவும் அவசியம். என்னுடைய பகுதியில் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு மனை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதோடு, வீடு கட்டக் கடனும், சப்சிடியும் கொடுத்து உதவவேண்டும். இந்தத் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திருமதி டி. என். அனந்தநாயகி**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து ஒரு சில வார்த்தைகள் மிகக் குறுகிய நேரத்தில் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். இந்த ஐந்தாண்டுத் திட்டம் நாட்டினுடைய முன்னேற்றத்திற்காகப் போடப்பட்ட திட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதிலே சில கட்சியினர் 'ஓய்வு தேவை', 'லீவ் தேவை' என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும், திட்டமிட்ட முறையில் முன்னேறிக்கொண்டிருக்கும் நாட்டிலே திட்டத்தை இடையிலே நிறுத்திவைத்தால் அது பல இன்னல்களுக்கு இடம் கொடுக்கும் என்ற காரணத்தால் அதை எப்படியும் நடத்தி முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நடத்திக்கொண்டு போகிறோம். நம்முடைய மாநிலத்திலே மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் குறித்த அளவைக் காட்டிலும் அதிகமாக வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை மிகப் பெரிய அளவில் போட வேண்டும் என்ற எண்ணத்தில் 21,000 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம் நினைத்திருக்கிறது. அதைக் குறைத்து 18 ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கலாம் என்று இப்பொழுது யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். காரணம் 21,000 கோடி ரூபாய் செலவழிக்கவேண்டுமென்றால் குறைந்தது மூவாயிரம் கோடி ரூபாயாவது மக்கள் புது வரி கொடுக்கவேண்டி





யிருக்குமே, மக்கள் அதைத் தாங்க முடியுமா என்ற எண்ணத்தில் தான் ஓரளவு திட்டத்தைக் குறைத்துச் செய்ய வேண்டும் என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று மாகாண அளவிலும் ஓரளவுக்குக் குறைந்த அளவிலேதான் செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலே, ஆனால் அதே சமயத்தில் முக்கியமான துறைகளுக்கு எந்த அளவிற்குச் செலவழிக்க முடியுமோ அந்த அளவிற்குச் செலவழிக்கவேண்டும் என்ற எண்ணத்திலே இந்தத் திட்டம் இடப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

வேளாண்மைக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வேளாண்மைத் துறையைப் பார்க்கும்போது, இதர தானியங்கள், மற்ற பருப்பு வகைகளில் 1955-இல் இருந்ததைக் காட்டிலும் 1965-இல் உற்பத்தி குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது சற்று வருத்தமாக இருக்கிறது. மூன்று லட்சம் டன் அளவுக்கு இதர தானியங்கள், பருப்பு வகைகள் எல்லாம் 1955-க்கும் 1965-க்கும் இடையே குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, இதை எப்படியும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அரிசி மட்டுமல்லாமல், பருப்பு வகைகள் போன்றவையும் இப்பொழுது கிடைக்காமல் மக்கள் திணறிக்கொண்டிருக்கிறார்கள். அரிசி உற்பத்தியைப் பார்த்தால், 1955-க்கும் 1960-க்கும் இடையே எட்டு லட்சம் டன் அதிகமாயிருக்கிறது. 1960-க்கும் 1965-க்கும் இடையே நான்கு லட்சம் டன்தான் அதிகமாகியிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன, எந்த வகையிலே அக்கறை செலுத்த வேண்டும் என்பதை மிகத் தீவிரமாக அரசாங்கம் யோசித்து, எப்படியாவது உணவுப் பிரச்னையை நெருக்கடி நிலையில்லாமல் கொண்டு வருவது மிகவும் அவசரம் மாத்திரமல்லாமல் அவசியமும் கூட என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஜப்பானிய சாகுபடி முறையில் பவர் டில்லர்களைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அதைத் துரிதப்படுத்தவேண்டும். சிறு சிறு ட்ராக்டர்கள் செய்து அவற்றின் மூலமாக நிலத்தை உழுது பயிரிட்டு விளைவை அதிகரிக்க முடியுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவற்றையெல்லாம் சற்றுத் துரிதமாக செய்வதோடு மாத்திரமல்லாமல் விவசாயத்திற்குத் தேவைப்படுகிற உரங்கள், விதைகள் காலா காலத்தில் கிடைக்க வழி இருக்கிறதா என்றும் யோசிக்க வேண்டும். கூட்டுறவு முறையில் உர விநியோகம் செய்கிறார்கள். கூட்டுறவு முறையில் விநியோகிக்கும் முறையில் விவசாயிகள் தங்களுக்கு உரம் தேவை என்று அந்தச் சங்கத்திற்குச் சென்று கேட்கும்போது, எரு உரம், உப்பு உரம் இல்லை என்று சொல்லிவிடும் நிலையும், விவசாயிகளுக்குத் தேவை இல்லாத போது 'உரம் எடுத்துக்கொள்' என்று சொல்லும் நிலையும்தான் இருக்கிறது. 'பருவத்தே பயிர் செய்' என்றபடி எதைக் கொடுத்தாலும் பருவத்தில் கொடுத்தால்தான் நல்லது. பருவத்தில் பயிர் செய்தால்தான் நல்ல பலனைக் கொடுக்க முடியும். அதுபோன்று, 'டைவர்ஸிஃபைட் அக்ரிகல்சர்' என்ற முறையிலே பல தானியங்களை எழுப்பக்கூடியவர்களுக்கு இன்னும் சற்று உற்சாகத்தைக் கொடுக்க வேண்டும். பருப்பு வகைகளையும் மற்ற

[திருமதி டி. என். அனந்தநாயகி] [9th August 1965

வைகளையும் எழுப்புவதில் சற்று உற்சாகம் குறைந்திருந்ததனால் 1955-இல் இருந்ததற்கு 1965-இல் மூன்று லட்சம் டன் குறைந்திருக்கிறது. ஏன் இது குறைந்தது, எதற்காகக் குறைந்தது, இதை எப்படி அதிகரிக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது மிக மிக அவசியமாகும். நிபுணர் குழுவையாவது நியமித்து நிலைமையை ஆராய்ந்து, தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு ஏதாவது வரிச் சலுகை கொடுக்க முடியுமா, உற்சாகப்படுத்துவதற்கு ஏதாவது 'இன்ஸென்டிவ்' கொடுக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்ப்பது மிக அவசியம்.

அடுத்து, கிணறு தோண்டுவதற்கும், பம்ப் செட்டுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கும் இன்னும் சற்று அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இப்பொழுது அதிகமான தொகை கடன் கொடுக்க முன்வந்திருக்கிறோம். கொடுக்கப்படுகிற கடன் உடனடியாக விவசாயியின் கையில் போய்ச் சேர வழி கண்டு பிடிக்க வேண்டும். இடையில் இருக்கிறவர்கள் கையில் பணம் சிக்கி கடைசியில் விவசாயி கையில் போகும்போது கிணறு தோண்டுவதற்குப் பணம் போதாமல், உரிய காரியத்திற்குப் பயன்படாமல் போகும் சூழ்நிலை இருக்கிறது. வேளாண்மையில் அதிக கவனம் செலுத்தினால்தான் நகரப்புறங்களில் இருக்கிறவர்களுக்கு அதிக விலை கொடுத்து பொருளைப் பெறவேண்டிய நிலைமை இல்லாமலிருக்கும். பசுந்தழை உரம் உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும். பழ மரங்கள் வைப்பவர்களுக்கும் உற்சாகம் அளிக்க வேண்டும். அப்படி உற்சாகம் அளித்தாலும் அதை அவர்கள் பயன்படுத்தி, பழத்தோட்டத்தை வைத்துப் பராமரிக்கிறார்களா என்றும், பசுந்தழையை உற்பத்தி செய்கிறார்களா என்றும் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல. தனியார்த் துறையிலுள்ளவர்களுக்கும் இந்த வகையில் உற்சாகம் அளித்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

அடுத்து, கால்நடை விஷயமாகப் பல முக்கியமான அம்சங்களைச் செய்திருக்கிறார்கள். கால்நடைச் சந்தைகள் ஆங்காங்கு கூட்டப்படுகின்றன. பக்கத்தில் திருவொற்றியூரில் கால்நடைச் சந்தை கூடுகிறது. கால்நடைச் சந்தை கூடும் இடத்தைப் பார்த்தால் மிகவும் சங்கடமாக இருக்கும். மாடு, வைக்கோல், மனிதர்கள் அத்தனைபேரும் ஒன்றாக உருண்டு புரண்டு கொண்டிருப்பார்கள். அந்த இடம் ஒரே சகதியாக இருக்கும்; பார்க்கச் சகிக்காது. கால்நடைச் சந்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருந்தால், அங்கே மாடு வாங்க வரக்கூடியவர்களுக்கு மாடு வாங்க ஆசை ஏற்படக்கூடும். அந்த முறையிலே கால்நடைச் சந்தைகளைக் கண்காணிக்கவேண்டும். கால்நடைச் சந்தைகள் கூடும் இடங்களில் எல்லாம் அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் அழகான முறையில் வசதி செய்து கொடுப்பது மிகவும் அவசியம் என்று நான் எண்ணுகிறேன்.

அதுபோன்று, சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் பால் பண்ணை பெரும் தொல்லையாக இருக்கிறது. 75 ஆயிரம் லிட்டர் சப்ளை செய்யவேண்டும் என்று திட்டம். ஆனால் 24 ஆயிரம் லிட்டர்



9th August 1965] [திருமதி டி. என். அனந்தநாயகி]

தான் சப்ளை செய்யப்படுகிறது. இது கூட சப்ளை செய்ய முடியுமா, இன்றோ நாளையோ நிறுத்திவிடுவார்களோ என்ற கவலை, இதை நம்பி வாழ்கிற மக்கள் படுகிற கஷ்டம் சொல்ல முடியாது. ஒரு பண்ணை போதவில்லை என்றால் தென் சென்னையில் இன்னொரு பண்ணை ஆரம்பிக்க வேண்டும். ஓரிடத்தில் அரசாங்கப் பண்ணை நடக்கிறது என்றால் இன்னொரு இடத்தில் தனியார் துறையிலாவது இன்னொரு பண்ணையை ஆரம்பித்து போட்டி உணர்ச்சி ஏற்படச் செய்யலாம். இல்லை என்றால் அங்கே 20 மாடுகள் வைத்திருக்கக் கூடியவர்களை அதன் பங்குதாரர்களாகவாவது மாற்றி எப்படி அந்தப் பண்ணையை மக்களுக்கு அதிக அளவு பயன்படக் கூடியதாக சீர்திருத்தி அமைக்க முடியும் என்பதை உடனடியாகப் பரிசீலனை செய்தாகவேண்டும். காரணம், ஆண்டுக்கு ஆண்டு ஐந்து லட்சம், பத்து லட்சம், நாற்பது லட்சம் என்பதாக அதிலிருந்து வரக்கூடிய நஷ்டம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே உடனடியாக அதில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து எப்படி அதைச் சீர்திருத்தி அமைக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்ய ஒரு நிபுணர் குழுவை கட்டாயம் அரசாங்கம் ஏற்று அமைக்க முன் வரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். பாலுக்கு இன்றைக்கு சென்னை நகர மக்கள் படுகிற நெருக்கடி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதில் உடனடியாக, அவசரமாகக் கவனம் செலுத்தப்படுவது தேவை என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சென்னை நகரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டது. அது என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. உடனடியாக அந்த மாஸ்டர் ப்ளானை செயல்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நகர ½ மணி ஆகிறது. போக்குவரத்து நெரிசலைத் தணிக்க சென்னைச் சுற்றுப்புறத்தைச் சுற்றியாவது ப்ரீமூவ்மெண்டுக்கு வழிவகை செய்யப்படவேண்டும். அதேபோன்ற நகரத்தில் இருக்கிற பல பகுதிகளையும் இணைக்கிற முறையில் அண்டர் கிரவுண்டு டிரயின் வசதியை ஏற்படுத்த முடியுமா என்பதையும் கவனிக்க வேண்டும். பக்கிங்ஹாம் கால்வாயில் ஃபெர்ரி போக்குவரத்தை ஏற்படுத்தியாவது, ஹாங்காங்கில் செய்திருக்கிறார்களே அதுபோல பத்து நிமிஷத்திற்கு ஒரு போட்டு போக வசதி செய்து கொடுத்து ஜன நெரிசலை சமாளிக்க முடியுமா என்பதிலும் கவனம் செலுத்தப்படவேண்டும். இவ்வளவும் செய்தால் தான் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் சில வருஷங்கள் கழித்து ஜனங்கள் நகரவாவது முடியும், இல்லாவிட்டால் கிளம்பிய இடத்திலேயே நின்று கொண்டிருக்க வேண்டியதுதான். காரணம், நாளுக்கு நாள் போக்குவரத்து நெருக்கடி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. நான்கு ரோடுகள் சேரும் இடங்களில் சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு தேக்கம் இல்லாமல் ஜனங்கள் நகர்ந்து கொண்டே இருப்பதற்கு வழி செய்தால்தான் சென்னை நகரம் பார்ப்பதற்காவது கொஞ்சம் அழகாக இருக்கும். அதோடு கழிவு நீரையெல்லாம் -கொண்டு

போய் கடலில் கொட்டி நாற்றமடிக்கச் செய்கிறார்கள். கழிவு நீரைக் கடலில் கலக்காமல் அதை வேறு வகையில் பயன்படுத்தக் கூடிய திட்டத்தை கையாள்வதற்கு வழி வகை செய்வது மிகமிக அவசியம். இதையெல்லாம் யோசித்து உடனடியாக சென்னை நகரைப் பொறுத்தவரையில் ஒரு மாஸ்டர் ப்ளானைத் தயார் செய்து பல கோடி ரூபாய் செலவானாலும் கூட உடனடியாக அதை நான்காவது திட்ட காலத்திற்குள் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்துள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகல் குறிப்பின் மீது இங்கே நடைபெறுகிற விவாதத்தில் எனக்குப் பேசக் கிடைத்த வாய்ப்புக்கு நான் எனது நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிற நேரம் ஏற்கனவே நம்முடைய நாட்டில் திட்டமிட்ட பொருளாதார அடிப்படையில் 3 ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி அதன் பலாபலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டங்களின் கருத்துரையாக நான்காவது திட்டத்தை இங்கே வழங்கியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய உரையில் முதல் இரண்டு பக்கங்களை நன்றாகப் படித்தேன். என்னைப் பொறுத்தவரையில், நான் சார்ந்திருக்கிற கட்சியைப் பொறுத்தவரையில் அந்த முதல் இரண்டு பக்கங்களிலும் அவருடன் எங்களுக்கு நூற்றுக்கு நூறு உடன்பாடு தான். ஆகவே, அவரோடு கைகோர்த்துக்கொண்டு 2 பக்கம் வரையில் சென்றேன். ஒரு வகையில் அவரோடு கைகோர்த்துக் கொள்கிற வயது எனக்குக் கிடையாது என்றால் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்றேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

**கனம் சபாநாயகர்:** பின்பற்றிச் சென்றிருந்தால் நீங்களும் இந்தப் பக்கம் இருந்திருக்க வேண்டும். (சிரிப்பு)

**திரு. கே. ஏ. மதியழகன்:** முதல் இரண்டு பக்கம் பின்பற்றிச் சென்றேனே தவிர, மூன்றாவது பக்கத்தில் இருந்து அவருடைய பாதையும், எங்களுடைய பாதையும் நேர்மாறாகிவிட்டது. அவர்கள் பின்னால் போகக் கூடாது என்பது அல்ல. போவதற்கு நாங்கள் பெருமைப்பட்டிருப்போம். போக முடியவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் "பொருளாதார முன்னேற்றம், சமுதாய நீதி என்ற இரண்டு முக்கிய குறிக்கோள்களையும், ஜனநாயகக் கட்டுக்கோப்பிற்குள்ளேயே எய்துவதற்கு வழிவகை செய்வதே ஆகும்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். அவர் வெளியிட்டுள்ள அபிலாஷையை நாங்களும் ஏற்கிறோம். ஆனால் நான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு சொல்லிக் கொள்வேன். நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம். இறுதிக் கட்டத்தில் இருக்கிற நேரத்தில் இந்த



நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் நான்காவது திட்டத்தைப்பற்றி தீர ஆலோசிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. எங்களைப் பொறுத்த வரையில் முதல் மூன்று திட்டங்களினாலும் நாட்டு மக்களுக்கு சுபிட்சம் வர வேண்டும் என்றே விரும்பினோம். அதற்காகவே திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற ஒத்துழைத்தோம். நலம் வந்ததா என்பதைத்தான் நாம் நின்று சிந்தித்தாக வேண்டும். விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்க தீவிரமாக உழைக்கவேண்டும் என்று நாங்கள் சொல்லாமல் இருந்ததில்லை. தொழிலாளர்கள் உற்பத்தியைப் பெருக்க கடுமையாக உழைத்தாக வேண்டும் என்று நாங்கள் சொல்லாமல் இருந்ததில்லை. விவசாயப் பெருங்குடி மக்கள் கடுமையாக உழைத்தும், தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கில் கடுமையாக உழைத்தும் இன்றைக்கு நாட்டில் இருக்கக் கூடிய நிலைமை என்ன? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறதா? உயரவில்லை என்றால் ஏன் உயரவில்லை என்பதைக் கொஞ்சம் நின்று சிந்தித்தாக வேண்டும்.

சுதந்திராக் கட்சியினரைப் போல திட்டமே கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. திட்டம் வேண்டும், ஆனால் போடுகிற திட்டங்கள் எல்லாம் ஒரு சில நிலப்பிரபுக்களோ, ஆலை முதலாளிகளோ, பணக்கார வர்க்கத்தினரோ பயன் அடையக் கூடிய வகையில் அமையக்கூடாது என்று வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆக, இருதலைக் கொள்ளி எறும்பு என்பது போல காங்கிரஸ்--சுதந்திரா இரண்டுக்கும் நடுவில் உள்ள கோணம் நாங்கள் கொண்ட கொள்கை. காரணம், இன்றைக்கு நாட்டில் உள்ள மக்களின் எண்ணங்கள் எல்லாம் வளர்ந்துவிட்டது தாங்களும் நன்றாக வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நீர்ப்பாசன வசதி வேண்டும், குடியிருக்க நல்ல வசதி வேண்டும், மருத்துவ வசதி வேண்டும், தங்கள் வாழ்வு நல்ல முறையில் மிளிர வேண்டும் என்றெல்லாம் விழைகிறார்கள். நாட்டு மக்கள் எல்லோருடைய வாழ்வையும் மிளிர வைக்க வேண்டும் என்பதுதான் நாங்கள் கொண்ட கொள்கைக் கோணம். இந்தக் கோணத்தில் இருந்து பார்க்கிறபோது அரசாங்கம் கொடுத்துள்ள திட்டங்கள் எல்லாம் வசீகரமானதாகத்தான் இருக்கின்றன. அந்த வசீகரமான திட்டங்களை அமுல் படுத்துவதில் நாங்கள் பார்க்கிற பார்வை இல்லை என்பதை உணர்கிறோம். காலம் எல்லாம் உழைத்து உழைத்து உடல் கருகி நிலத்திலே உழைத்தும் அரை வயிறு நிரம்பாத ஒட்டிய வயிறுடன் தங்கள் குடும்பத்தோடு பட்டினி கிடக்கிற விவசாயப் பெருங்குடி மக்களைத்தான் இன்றைக்கும் பார்க்கிறோம்.. பாடுபட்டு நிலத்தில் உழைப்பவர்களுக்கு இன்றைக்கும் நிலம் சொந்தமாக்கப்படவில்லை. தொழிலாளர்கள் மணிக்கணக்கில் பாடுபட்டு உழைத்துக் கொண்டே இருக்கிறார்களே தவிர ஒரு சில பணக்காரர்கள்தான் மேலும், மேலும் நம்முடைய திட்டங்களினால் பலன் அடைந்து பணக்காரர்களாகிக் கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் நாட்டு நிலைமையை எடுத்துப் பார்த்தால் தெரியும். கீழ்த்தர மக்களும், நடுத்தர மக்களும், அரசாங்க ஊழியர்களும் செங்குத்தான விலைவாசி உயர்வினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை நாம் உணர

[திரு. கே. ஏ. மதியழகன்] [9th August 1965

வேண்டும். இந்த நாட்டில் நாம் நிறைவேற்றிய மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினால் என்ன பலன் ஏற்பட வேண்டுமென்று நினைத்தோமோ அதற்கு நேர்மாறான எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறந்தோ மறைத்தோ விட்டு விட்டால், இவற்றைப் புறக்கணித்துவிட்டால் நாம் போடுகின்ற நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் லட்சியத்திற்கே ஊறு விளைவித்தவர்களாவோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த மூன்று திட்டங்களினால் ஏற்பட்டுள்ள எதிர்மறை விளைவுகள் கொஞ்சநஞ்சமல்ல. ஏழை எளியவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. ஒருவனுடைய வருமானம் 390 ரூபாய் என்றால் 1966-இல்—அதுவும் ரூபாயின் மதிப்புக் குறைந்து வருகிறபோது—ஒரு ரூபாய் கூட ஒரு நாளைக்கு இல்லை என்றால் இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரமான எதிர்மறை விளைவை நாம் மறைத்து விட முடியாது. முக்கியமான எதிர்மறை விளைவு ஏகபோக முதலாளித்துவம் வளர்ந்து வருவது தான். தேசிய வருமானமெல்லாம் எங்கே போயிற்று? எங்கே போயிற்று? என்று பெருந் தலைவர் காமராஜர் முதல் கடைக்கோடிக் குடியானவன் வரை கேட்கிறான். பணமூட்டைகளிடம் தேசிய வருமானம் சென்று விட்டது. தேசிய வருமானம் சென்று தங்கியது ஏகபோகக்காரர்களிடம். இதன் காரணத்தால்தான் இன்றைக்கு பயங்கர விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மூன்று பயங்கரமான விளைவுகள் ஏற்படப்போகின்றன. ஒன்று பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. இரண்டாவது நமது வெளிநாட்டுக்கொள்கை செல்வாக்கை இழக்கப்போகிறது. மூன்றாவதாக நாம் பெருமையுடன் பேசுகின்ற ஜனநாயக அமைப்புக்கே பேராபத்து ஏற்படப்போகிறது என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தொழில்களில் உள்ள மூலதனங்களிலே 67 சதவிகிதம் இந்தியாவிலே உள்ள யாரிடம் இருக்கிறது. மேல்தட்டிலே இருக்கின்ற ஒரு பத்து வர்த்தகக் குடும்பங்களிடமும், பெரும் பணக்காரர்களிடமும், நாட்டை ஆட்டிப்படைக்கின்ற அவர்களிடம் இந்த 67 சதவிகிதம் மூலதனம் முடங்கிக் கிடக்கிறது. ஒரு பக்கம் செல்வச் செழிப்பு. இன்னொரு பக்கம் வறுமைப் படுகுழி. திட்டத்திலே எதிர்மறை விளைவை ஏற்படுத்தும் மற்றொரு வாய்ப்பு, இன்றைக்கு ஆளுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற கட்சிக்கும், பெரிய பண முதலாளிகளுக்கும் இடையே இருக்கின்ற உறவு மிகவும் நெருங்கியதாக இருப்பதுதான். இந்த உறவு நெருக்கத்தின் காரணமாகத்தான் இந்த நாட்டிலே இன்றைக்கு லஞ்ச ஊழல் தலைவிரித்தாடுகின்றது. ஒரு பக்கம் ஆளுகின்ற கட்சிக்காரர்களிடம் அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன. இன்னொரு பக்கம், ஒரு சிலரிடம் பணம் குவிந்து கிடக்கின்றன. இவை இரண்டும் சேர்ந்திருப்பதால் ஒரு பெரிய ஆபத்து ஏற்பட இருக்கிறது இன்றைக்குத் தேசிய வருமானத்தைப் பெருக்குவதற்காக எங்களைப் போன்ற முற்போக்குச் சக்திகள் சொல்வது என்ன? உணவு தானிய விநியோகத்தை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும். அன்னியக் கம்பெனிகளின் மீது போதிய கண்காணிப்பு வைக்க வேண்டும். பாங்குகளை தேசிய மயமாக்க வேண்டும். உற்பத்தி சாதனங்களை



9th August 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

தேசிய உடைமையாக்க வேண்டும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். இவைகளை நாங்கள் சொல்லி வருகிறோம். இவைகளை அரசாங்கம் ஏன் செய்யவில்லை? செய்யாதது தற்செயலாக நிகழ்ந்துவிட்ட சம்பவம் அல்ல. மேல்தட்டிலே இருக்கின்றவர்களுடைய நலன்களுக்கு ஊறுசெய்கின்ற இந்தக் காரணங்களினால் இவர்கள் ஒத்துக்கொள்வதில்லை.

இன்றைக்குப் பெருமையோடு பேசிக்கொள்ளப்படுகிறது, பொதுத் துறை வளர்ந்து வருகிறது. பொதுத் துறை நிர்ணயமாகி விட்டது என்றெல்லாம். ஆனால் பப்ளிக் செக்டார் எங்கே வளர்ந்திருக்கிறது? இத் துறையைப் பற்றித் தெளிவாகச் சொல்லவேண்டுமென்றால் மிகக் குறைவான நேரமே இருப்பதால் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பொதுத் துறையின் நிலைமை என்ன? சேதாரம், செயல் திறமையின்மை, ஊழல் இவைகள்தான். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் பொதுத் துறை மிகமிகக் கொஞ்சம். இன்றைக்கு எனக்கிருக்கிற பெரிய பயம் இந்தப் பொதுத் துறையை, ஏகபோகக்காரர்கள், முதலாளிகள் இவர்கள் எல்லாம் தங்களுக்காக இதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதுதான். பொதுத்துறையில், சேதாரம், செயல் திறமையின்மை, ஊழல் இவைகள் தினம் நடந்துகொண்டிருக்கின்றன. பொதுத் துறை எங்கே வளர்ந்திருக்கிறது? நம்முடைய மாநிலத்தில் 2, 3 பொதுத் துறைகள் தான் இருக்கின்றன. பெரிய பொதுத் துறைகளில்லை. இவைகளில் ஒன்று தொழில் அமைச்சர் அவர்களுடைய ஆதிக்கத்திலே இருக்கிற பஸ் டிரான்ஸ்போர்ட். இன்னொன்று, மாதவரம் பால்பண்ணை. இந்த டிரான்ஸ்போர்டு டிபார்ட்மெண்டில் 1,001 பஸ்கள் இருக்கின்றன. ஏழு, எட்டு கோடி ரூபாய் வரையில் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. டிரான்ஸ்போர்டு அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள் மொத்த லாபம் ரூபாய் 23 ஆயிரம் என்று. ஆயிரம் பஸ்கள் ஓடக்கூடிய ஒரு இடத்தில், 7, 8 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிற இடத்தில் 23 ஆயிரம் ரூபாய்தான் மொத்த லாபம் என்ற நிலைமை இருக்கிறது. ஏன்? பத்து குதிரை வண்டிகள் வைத்திருந்தால்கூட சென்னை நகரில் ஒருவன் 23 ஆயிரம் ரூபாய் லாபத்தைப் பெற்றுவிடுவான். ஆகவே, 1,000 பஸ்கள் வைத்து, 7, 8 கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்தப்படும் சர்க்காருடைய துறையில் கிடைத்த லாபம் இவ்வளவுதான். இதைத் தவிர இன்னொரு பயங்கரமான உண்மையை நான் கனம் சபாநாயகர் அவர்கள் மூலம் சொல்லிக்கொள்கிறேன். இந்த டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் 7, 8 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிற இந்த டிரான்ஸ்போர்ட்டில் ஸ்டாக் வெரிஃபிகேஷன் சர்டிபிகேட்டுகள் 8 வருஷ காலமாக வரவில்லை. தொண்ணூறு ஸ்டாக் வெரிஃபிகேஷன் சர்டிபிகேட்டுகள் வரவில்லை. உண்மையில் அவைகள் மூன்று மாதத்திற்குள் வரவேண்டும். ஆனால் 1954-ஆம் வருடத்திலிருந்து 1963-ஆம் வருடம் வரையில் மொத்தமாக வராத ரிப்போர்ட்டுகள் 90. ஏன்? தணிக்கைக் குழுக்கூட இதைப்பற்றிக் கூறியிருந்

கிறது. இது பெரிய ஊழல் போல் இருக்கிறது என்று கூறியிருக்கிறது. சர்க்கார் இதற்கு என்ன பதில் சொன்னார்கள்? இன்றைக்கு 1954-ஆம் வருடத்திலிருந்து 1963-ஆம் ஆண்டு வரையில் வரவேண்டிய ஸ்டாக் வெரிஃபிகேஷன் சர்டிபிகேட்டுகள் 90 வரவில்லை. ஆனால் சர்க்கார், 1954-ஆம் வருடத்திலிருந்து, 1959-ஆம் வருடம் வரையில் உள்ள பைல்கள் எல்லாம் திருட்டுபோய்விட்டன என்று கொஞ்சம்கூடப் பொறுப்பில்லாமல் வெட்கக் கேடான முறையில், நம்பிக்கை மோசம் செய்வதைப்போல், சிந்திக்காமல் சமாதானம் சொல்லியிருக்கிறார்கள் என்றால், இது அருகதையுடையதுதானா என்பதைப்பற்றி தாங்கள்தான் தீர்ப்பளிக்க வேண்டும்.

அதைப்போன்று மாதவரம்பண்ணையை எடுத்துக்கொண்டால் மூன்று வருஷ காலமாக 78 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆளுக்கு அரைப்படி பாலை யாருக்காவது கொடுத்திருந்தால்கூட அன்னதானமாகப் போய் இருக்கும். முதல் வருஷத்தில் 14 லட்ச ரூபாய் நஷ்டம், அடுத்த வருஷத்திலே 24 லட்ச ரூபாய் நஷ்டம், அதற்கடுத்த வருஷத்தில் 40 லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பவற்றைக் கவனிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

அரசாங்கத்தினுடைய கையாலாகாத்தனத்தையும் எடுத்துக் காட்டவேண்டுமென்றால் அதற்கு விவசாயத் துறையினைப்போல் வேறு எந்த துறையையும் அவ்வளவு துலக்கமாக விளக்கமாக எடுத்துக்காட்டமுடியாது. உணவு உற்பத்தியைப்பற்றிச் சொல்வதே வெட்கக் கேடாக இருக்கிறது. இருபது வருஷங்களுக்கு இன்னும் இறக்குமதி செய்வோம் என்று சொல்வது வெட்கக் கேடானது. நிலச் சீர்திருத்தச் சட்டம் செய்து நான்கு வருஷங்கள் ஆயிற்றே, என்ன ஆயிற்று? பட்டக்காரர் நிலங்கள், வடபாதி மங்கலத்து நிலங்கள், உதகையிலுள்ள ஸ்டேன்ஸ், புரூக் பாண்ட் காபி, தேயிலைத் தோட்டங்கள், வலிவலம் தேசிகர் தென்னந் தோப்புகள் இவைகளைக்கூட விட்டுவிடுங்கள் மீதி நிலங்களில் இந்தச் சட்டத்தின்மூலம் எத்தனை ஏக்கர் நிலத்தை வசப்படுத்தியிருக்கிறார்கள்? எந்தக் குடியானவனுக்குப் பட்டா போய்ச் சேர்ந்திருக்கிறது? இன்றைக்கு ஏழை விவசாயி கடன் சுமையினால் குத்தகை பளுவினால் வரியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறான். எத்தனை ஏக்கர் யார் யாருக்குப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால் இந்த நிலைமையில் எப்படிப் பெருகும்? எனக்கு அதிக நேரம் கிடையாது. ஆகையால் சுருக்கமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. விதைப் பண்ணைகள் வைத்தார்கள். இதில் எத்தனை விதைப் பண்ணைகள் பலன் தந்தன? விதைப்பண்ணை என்றால் நாற்றங்கால் என்று தானே பொருள்? நாட்டினுடைய நாற்றங்கால்கள் சரியானபடி இருக்க வேண்டாமா? இந்த நாட்டிலே 250 விதைப் பண்ணைகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். அவைகளில் 114 விதைப் பண்ணைகளில் நஷ்டம். என்ன நியாயம்? என்ன நிலைமையில் அந்த நாற்றங்கால்கள் இருக்கின்றன? அதைப்போன்றே கிணறு வெட்டுவதற்கு 77 லட்ச ரூபாய் கொடுத்தார்கள். ஏழாயிரத்து நானூற்று இருபத்



தைந்து கிணறுகள் வெட்டுவதற்கு 77 லட்ச ரூபாய் கொடுத்தார்கள். இது 6, 7 வருஷங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே கிணறு வெட்டாமலே பணத்தை வாங்கிக்கொண்டவர்கள் எத்தனை பேர்? 1,629 பேர்கள் கிணறு வெட்டாமலே பணத்தை வாங்கிக் கொண்டார்கள். இதிலே 10 லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர பழைய பாக்கியையாவது கொடுத்தார்களா என்றால் இன்னும் 25 லட்ச ரூபாய் பாக்கி வரவேண்டியிருக்கிறது. இதில் ரொம்ப அதிகமாகப் பாக்கி எங்கேயிருந்து வரவேண்டுமென்றால், கனம் முதலமைச்சர் அவர்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து அதிகமாக பாக்கி வரவேண்டியிருக்கிறது. பெருமையாகச் சொல்கிறார்கள், நன்றாக நடக்கிறது என்று. என்ன நியாயம் இருக்கிறது? விவசாயத்தைப் பொறுத்த அளவிலே குடியானவனுக்கு ஒரு எழுச்சி வேண்டாமா? குடியானவனுக்கு நல்ல உற்சாகம் இல்லாமல் இருந்தால் எப்படி உற்பத்தியாகும்? எப்படி நிலைமை அபிவிருத்தியடையும்? (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஐந்து நிமிஷங்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக்கூட அவர்கள் செல்வ ஆதாரங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை எப்படி அமைக்கப் போகிறோம் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உரையிலே மிகத் தெளிவாக ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். அதிலே ஒரு வாசகத்தை மட்டும் நான் படிக்கிறேன். “வரி வசூலிப்பு நிர்வாகத்தைச் சீராக்குவதன் மூலமும், வரி கொடாமல் ஏமாற்றுவதைத் தடுக்க குறிப்பாக விற்பனை வரி, முத்திரைத் தீர்வைகள் போன்ற தலைப்புக்களின் கீழ் ஏமாற்றுவதைத் தடுக்க சட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாகவும் இதர நடவடிக்கைகள் மூலமாகவும் நான்காவது திட்டத்திற்காக மாநில அரசாங்கம் திரட்ட வேண்டிய ஆதாரங்களில் கணிசமான பங்கைப் பெற முடியும்”. இதுதான் அவர்கள் கோடிட்டுக் காண்பித்திருப்பது. அதைப் பார்க்கும்போது தோற்றத்திலே அது மகிழ்ச்சித்தரக் கூடியதாகத்தான் இருக்கும். இதற்காக 100 கோடி ரூபாயை ஒன்று மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டும்; இல்லையென்றால் இவர்கள் வரி போடப் போகிறார்கள். வரிச் சிக்கனத்தை அதிகப்படுத்தப் போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனுடைய பொருள் என்ன? இதனுடைய அர்த்தம் எந்தப் பணக்காரர்களால் வரிகளைத் தாங்கிக் கொள்ள முடியுமோ அவர்களுக்கு வரி போடப்போவதில்லை என்பதுதான். இரண்டாவது விவகாரம், ஏற்கனவே பெரும் வரிச் சுமையைச் சுமந்து கொண்டிருக்கும் ஏழை எளிய மக்கள் மீது மேலும் வரி போடப் போகிறோம் என்பதுதான். அந்த அளவுக்கு இங்கே, இந்த வாசகத்திலே ஏமாற்றுச் சொற்றொடர்தான் காணப்படுகிறது. இரண்டாவது பினான்ஸ் கமிஷன் அறிக்கையிலே திருவாளர் சுப்ரமணியம் அவர்கள் நிதி மந்திரியாக இருந்த நேரத்திலே வான் முட்டுகின்ற அளவிலே வரிகள் போடப்பட்டிருக்கின்றன. “The taxation is exceptionally heavy” என்று சொல்லிவிட்டு அவரே

25 கோடி ரூபாய்க்கு வரி போட்டார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மூன்று ஆண்டுகளாக நிதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவரது ஆண்டுகள் வளர வேண்டும். நிதி மந்திரியான பிறகு பினான்ஸ் கமிஷனுக்கு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். இதிலே அவர்கள் அதைக் குறிப்பிடவில்லை. இதிலே உள்ளது ஏமாற்றுச் சொற்றொடர் என்று சொன்னேன். இவர்கள் நிதி மந்திரியானதிலிருந்து போட்ட புது வரிகள் 15. அவ்வளவும் இந்தச் சபையிலேதான் நிறைவேறி இருக்கிறது "Increase in the rate of assessment increase in the rate of tax on Motor Vehicles, increase in the rate of Stamp duty" என்ற வரிசையிலே 15 வரிகள் 1965 வரையிலே. அடிஷனல் டாக்ஸ் ஆக போடப்பட்டிருக்கின்றன. ஐம்பத்து மூன்று கோடி ரூபாய் அளவுக்கு இவர்கள் நிதி அமைச்சராக இருந்த காலத்திலே இந்த நாட்டு மக்கள் மீது புதிய வரி போடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக வரி போடப்பட்டதில் திரு. சுப்பிரமணியம் பங்கு 25 கோடி ரூபாய். அடுத்து வருகிற நான்காவது திட்டத்திற்காக 100 கோடி ரூபாயாவது இந்த மாநில மக்கள்மீது வரி போடப்பட்டு மக்களைக் கசக்கிப் பிழிகிற அளவுக்கு உள்ள நகல் திட்டந்தான் இன்றைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் திட்டம். அதோடு மத்திய சர்க்காரிலிருந்து வேறு வரிகளைப் போடப் போகிறார்கள். இவற்றையெல்லாம் நம்முடைய மாநில மக்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள்?

நான் இந்த நேரத்தில் இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்குக் குடியிருக்க நிலங்கள் கொடுக்கப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இது வரப்போகிற தேர்தலுக்காக காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையின் பிரகடனமாகத்தான் இருக்கிறதே தவிர, குடியிருப்பு மனைகள் ஹரிஜனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. இதற்காக 5,000 ஏக்கர் நிலம் ஒதுக்கி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நாட்டிலே இன்று 75 லட்சம் ஆதித் திராவிட மக்கள் இருக்கிறார்கள். பதினைந்து லட்சம் குடும்பங்கள் என்று வைத்தாலும் கூட எப்படி இதை வைத்துக்கொண்டு அவர்களுக்கெல்லாம் மனைக்கட்டுகள் கொடுக்கப் போகிறார்கள்? இது மக்களை மயக்குகின்ற சொற்றொடராக இருக்கிறதே தவிர குடியிருப்பு மனைக்கட்டு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதாக இல்லை. இவர்கள் முகமூடி அணிந்த சுதந்திரக்காரர்களாகத்தான் ஐந்தாண்டுத் திட்டத்தை அமல் நடத்துகிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இந்த நிலைமை மாறுதவரையில் ஏழை எளிய மக்களுக்கு விமோசனம் இல்லை; கதிபிடம் இல்லை என்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. நா. மகாலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நான்காவது திட்ட அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான்காவது திட்டமானது நமது தேசத்திற்கு 22,500 கோடி ரூபாய் அளவுக்கு இருப்பதா அல்லது அதைக் குறைப்பதா என்ற பிரச்சினை இன்று திட்டக் கமிஷனிலிருந்து தேசத்தில் இருக்கக்



V2N,31'N65
N65.31.5



கூடிய பல்வேறு ராஜ்ய அரசாங்கங்கள் வரையில் எல்லோரும் விவாதிக்கக் கூடிய சூழ்நிலையில் நம்முடைய ராஜ்யத்தினுடைய நான்காவது திட்டத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் நான்காவது திட்டமானது 815 கோடி ரூபாய் கொண்ட திட்டமாக மத்திய சர்க்கார் உதவியோடு நிறைவேற்றப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் நான்காவது திட்டத்தில் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தி அதன் மூலம் தொழில் வளத்தை நம்முடைய ராஜ்யத்தில் அதிகமாக்க வேண்டுமென்ற குறிப்பு முக்கியமாகக் காணப்படுகிறது. நான்காவது திட்டத்தைப் பொறுத்தவரையிலே விவசாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தாலும், சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையிலே ஏற்கனவே விவசாயத் துறையில் அதிகமான நடவடிக்கை எடுத்துக் கொண்டதன் பயனாகவும், ராஜ்யத்தில் வேறு போதுமான அளவு தண்ணீர் உள்ள நதிகள் இல்லையென்ற காரணத்தாலும் தொழிற் துறையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசும்போது இதை ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்பதே புரியாமல் இருக்கிறது. எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் அடுத்த தேர்தலுக்கு இப்போதே தயாராகுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திராக் கட்சி, முஸ்லிம் லீக் போன்றவர்கள் ஒன்றாகச் சேர்ந்து காங்கிரசை எதிர்க்கப் போகிறார்கள் என்ற அறிக்கை வெளியே வந்திருக்கிறது. எனக்கு முன்னதாகப் பேசிய கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் 'காங்கிரஸ் கட்சியானது முகமூடி அணிந்த சுதந்திரக் கட்சியாகப் பரிமளிக்கிறது' என்று சொன்னார்கள். ஆனால் காங்கிரசை எதிர்க்கக் கூடிய இந்த மூன்று கட்சிகளும் அவர்களுடைய பொருளாதாரக் கொள்கை என்ன என்பதை வெளிப்படுத்தவில்லை. ஆக, இந்தத் திட்டத்தை சுதந்திரக் கட்சியினர் எதிர்க்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் பெரிய திட்டம் வேண்டுமென்று கூறுகிறதே தவிர, முன்னாலே பேசிய கனம் அங்கத்தினர் அவர்களுடைய பேச்சு பூராவும் பார்த்தால் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதாகத்தான் இருக்கிறதே தவிர, ஆதரிப்பதாக இல்லை. வரி போடுவதை எதிர்க்கிறார்கள்; வரிகள் வந்து விட்டன என்று சொல்கிறார்கள். அவர்களுடைய தலைவர் கனம் அண்ணாத்துரை அவர்கள் இந்தச் சபையிலே முன்பு பேசும்போது ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டம் வேண்டும் மூன்றாவது திட்டத்திற்கு என்று பேசினார்கள். அந்த மூன்றாவது திட்டத்திலே அவ்வளவு தொகை வர முடியாவிட்டாலும், இந்த நான்காவது திட்டம் 815 கோடி ரூபாய் அளவுக்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதையும் கூட அவர்கள் எதிர்க்கிறார்கள். அவர்களுடைய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படை என்ன என்பது புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

C1,919

[திரு. நா. மகாலிங்கம்] [9th August 1965

இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதிலே அரசாங்கம் சட்டசபையை இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கலந்திருக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். மூன்றாவது திட்டத்தைத் தயாரிக்கும்போது சட்டசபையில் இருந்து ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் மூலமாக எந்தெந்தத் திட்டங்கள் சேர்க்கப்பட வேண்டுமென்பதைப் பற்றிப் பல மாதங்கள் சிந்தனை செய்து சேர்க்கப்பட்டது. அந்த மாதிரி ஒரு குழு அமைக்கப்பட்டு அதிலே சட்டசபை அங்கத்தினர்கள் இடம் பெற்று தங்களுடைய யோசனைகளைக் கூறியிருந்தால் நலமாக இருந்திருக்கும். இப்போது ஒருசில மணி நேரங்களிலே திட்டத்தைப் பற்றிப் பேசுவது என்றால் பல்வேறு விஷயங்களை எடுத்துச் சொல்ல முடியாது போய்விடுகிறது. அவ்வாறு ஒரு குழுவினை அமைத்திருந்தால் நம்முடைய கருத்துக்களை அந்தக் குழுக் கூட்டத்திலே எடுத்துச் சொல்லியிருக்க முடியும். அந்த மாதிரிச் சந்தர்ப்பம் கொடுக்காதது என் என்று தெரியவில்லை. இனி மேலாவது இந்த மாதிரி விவாதங்கள் வரும்போது அதிக நேரம் ஒதுக்கி சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியது அவசியம்.

நான்காவது திட்டம் என்று சொல்லும்போது பொதுவாக தேசத்திற்கு 22,500 கோடி ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதிலே 4,000 கோடி ரூபாய் அயல்நாட்டு நாணயச் செலாவணியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இரண்டாவது திட்டத்தைப் பற்றி எடுத்துப் பார்த்தாலும், மூன்றாவது திட்டத்தைப் பார்த்தாலும், இறுதியாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் திட்டத்தைப் பார்த்தாலும், அயல்நாட்டு நாணய வசதி இல்லையென்ற அடிப்படையான அம்சத்தை நாம் உணர முடிகிறது.

ஆக, நான்காவது திட்ட காலத்தில் நான் அரசாங்கத்தை வேண்டுவது எல்லாம், இந்த திட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரை வலியுறுத்த வேண்டும். ஒன்று உள்நாட்டு வசதிகளை வைத்து நிறைவேற்றக் கூடிய திட்டங்கள், இரண்டாவது, வெளிநாட்டு நாணய வசதியை வைத்து நிறைவேற்றும் திட்டங்கள். இப்படி இதை இரண்டாகப் பிரித்தால் வெளிநாட்டு நாணய வசதி கிடைக்குமளவிற்கு அத்திட்டங்களை நிறைவேற்றலாம். உள்நாட்டு வசதிகளை வைத்து நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை குறைக்க வேண்டிய அவசியமே இருக்காது. ஆக, இப்படி மாற்றியமைத்தால் திட்டம் வெற்றிகரமாக முடிய வசதியாக இருக்கும். நாம் ஒரு சோஷலிச சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்று விரும்புகிறோம். அந்த ஒரு முறை வேண்டுமென்று சொன்னால் நாம் அமைக்கும் திட்டங்களினால் சமுதாயத்தில் அதிகப்படி லாபம் தனிப்பட்டவர்களுக்கு போகாமல் இருக்கவேண்டுமென்ற முறையில் திட்டங்களை அமைக்க வேண்டும். பொதுவாக தொழில் அமைச்சர் கனம் திரு. வெங்கட்டராமன் அவர்களிடம் சில திட்டங்களை குறிப்பிட விரும்புகிறேன். நகரப்புறங்களின் அபிவிருத்தியில் நம் தேசத்தில் 1981-ம் ஆண்டு



9th August 1965] [திரு. நா. மகாலிங்கம்]

லட்சியத்தை எடுத்துக் கொண்டால் புதிதாக 100 லட்சம் வீடுகள் கட்டவேண்டுமென்ற திட்டம் வரைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால் நம் ராஜ்யத்தை மட்டும் எடுத்துக் கொண்டால் 1½ லட்சம் ஏக்கர் வரை நகர்ப்புற இடங்களாக மாற்றியமைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. உடனடியாகச் செய்யவேண்டியது, அரசாங்கம் விவசாய நிலங்களை வீடு கட்டும் இடங்களாக மாற்றும் உரிமை அரசாங்கத்திற்கோ, நகரசபைக்கோ அல்லது கார்ப்பரேஷனுக்கோ, அல்லது அரசாங்கம் ஏற்படுத்தும் தனியாக இருக்கும் குழுவிற்கோ அமைய வேண்டுமே தவிர, தனிப்பட்டவர்களுக்கு இருக்கக் கூடாது என்ற ஒரு சட்டம் செய்தாக வேண்டும். அப்படி ஒரு சட்டம் செய்தால்தான் இந்த 1½ லட்சம் எக்கரை எடுத்து வீடு கட்டும் திட்டத்தை அமுல் செய்வதில் பத்து ஆண்டுகளுக்குள்ளாக 550 கோடி ரூபாய் வரை அரசாங்கத்திற்கு மிச்சம் ஏற்படும் என்பதை புள்ளிவிவரங்களுடன் அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டிருக்கிறேன். அதுபற்றி இன்னும் ஒன்றும் பரிசீலனை செய்யப்படவில்லை. இதை 800 கோடி ரூபாய் திட்டத்தோடு அதிகமாகச் சேர்த்துக் கொள்ள முடியும். தொழில் துறையை எடுத்துக் கொண்டால் திருச்சியில் இருந்து விழுப்புரம் வரை இருக்கும் பிரதேசத்தில் ஒரு தொழிற்சாலை கூட இல்லாமல் மிகப் பிற்போக்காக இருக்கிறது. அந்தப் பிரதேசத்தில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் அமைக்கவேண்டும். அங்கு பல தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டும், அதற்கு காவேரியில் இருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டும், நாஷனல் ஹைவேஸ் விஸ்தாரமாக அமைக்கப்படவேண்டும் என்ற திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதைப்பற்றியும் சிந்திக்கவேண்டும். உள்நாட்டு தண்ணீர் போக்குவரத்து மிக அவசியம். நம் ராஜ்யத்தில் தொழில் அபிவிருத்தி மிக அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய போக்குவரத்து வசதி போதுமானதாகயில்லை. ப்ராட் கேஜ் வேண்டுமென்று சொன்னார்கள். அது வரும் என்று சொல்லப்படுகிறது. அது வந்தாலும் போதாது. நம் ராஜ்யத்தில் காவேரி ஆறு ஒன்றுதான் இருக்கிறது. அங்கு படகுகள் ஓடும்படி செய்ய வேண்டும். பாரதியார் சிந்து நதியில் படகு ஓட்டுவது பற்றி சொன்னார்கள். 'காவேரியில் படகுகள் நாகப்பட்டணத்திலிருந்து மேட்டூர் வரை ஹொகனெக்கல் திட்டம் வந்தால் மைசூர் வரை படகுகளில் போகும் திட்டத்தை அமைக்கவேண்டும். அதற்கான ஒரு திட்டத்தை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். அதற்கு 60 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கு கொடுத்திருக்கிறேன். அதிலிருந்து 4 லட்சம் கிலோ வாட் மின்சாரம் வரும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நான்காவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இன்னும் அது பரிசீலனை செய்யப்படவில்லை என்பதைப் பார்க்கிறபோது வருத்தமாக இருக்கிறது. இது போன்று பல திட்டங்கள் இருக்கின்றன.

[திரு. நா. மகாலிங்கம்] [9th August 1965

செல்ஃப் பைனான்ஸ் ஸ்கீம்ஸ் இருக்கின்றன. காவேரித் திட்டத்தை அரசாங்கம் செய்ய முடியவில்லை என்றால், சூயஸ் கால்வாய் எப்படி ஒரு கம்பனி வைத்து நடத்தினார்களோ அதேபோன்று ஒரு தனிக் கம்பனி வைத்து நடத்தி வெளிநாடுகளில் இருந்து தனியாக கடன் வாங்கினாலும் அதிலுள்ள வருமானத்தில் இருந்து அக்கடனை அடைத்து விட முடியும். ஆகவே, திட்டங்கள் மூலம் செய்யாத காரியங்களை தனிப்பட்ட கம்பனிகளை ஏற்படுத்தி பெரிய காரியங்களைச் செய்ய அரசாங்க மூலதனம் இன்றி, ஏற்பாடுகள் செய்தால் அது உபயோகமாக இருக்கும். இதுபோன்ற பல்வேறு திட்டங்களைப்பற்றி சிந்திக்கவேண்டும். அவ்வாறு சிந்தனை செய்தால்தான் நான்காம் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்ற முடியும்.

மூன்றாம் திட்ட காலத்தில் எல்லா மாணவர்களும் பத்தாவது வரை இலவசமாக படிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. எல்லோரும் உயர் படிப்பு படிக்க விரும்புகிறார்கள். இனிமேல் ஜாதி அடிப்படையில் கல்லூரிக்குச் செல்ல பணம் கொடுப்பது என்ற நியதியை மாற்றியமைத்தாக வேண்டும். தேசத்தில் உள்ள மக்கள், ஏழ்மையாக இருக்கக்கூடியவர்கள். அவர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. சோஷலிசம் என்று நாம் பேசும்போது ஒருவன் ஏழ்மை காரணமாக சமுதாயத்தில் கஷ்டப் படக் கூடாது என்பதுதான் சோஷலிசத்தின் அடிப்படை. ஆனால் இன்னும் பழைய கால சமுதாயமாக அந்த அடிப்படையில்தான் நாம் சட்டங்கள், அரசாங்கச் சலுகைகள் கொடுத்துக்கொண்டே வருகிறோம். இது சமுதாயத்தில் பெரிய மாச்சரியத்தை, குரோதங்களை, சங்கடங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்க உள்நாட்டு இலாகா அமைச்சராக திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் இருந்தபோது ஏற்கனவே 1962-ல் இந்த ஏற்றத் தாழ்வுகளை மாற்றியமைக்க வேண்டும், அரசாங்கம் கொடுக்கும் சலுகைகள் ஜாதி அடிப்படையில் இல்லாமல் ஏழ்மையின் அடிப்படையில் அமைக்கப்படவேண்டுமென்று அப்போதே ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். பஞ்சாப், ஆந்திரா, மைசூர் போன்ற ராஜ்யங்களில் அந்த அறிக்கை அமுல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நான்காவது திட்டத்தைப் பார்க்கிறபோது மேலும் பிற்போக்கு சமுதாயத்திற்கு என்று அவர்களுக்கு வீடு கட்டுவது என்று இதுபோன்று ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர இதை மாற்றியமைத்து ஏழ்மையின் அடிப்படையில், சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று இருப்பதை விட்டு ஜாதி அடிப் படையில் இருப்பது என்றால் சுதந்திரம் வந்து 16, 17 வருடங்களுக்கு அப்புறமும் இந்தமாதிரியான ஒரு நிலையில் போய்க் கொண்டிருந்தால் நாம் எந்த லட்சியத்திற்காக பாடுபட்டோமோ, எப்படி நாம் சோஷலிச சமுதாயம் அமைய வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்திசையில் போகாமல் மாறுபட்ட திசையில்தான் போய்க் கொண்டிருக்கிறோமென்றுதான் தோன்றுகிறது. அதைப் பற்றியும் அரசாங்கம் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



9th August 1965] [திரு நா. மகாலிங்கம்]

ஆக இத்திட்டத்தை நல்ல முறையில் அமைக்கவேண்டுமென்றால், வெளி நாட்டு நாணய வசதி உள்ள திட்டங்களை தனியாக வைத்து, உள்நாட்டு ரூபாய் அளவில் செய்யும் திட்டங்களை தனியாகவும் வைத்து இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரித்தால் தயாரித்த திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்ற முடியும். அந்த அளவில் மத்திய சர்க்காரை சிந்திக்கவேண்டுமென்று ராஜ்ய சர்க்கார் கேட்டுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **டாக்டர் பா. நடராஜன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நான்காவது திட்ட நகலினை சிறப்பாக ஆராய்ந்து சொல்லு முன், பொதுவாக திட்டத்தைப்பற்றிய சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்ட பிறகும் திட்டங்கள் வேண்டுமா என்ற சந்தேகம் சில அங்கத்தினர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. திட்டம் என்றால், ரஷ்யாவில் போடப்பட்டது, அது கம்யூனிஸம் என்று ஒருசிலர் நினைத்து மிரளுகிறார்கள் போலும். திட்டம் என்பது ஒரு முறை, ஒரு வழி, திறன் கொண்ட ஒரு முறை. ஆங்கிலத்தில் டெக்னிக் என்று சொல்வார்கள். அதை சோஷலிஸ நாட்டிலும் கையாளலாம், கம்யூனிஸ நாட்டிலும் கையாளலாம். முதலாளித்துவ நாட்டிலும் கையாளலாம். அமெரிக்காவில் திட்டம் இடுவது இல்லை என்று சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில், இரண்டாயிரம் திட்ட நிறுவனங்கள் அமெரிக்காவில் இருக்கின்றன. தனியார் துறையில் நாஷனல் பிளானிங் அஸோஸியேஷன் என்ற ஒரு பெரிய நிறுவனம் இருக்கிறது. பொதுத்துறையில், கவுன்சில் ஆஃப் எக்னமிக் அட்வைசேர்ஸ் என்று கூறுகிற ஒரு சிறப்பு வாய்ந்த, பிரஸிடென்ட் கூட யோசனை கேட்டு நடக்கும் முறையில் உள்ள, திட்டக்குழு அங்கு இருக்கிறது. பிரான்ஸ், பிரிட்டன் போன்ற ஜனநாயக சோஷியலிஸ நாடுகளிலும் திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். பிரான்ஸின் மோனே திட்டம் பிரசித்தி பெற்றது. பிரிட்டனில் கன்ஸெர்வேட்டீவ் கட்சியினர் திட்டம் போட ஒரு அமைப்பை நிறுத்திவிட்டுப் போனார்கள். அதை இப்போது லேபர் கட்சியினர் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். சோஷியலிச நாடு அல்லாத டென்மார்க்கில் கூட, திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவத்தில் மிக்க நம்பிக்கை உள்ள தென் ஆப்ரிக்காவில் கூட திட்டத்தை கையாண்டு கொண்டிருக்கிறார்கள். ஆகவே திட்டம் என்றால் அது ஒரு முறை. குறித்த இலக்கை எளிதில் விரைந்து அடையும் திறன் கொண்ட ஒரு முறை. அதில் ரஷ்யர்கள் மேற்கொண்டார்கள் என்று பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ரஷ்யர்கள் வானவெளியில் பறக்கிறார்கள் என்று அமெரிக்காவில் பறக்காமலா இருந்தார்கள். மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் முடிந்த பிறகும் கூட இதை சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திட்டத்தினால் எண்ணிய பலன் இல்லை, எதிர்பார்த்த வெற்றி இல்லை என்று கூறி, ஆகவே திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஒரு திட்டம் முழு வெற்றியும்

[டாக்டர் பா. நடராஜன்] [9th August 1965

11-30 a.m. அடையுமா இல்லையா என்பது அதனுடைய இயல்பைப் பொறுத்திருக்கிறது. பொதுவாக நம் போன்ற ஜனநாயக நாடுகளில் நெகிழ்ச்சியான திட்டங்களைத்தான் போட முடியும். இம்மாதிரியான திட்டங்களில் கோடிக்கணக்கான விவசாயிகள் பங்கு கொள்கிறார்கள், தனியார்கள் பங்கு கொள்கிறார்கள், பொதுத்துறைக்கும் சிறந்த பங்கு உண்டு. இவ்வளவு பேரும் சேர்ந்து திட்டம் வெற்றி பெற வேண்டும். திட்டத்தின் வெற்றிக்கு வெறும் நிர்வாகத் திறன் மட்டும் இருந்து விட்டால் போதாது. எல்லோரும் ஒத்துழைத்தால்தான் திட்டம் முழு வெற்றி பெற முடியும். பொதுவாக நெகிழ்ச்சியான முறையில் போடப்படும் திட்டங்கள் எல்லாம் முழு வெற்றி பெறுவது அரிது, பிரான்ஸில் போடப்பட்ட நெகிழ்ச்சி கொண்ட "மோனே திட்டம்" 70 சதவிகிதம் தான் வெற்றி அடைய முடிந்தது. 1950-ல் முடிவடைய வேண்டிய திட்டம் 1953-ல் தான் முடிந்தது. எதிர்பார்த்ததைவிட இரு மடங்கு கால எல்லையில்தான் முடிவடைந்தது. கம்யூனிஸ்ட் நாடுகளில் போடப்பட்ட இறுக்கமான திட்டங்களாக நம் திட்டங்கள் அமையுமானால் முழு வெற்றி பெற்றதாகக் கணக்குக் காட்டலாம். அங்கும் கூட இயற்கை சக்திகளினால் விவசாயத்துறையில் முழு வெற்றி பெற முடியாமல் போய் விடுகிறது. ஆகவே திட்டங்களின் முழு வெற்றிக்கு நிர்வாகத்திறன் குறைவு மட்டும் காரணமல்ல. நிர்வாகமும், மக்களுடைய ஒத்துழைப்பும் ஒன்றாக இருக்க வேண்டும்.

இன்னொன்று திட்டத்தைப்பற்றி குறைவாகச் சொல்லப்படுவது, திட்டத்தினால் இன்னும் வறுமை போகவில்லை என்று. ஆகவே திட்டத்துக்கு இப்போது அவசியம் இல்லை என்ற முடிவுக்கும் வருகிறார்கள். இவர்களைக் கேட்கிறேன், அப்படியானால் போடப்படுகிற பணம் எல்லாம் எங்கே போகிறது? திட்டங்களின் மூலமாக நாம் எவ்வளவோ உற்பத்தி செய்கிறோம். உற்பத்தி பெருகப் பெருக மக்கள் தேவையும் பெருகுகிறது. அதன் காரணமாக மீண்டும் உற்பத்தியை பெருக்குகின்றோம். உற்பத்திப் பெருக்கமே பொருள்களை நுகரும் சக்தியையும் பெருக்குகின்றன. இவ்விதம் அவை ஒன்றுக்கு ஒன்று மேலும் மேலும் உயர்ந்து கொண்டே இருக்கின்றன. உற்பத்தியையும் தேவையையும் ஒரு தராசின் இரண்டு தட்டுகளில் போட்டால் திட்டத்தினால் முதலில் உற்பத்தி இருக்கிற தட்டு தாழ்கிறது. அந்த உற்பத்தியைத் தேவைத்தட்டில் இடும் போது தேவைத்தட்டு தாழ்கிறது. இவ்விதம் சதா இரண்டு தட்டுகளும் சரிசமம் இல்லாத நிலையிலேயே இருந்து கொண்டு இருக்கும். அது ஒரு அசையும் நிலை, தேங்கிய நிலை அன்று. இந்த நிலையில் அவ்வப்போது பற்றாக்குறைகள் ஏற்படுகின்றன. அதே முறையில் நான் உணவு பற்றாக்குறை என்று சொல்லும்போது. முன்னால் ஐந்து கோடி 80 லட்சம் டன்னாக உற்பத்தி இருந்ததை இப்போது 8 கோடி டன்னுக்குப் பெருக்கி இருக்கிறோம். இதனால் உணவு உற்பத்தி பெருகுகிறது என்று பொருள் அல்ல, உணவுப் பொருள்களுக்குத் தேவை அதிகமாகி இருக்கிறது என்பதுதான் பொருள். இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு, மேலும் திட்டம் வேண்டும் என்பதைத்தான் காட்டுகிறது. திட்டம் இல்லாது இருந்தால்



9th August 1965] [டாக்டர் பா. நடராஜன்]

வறுமையைப்பற்றியே பேச மாட்டார்கள். வறுமை மறைமுகமாக இருக்கும். திட்டங்களைப் போடுகிறபோது அதைப்பற்றிப் பேசுகிறோம், நமது உண்மை நிலைகளை நாம் தெரிந்து கொள்ளுகிறோம். தெரிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி நம்முடைய திட்டங்களைத் திருத்தி அமைத்துக் கொள்ளுகிறோம்.

அடுத்து, நமது எதிர்கட்சித்தலைவர் நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு திருத்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திட்டத்தை எப்படித் திருத்தி அமைப்பது, திட்ட அமைப்பையே, அதாவது பொருளாதார அமைப்பையே திருத்தி அதன்மூலம் முன்னேற வேண்டும், என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். திட்டம் போடுவது இரண்டு வகை. அதாவது வருமானத்தைப் பெருக்கி அதன் வழியாகப் பொருளாதார அமைப்பில் அடிப்படை மாற்றம் காண்பது. இன்னொன்று, பொருளாதார அடிப்படையின் மாற்றத்தை மையமாக வைத்துக்கொண்டு, வருமான வளர்ச்சியைப் பெற முயல்வது, அடிப்படையின் மாற்றத்தை மையமாக வைத்துக் கொண்டு (Structural changes) வருமான வளப்பத்தை ஏற்படுத்துவது, என்னும்போது ஆரம்பத்திலேயே எல்லோருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இவைகளை எல்லாம் கொடுப்பது என்று திட்டமிட வேண்டும். எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இவைகளையெல்லாம் தொடக்கத்திலேயே செய்து கொடுக்கத் தொடங்கினால் தொழில்கள் தொடங்கப் பணம் ஏது? முதல் பெருக்கமும் சேமிப்புக் குவியலும், ஏற்படவேண்டுமானால், முதலில் வருமானம் பெருக வேண்டும். அதற்குத் தொழில்கள் பெருக வேண்டும் அந்த வருமானப்பெருக்கத்தினால் வேலை வாய்ப்பு மற்றத் தேவை பூர்த்தி எல்லாம் உண்டாகும். இதைப்பற்றிப் பொருளாதார நிபுணர்கள் பலர் நீண்ட நாட்களாக விவாதித்து இருக்கிறார்கள். அமைப்பு மாற்றத்தை மையமாக வைத்துக்கொண்டு வளர்ச்சி காண வேண்டுமா? வருமான மாற்றத்தை மையமாக வைத்து வளர்ச்சி காண வேண்டுமா என்று பார்த்தால் பின்னதின் அடிப்படையில் 30 ஆண்டுகளில் பெறும் வளர்ச்சியை முன்னைய முறையில் பெற 100 ஆண்டுகள் ஆகும் என்று முடிவு கண்டிருக்கிறார்கள். இதை முடிந்த முடிவு என்றே கொள்ளுதல் வேண்டும். இல்லையென்றால் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் கையாளப்படும் கடுமையான முறைகளை நாமும் கையாள வேண்டும். ஜனநாயக சோஷலிச நாட்டில் அந்த முறைக்கு இடம் இல்லை.

அடுத்து, எனது நண்பர் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கல்யாணசுந்தரம் அவர்கள் புது வரிகள் எதுவும் போடாமலேயே, நான்காவது திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று தமது திருத்தத் தீர்மானமாகிய நீண்டசங்கிலியின் தொடராக இதையும் குறிப்பிடுகிறார். புது வரிகள் போடாமலேயே இந்தத் திட்டத்தை நடத்த முடியுமா என்ற கேள்விக்கு நான் இப்போது வரவில்லை. நடத்த முடியும் என்று வைத்துக் கொண்டாலும் கூட, புது வரிகள் வேறு பல காரணங்களுக்காகப் போட வேண்டியது அரசாங்கத்தின் நிர்ப்பந்தம் ஆகிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்க

புது வரிகளைப்போடுவது. ஒரு முக்கியமான முறை. விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த சில வரிகள் போடுவது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு முறை. நாமாக மக்கள் சேமிப்பு பெருகாத இடத்து, வரிபோட்டு சேமிப்பைத் திரட்டுவது ஒரு முறை. சில பண்டங்களின் தேவைகளைக் கட்டுப்படுத்துவதற்காக வரிபோடுவது ஒரு முறை. சில தொழில்கள் வளர்வதற்காக வரிகள் போடுவது ஒரு முறை. ஆகவே, புது வரிகள் எதுவும் போடக்கூடாது என்று உத்தரவிடுவது பொருளாதார வளர்ச்சிக்கும் திட்ட லட்சியங்களுக்குமே தடை உத்தரவு போடுவது போல் ஆகும். தவிரவும், வரிகள் என்ற பேர் இல்லாமல் லாபம் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு சிற்சில பொருள்களின் விலையை ஏற்ற வேண்டிய நிலைமை வரலாம். இதுவும் மறைமுகமாகப் போடும் வரி தான். உதாரணமாக இந்தத் திட்டத்திற்குப் பொதுவார் துறைத் தொழில்களில் இருந்து லாபமாக 750 கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் பெறுவது என்று 'பெர்ஸ்பெக்டிவ் பிளானிங் கமிஷன்' சமர்ப்பித்த ஒரு அறிக்கையிலே காணப்படுகிறது. இதனால் மத்திய அரசு நடத்தும் பல தொழில்களில் உற்பத்தியாகும் பொருள்களின் விலை ஏற்றப்படலாம். தபால் கட்டணம் ஏறலாம். தந்திக் கட்டணம் ஏறலாம், எஃகின் விலை ஏறலாம். மின்சார விலை ஏறலாம். பெட்ரோல் விலை ஏறலாம், இவை எல்லாம் ஒரு வகையில் மக்களுக்கு வரி போன்ற பளுவாகத்தானே வரும். இவற்றின் விலை ஏறவேண்டாமென்றால், பொதுவார் தொழில், லாபத்தில் நடக்கவில்லை என்ற கூக்குரலை எழுப்பாமல் இருப்பார்களா?

இது இவ்வாறாக மாமூலாகப் போடும் வரிகள் ஏறவேண்டுமோ, புதிய வரிகள் போடவேண்டுமா என்ற கேள்வி இன்னும் இருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் போட்ட வரியைச் சரியாக வசூலித்தாலே போதும் என்று பலர் கருதுகின்றார்கள். 'பெர்ஸ்பெக்டிவ் பிளானிங் கமிஷன்' தொகுத்துள்ள கணக்குப்படி, அந்த வரிகளே செலவு போக 630 கோடி ரூபாய் நான்காவது திட்டத்தில் மொத்தம் உபரியாகத் தரும் என்று (பட்ஜெட் சர்ப்ளஸ்) தெரிகிறது. இது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சேர்ந்த மொத்தக் கணக்கு. ஆனால் நமது அரசாங்கக் கணக்குப்படி இப்படி பட்ஜெட் உபரி வரப்போவதில்லை. துண்டு விழலாம் என்றே அறிகிறேன். இவைபற்றி எல்லாம் இன்னும் ஃபைனான்ஸ் கமிஷனும், பிளானிங் கமிஷனும் முடிவான ஒரு நிலைக்கு வரவில்லை. ஆகையால் இவை பற்றிப் பின்னர் விவாதிக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என்று நம்புகிறேன் என்றாலும் இன்னும் இருக்கிற நிலைமையில் புது வரிகளை தவிர்க்க முடியும் என்று கருதுவதற்கு இல்லை.

நம் முன் இருக்கும், நான்காவது திட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. மத்தியத்துறை, மாநிலத்துறை, தனியார் துறை. மத்தியத்துறையில் 352 கோடி ரூபாய் விடுமுதல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்துறையில் ரூபாய் 750 கோடி விடுமுதல் என்று காட்டப்பட்டிருக்கிறது. இது மத்திய அரசாங்கம் உதவும் நிதித்தொகையும் சேர்ந்தது. மத்திய அரசாங்கம் எவ்வளவு உதவும் என்று தெரிவதற்கு இல்லை. மூன்றாவது திட்டத்தில் 65 சதம் மத்திய உதவி வழங்கப்பட்டது. இதே





கணக்கை இந்தத் திட்டத்துக்கும் வைத்துக் கொண்டால் ரூபாய் 487 கோடி மாநிலத்துறைக்கு உதவியாக வரும். எஞ்சியது 263 கோடி, இந்த ரூபாய் 263 கோடிக்கு எதிராக, கடனாகவும், சேமிப்பாகவும் பல துறைகளில் எதிர்பார்ப்பது 68 கோடி போக 195 கோடி ரூபாய்க்குப் புது வரிகள் போட வேண்டுமா? அதாவது வருடத்திற்கு சுமார் 39 கோடி அல்லது 40 கோடி ரூபாய்க்கு புது வரிகள் போட வேண்டுமா? சராசரி கணக்குப் போட்டுப்பார்த்தால் நான்காம் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு 160 கோடி ரூபாய் வருமானமாக வரலாம். இதற்கு மேல் 40 கோடி என்றால் வரிப்பளு நான்கில் ஒரு பங்கு—அதாவது ரூபாய்க்கு நான்கு அணா—மேலும் அதிகரிக்க வேண்டும் போல் தெரிகிறது. செலவைக் குறைத்தும் வரி ஏமாற்றத்தைத் தடுத்தும் ஓர் அளவு கொடுக்க வேண்டிய வரிப்பளுவைக் குறைத்துக் கொள்ளலாம் என்றாலும் மூன்றாவது திட்டத்தின் பயனைப் புதிதாகத் தோன்றிய வருமானமே 178 கோடிக்கு மேல் இராது. அதில் சேமிப்பாகவும், கடனாகவும் பல கோடி வேறு வகையில் அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகிறது. ஆகவே மத்திய அரசாங்கத்தில் இருந்து உதவியாகக் கொடுக்கும் 65 சதம் என்ற பங்கு இன்னும் அதிகமாக, அதாவது, 70 சதம் அல்லது 75 சதம் என்று இருக்க வேண்டும், அல்லது ஓர் அளவுக்கு நாம் திட்டத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு குறைக்கலாம் என்பது அடுத்த கேள்வி. மூன்றாவது திட்டத்தை 310 கோடி ரூபாய் மாநிலத்துறை செலவில் முடித்தோம். நான்காவது திட்டம் அகில இந்திய அளவில் இரட்டிப்பாக இருப்பதால், நமது மாநில அளவிலும் அதே போல் இரட்டிப்பாக 620 கோடி ரூபாயாக இருக்கலாமே. அப்படியானால், 160 கோடி ரூபாய்க்குப் புது வரிகள் போட வேண்டும் என்று இருப்பதை 72 கோடி ரூபாய்க்குக் குறைத்துக் கொள்ளலாம். அதாவது ஆண்டு ஒன்றுக்கு இப்பொழுது இருக்கிற வரிப்பளுவைவிட ரூபாய்க்கு 10 காசு தான் அதிகமாகும். எல்லாம் மத்திய அரசாங்கம் எவ்வளவு, உதவி செய்யப்போகிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. அரசாங்கம் நடத்தும் தொழில் துறையில், லாபம் பெருகினாலும் வரியின் பங்கைக் குறைக்கலாம் அல்லது பெரிய திட்டத்தை மேற்கொள்ளலாம். திட்டத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறவன் அல்ல நான். இதுவரையிலும் ரூபாய் 21,500 கோடி ரூபாய் ஆகத்தான் இருக்க வேண்டுமென்று எழுதிக்கொண்டு இருக்கிறேன். பேசிக்கொண்டு இருக்கிறேன். அதிலிருந்து இம்மி கூடக் குறைத்துக் கொள்ள வேண்டாமென்றுதான் வாதாடிக்கொண்டு இருக்கிறேன். ஆனால் நான் இப்போது பேசுவது நமது மாநிலத்திட்டத்தைப்பற்றி. இப்போது 875 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இது போக 320 கோடி ரூபாய் அளவுக்கு மத்திய அரசாங்கத் தொழிலாக வரும் என்று எதிர்பார்க்கிறோம். இன்னும் நற்பது சதவிகித அளவுக்குத் தனியார் துறையில் முதலீடு செய்வார்கள் என்று பார்த்தால் நமது திட்டம் கிட்டத்தட்ட 1,600 கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது. மூன்றாவது திட்டத்தில் முதலீடு என்ன என்று பார்த்தால் மூன்று திசையிலிருந்து சுமார் 560 கோடி ரூபாய் தான் ஆகிறது

மூன்றாவது திட்டத்தை விட இந்தத் திட்டம் ஏறக்குறைய மூன்று மடங்கு பெரியது. தேசமெங்கும் மூன்றாவது திட்டத்தைவிட நான்காவது திட்டம் இரண்டு மடங்கு தான் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த முறையில் நாம் பார்த்தோமானால் இவ்வளவு பெரிய வரிப்பளுவை ஏற்க **வேண்டிய நிலைமை ஏற்படாது. நாம் செலவு செய்தது 310 கோடி என்று இருப்பதை இப்போது இரட்டிப்பாக வேண்டுமானால்** வைத்துக்கொள்ளலாம். மத்திய அரசாங்கம் நமக்கு அதிக **பொருள் உதவி செய்தால், பிறகு அதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாம் என்று எனக்குப்படுகிறது. எப்படி இருந்தாலும் ரூபாய்க்கு 10 காசு வரி கொடுக்க மக்கள் தயாராகிவிட வேண்டும்.** வரி டிமிக்கி கொடுக்கிறவர்களைத் தடுத்தாலும் மற்றவைகளை **எல்லாம் செய்தாலும், வரிப்போட்டுத்தான் ஆக வேண்டும். இன்றைக்கு நமது தொழில்களில் இருந்து எந்த லாபமும் இல்லை. எலெக்டிரிக்ஸிடி போர்டில் இருந்து** 5 கோடி ரூபாய்க்குக் கணக்குப்போட்டிருக்கிறதே **தவிர—பஸ்** தொழில் நடத்துகிறோம், அதிலே ஒருகாசுகூட **லாபம் கிடைப்பதில்லை.** எவ்வளவு காலம் தான் லாபம் இல்லாமல் ஒரு தொழிலை நடத்துவது என்று தெரியவில்லை, இப்படிப் பார்க்கும்போது வரி போடாமல் எப்படி முதலீடு செய்யப் **போகிறோம் என்று** தெரியவில்லை.

இனி இந்தத் திட்டத்தைக் குறைக்கலாமா, குறைக்கலாமென்றால் எந்த இடத்தில் குறைப்பது என்று ஆராயவேண்டும். **விவசாயத்தில் ஒன்றும் குறைக்க முடியாது, மின்சாரத்தில் குறைக்க** முடியாது, மருத்துவத்தில் குறைக்க முடியாது, கல்வித்துறையில் குறைக்க முடியாது. ஆனால் தொழில்துறையில் குறைக்க வாய்ப்பு இருக்கிறது. 600 கோடி ரூபாய் தொழிற்துறை முதலீடு செய்வது என்று இருக்கிறது. **இதில் அரசாங்கத்தினுடைய** பகுதி கணிசமாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் 322 கோடி, நமது அரசாங்கம் **100 கோடி சொச்சம், இது போக தனியார்துறையாக இவ்வளவும் சேர்ந்து 600 கோடி ரூபாய் முதலீடு என்று இருக்கிறது.** 200 கோடி ரூபாய் வருமானம் வர 600 கோடி ரூபாய் முதலீடு என்று இருக்கிறது. இப்படி 600 கோடி ரூபாய் முதலீடு **செய்தால் 1,600 கோடி ரூபாயில் 600 கோடி ரூபாய் முதலீடு செய்**தால் அது 37 சதவிகிதம் தொழிலுக்கு மட்டும் ஒதுக்குகிறதாக ஆகும். **அது** (unbalanced allocation) அன்பாலன்ஸ்ட் அலோகேஷன் என்று சொல்வார்கள். இப்போது விவசாய அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தாகவேண்டும். இந்த நிலையில் 37 சதவிகிதம் தொழிலுக்கு முதலீடு செய்வது பொருந்தாது. **தொழில்களைப் பார்க்கும்போது 4 நூல் ஆலைகள் துவக்குவதாக** இருக்கிறது. 100 **வருஷங்களுக்கு** மேல் ஆகிவிட்டன நூல் ஆலைகள் வந்து இந்த நாட்டில், இப்போதா நூல் ஆலையை அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டும்? விலைவாசியை நிர்ணயிக்கவேண்டும். நூல் ஆலையை அரசாங்கம் நடத்தப்போவதாகச் சொல்லுகிறார்கள். விலைவாசிகளை நிர்ணயிக்க இந்த நூல் **ஆலைகள் உதவி** செய்யுமா? வேறு வழிகள் இல்லையா? காஸ்ட் அக்கௌண்ட்ஸ் இல்லையா? கோஆப்பரேட்டிவ் செக்டார் **இல்லையா? அவை**



**களின்** மூலம் **விலையைத் தெரிந்து கொள்ள** முடியாதா? இன்னொரு இடத்தில், மக்கள் நுகர்வுப் பொருட்களை மிகுதிப்படுத்தி கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்குத் தனியார் துறை இருக்கிறதே. இதே மாதிரி சர்க்கரை ஆலையைத் துவங்கப்போகிறார்கள், அது எட்டு கோடி, நூல் ஆலை ஆறு கோடி, சோடா ஆஷ் தொழிற்சாலை எட்டு கோடி. ஆக 22 கோடி ரூபாய் ஆகிறது. சோடா ஆஷ் பாக்டரிக்கு யாரும் முதலீடு செய்ய முன் வரவில்லை. ஆகவே அதைத் துவக்குகிறோம் என்று சொல்கிறார்கள். தனியாருக்கு என்னென்ன ஊக்கம் கொடுத்தால் முதலீடு செய்ய முன் வருவார்கள், அப்படி யாராவது முன்வருவார்களா, மற்றவர்கள் ஒருவரும் முன்வரவில்லையென்றால் இது நஷ்டமான தொழிலாக இருக்காதா என்பதெல்லாம் சிந்தித்து முடிவு கட்ட வேண்டும். அரசாங்கம் இதையெல்லாம் சிந்தித்திருக்கலாம். இப்போது பொது மக்களும் சிந்திக்கும் நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கம் அடிப்படையான தொழில்களை நடத்த வேண்டும் என்பது முறை, **ஸ்பாஞ்ச் அயர்ன், ராட் மில், கன்காஸ்டு** தொழிற்சாலை, மெஷின் டூல்ஸ் தொழிற்சாலை தொடங்குகிறார்கள். ஃபவுண்டரி முதலியன தொடங்குகிறார்கள். வரவேற்கிறோம். இவைகளை வேறு யாரும் செய்ய வரவில்லை. இவைகள் என்ஜினியரிங் தொழில்கள். நாட்டுக்குத் தேவை. இவைகளை அபிவிருத்தி செய்து ஏற்றுமதி செய்யலாம். தென் கிழக்கு ஆசியாவில் என்ஜினியரிங் பொருட்கள் தேவையே **தவிர நம்முடைய நூலை ஏற்றுமதி செய்து போட்டி போடலாம் என்பது நடவாத காரியம். எங்கு இருக்கிறது பருத்தி** இவ்வளவுக்கும். அப்படி வரும்போது விலைவாசி உயரும். விலை**வாசியை இதனால் எப்படி கட்டுப்படுத்த முடியும்? ஸ்ட்ராட்**டெஜிக் ப்ரைஸ் கன்ட்ரோல் என்று சொல்லும் முறையில், கேந்திர நிலையில் இருந்து தடுக்க நான்கு மில்கள் போடப்போகிறோம் என்று சொல்கிறார்கள். இது சரியான தொழில் கொள்கையாகத் **தெரியவில்லை. இதில் 22 கோடி ரூபாய் போகிறது. சோடா ஆஷ்** தொழிற்சாலையை ஏற்றுக்கொண்டாலும், 12 கோடி ரூபாய் மிச்சம் பிடிக்கலாம்.

இன்னொன்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஒருவருக்கும் அடித்துச் சொல்ல தைரியம் இல்லை. அதாவது கம்யூனிட்டி பிராஜக்ட் திட்டம். இதனால் அதிகப் பயன் இல்லை. இதனால் உற்பத்தி பெருகவில்லை என்று எல்லோருக்கும் தெரியும். இதைப் பிரதமர் சாஸ்திரி அவர்கள் கூடப் பகிரங்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார், அதுபற்றிப் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதற்காகத் திட்டத்தட்ட 20 கோடி ரூபாய் செலவு செய்வதாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். அதை முற்றிலும் குறைக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதை எந்த வகையில் திருத்தியமைத்தால் உணவு உற்பத்தி பெருக—மனமகிழ் மன்றங்கள், நூல் **நிலையங்கள்** என்று மட்டுமில்லாமல்—உணவு உற்பத்தியை எப்படி பெருக்கலாம் என்பதைப்பற்றி யோசித்து அந்த வகையில் சிக்கனம் காணலாம். எவ்வளவு நாம் சிக்கனம் காண்கிறோமோ அவ்வளவுக்கு வரிப்பளு குறையும் அல்லது வரி போடுவதால் வரக்கூடிய வருமானத்தோடு, சிக்கனமும் இருந்தால் அந்தத் **தொகையைக் கொண்டு** மேலும் பல நல்ல **திட்டங்களைப்போடலாம்.**

இந்தத்திட்ட நகல் நன்றாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. கல்வி மருத்துவம், சாலைகள் போன்றவைகளுக்குப் போதிய அளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். செம்மையாக அமைந்துள்ள இந்த நகல் அறிக்கையில் இன்னும் சேர்க்கப்பட வேண்டியது இருக்கின்றன. மூன்றாவது திட்ட அறிக்கைக்கு நான்காவது திட்ட நகல் உயர்ந்தது என்று சொல்ல முடியுமே தவிர திருத்தங்கள் பல செய்யவேண்டிய நிலையிலே இன்னும் இருக்கிறது. உதாரணமாக இன்றைய மாநில தேசிய வருமானம் எவ்வளவு, மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் நம்முடைய தேசிய வருமானம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது, எத்தனை சதம் உயர்ந்திருக்கிறது என்பது தெரிந்தால் தான் நாம் எவ்வளவு வரி போடலாம் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். மாநில மக்களின் மொத்த வருமானம் எவ்வளவு, தலா வருமானம் எவ்வளவு, நான்காவது திட்டம் நிறைவேறினால் எவ்வளவு உயரும் என்பதெல்லாம் குறிப்பிடப்படவேண்டும். விவசாயம், தொழில், சமூக நலம் போன்ற ஒவ்வொரு துறையிலும் திட்டத்தில் இலக்காகக்கொண்டுள்ள வளர்ச்சி விகிதம் என்ன? மொத்தத்தில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி விகிதம் என்ன என்பது உடனடியாக தெரிந்து கொள்வதற்கில்லை. இலைமறை காய் போல் இருக்கும் பல புள்ளிவிவரங்களில் புகுந்து நெடுநேரம் கணிதம் செய்துபார்த்தால் ஏதோ ஏழு சதவிகிதம் ஒரு வளர்ச்சியை எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. மொத்த மாநில வளர்ச்சி விகிதம் இப்போது என்ன வகியிருக்கிறது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன வளர்ச்சியை இலக்காகக் கொண்டோம், திட்டத்தால் வரும் வேலை வாய்ப்புக்கள் எத்தனை, எந்த அளவுக்கு வேலையில்லாமை போக்கப்பட்டிருக்கிறது, மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்று பண்டிதர்களும், பொதுமக்களும் அறிய விரும்பும் இம்மாதிரியான பற்பல விவரங்கள் அடுத்த நகலில் வரும் என்று நம்பிக் கொண்டு எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நாராயணன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பைப்பற்றி எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இப்பொழுது நம்முடைய அரசாங்கமானது மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிவிட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கேற்ற குறிப்பு இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்றாலும், இந்தத் திட்டமானது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைவிட பெரிய மகத்தான ஒரு திட்டம் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினால் நாட்டு மக்கள் என்ன பலன் பெற்றார்கள், நான்காவது திட்டத்திலே என்ன பலன் அடையப் போகிறார்கள் என்பதை மக்கள் சிந்தித்துக்கொண்டு தான் இருந்து வருகிறார்கள். ஆனாலும், ஒன்றாவது ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் நமது அரசாங்கமானது மக்களுக்கு ஏற்ற வழிவகைகள் செய்யவில்லை என்றுதான் நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.



இப்பொழுது சாதாரணமாக சென்னையிலே இருப்பதைவிட, கிராமப் புறங்களில் வாழக்கூடிய மக்களுக்கு எந்த அளவுக்கு வீட்டு வசதி செய்யப்பட்டிருக்கிறது, குடியிருப்பு மனை இருக்கிறதா? என்பதை இந்த அரசாங்கம் உணரவில்லை என்று தான், நான் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது 50 சதவிகிதம் மக்கள், கிராமங்களில் வாழக்கூடிய மக்கள், குடியிருக்க வசதியில்லாமல் அவர்கள் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஏற்பாட்டை இந்த அரசாங்கம் மறந்துவிட்டு, இந்த அரசாங்கம் சோஷலிசத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், குடியிருக்க வீடும், உண்ண உணவும், உடுப்பதற்கு உடையும் தாங்கள் வழங்கத் தயாராக இருப்பதாக மகத்தான மூன்றாவது திட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

அதுவும் தவிர, இரண்டாவதாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குடியிருப்பு மனையைப்பற்றிப் பல கோணங்களிலே அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். இந்தக் கோணங்களிலே எடுத்துக் கூறியிருப்பதை நாம் பார்த்தோமானால், ஏதோ பயனடையக்கூடியவர்கள்தான் பயனடைய முடியுமே தவிர, மற்றப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது பேக்வேர்டு கம்யூனிடி மக்கள் இந்தத் திட்டத்தினால் எந்த விதமான பலனையும் அடைய முடியாது. ஏனென்றால், இந்த ஆட்சியில் இருக்கக் கூடியவர்கள் எந்த அளவில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றி, யாருக்கு வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஒரு லிஸ்டு போட்டு, அரசாங்கம் கவனித்திருந்தால, அது யாருக்கு பயன் பட்டிருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். அதனால் நான் என்ன சொல்கிறேன் என்றால், சர்வே செய்து, ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தாலுகாவிலும் ஒவ்வொரு மனிதனுக்கும் வேண்டிய வீட்டு மனை இருக்கிறதா, 3 சென்டு இருக்கிறதா, 4 சென்டு இருக்கிறதா போதுமா, போதாதா? என்ற ஒரு பிரச்னையை அறிந்து, அம்மாதிரி மனை இல்லாத மக்களுக்கு கிராமப் புறத்தில் இருக்கிற மக்களுக்கு நில ஆர்ஜிதமாவது செய்து கொடுக்க வேண்டும், வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டிய தேவையே இல்லை என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுவும் தவிர, குடிநீர்ப் பஞ்சம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் மிகவும் அவசியம். ஒவ்வொரு ஊரிலும் கிணறு வெட்டவேண்டும், ஆழக் குழாய்க் கிணறு வெட்டவேண்டும் என்ற ஒரு திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் முன் வந்திருக்கிறது. நான் சொல்வது எல்லாம் என்னவென்றால், எந்த இடத்தில் குடிநீர்க் கிணறு வெட்ட வேண்டும், எந்த இடத்தில் ஆழக் குழாய்க் கிணறு வெட்டவேண்டும், எந்த இடத்தில் பைப் மூலம் தண்ணீர் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று அரசாங்கம் முதலிலேயே, ஆராய வேண்டும். இப்பொழுதுகூட, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல ஊர்களிலே கிராமப்புறங்களிலே குடிநீர் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. எந்தக் கிராமத்திலாவது அந்தக் கிணறுகளில் தண்ணீர் இருக்கிறதா? நீங்கள் வேண்டுமானால் உதாரணத்திற்குப் போய் பாருங்கள். அரசாங்கம்

[திரு. இரா. நாராயணன்] [9th August 1965

வேண்டுமானால் சி.ஐ.டி. போலீஸ் வைத்துப் பார்க்கட்டும் எந்தெந்த ஊர்களில் குடிதண்ணீருக்காக வெட்டப்பட்ட கிணறுகளில் கிராம மக்கள் குடிநீர் எடுக்கிறார்கள், ஏன் எடுக்கவில்லை என்பதை அரசாங்கம் ஆராய்ந்ததா? இதற்குத் தக்க வழிவகை செய்ததா? கிடையாது.

இப்பொழுது உடையார்பாளையம் பகுதியை எடுத்துக்கொண்டால் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து மூன்றாவது திட்ட காலம் வரையில் குடிநீர் பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. ஆனால், அதைப்பற்றி இந்தக் குறிப்பில் ஒன்றும் காணப்படவில்லை. செந்துறை வட்டாரத்தில் 300 அடி ஆழத்தில் ஆழக் குழாய் கிணறு தோண்டப்பட்டும், அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை என்பதையும், பாழ் அடைந்து தண்ணீர் இல்லாமல் இருப்பதை அரசாங்கம் ஆராய்ந்ததா? செந்துறை வட்டாரத்திற்கு எஸ்டிமேட் கமிட்டியினர்கூட கொஞ்ச நாட்களுக்கு முன்பு வந்திருந்தார்கள். அங்குள்ள தண்ணீரை ஒரு கிளாஸில் கொண்டு வந்து மேஜை மீது வைத்து, அதில் படிக்காரம் போட்டு, தேத்தாங்கொட்டை போட்டு தண்ணீரைத் தேற்றி வைத்தோம். இந்த நிலையில் நல்ல குடிநீர் இல்லாமல் உடையார்பாளையம், ஜெயங்கொண்டான் மக்கள் வாழ்ந்துவருகிறார்கள். 1967-வது ஆண்டில் தேர்தல் வரப்போகிறது. மக்கள் இதையெல்லாம் அறிந்திருக்கிறார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நான் மகிழ்ச்சி அடைகிறேன். தேர்தலில் மக்கள் 1967-ல் கண்டிப்பாக காங்கிரஸை வரவேற்கப்போகிறார்கள். இந்தக் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் திட்டத்தை முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கவேண்டும். வெள்ளாற்றிலிருந்து பொன்பரம்பி, செந்துறை பஞ்சாயத்து யூனியன் பகுதிகளுக்கும், காவேரியிலிருந்து ஜெயங்கொண்டான் பகுதிக்கும் குடிதண்ணீர் வசதி கண்டிப்பாகத் தேடிக்கொடுக்க வேண்டும். அப்படிச் செய்து கொடுக்கப்பட்டால்தான் அரசாங்கத்தை மக்கள் வரவேற்பார்கள்.

மூன்றாவதாக, ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரியலூரில் இப்பொழுது ஒரு காலேஜ் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் காலேஜுக்கு பல பேர்கள் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியின் காரியதரிசி அந்தக் காலேஜ் எந்த விதத்தில் நடக்கவேண்டும், எவ்வளவு தொகை வசூலாயிற்று, பணம் கொடுத்தவர்கள் யார், பணம் கொடுக்காதவர்கள் யார் என்பதுபற்றி வரவு செலவுக் கணக்கை ஒரு கமிட்டி கூட்டத்திலாவது வைத்து எங்களுக்கு நாளது வரையில் சொல்லவில்லை. இந்த அளவிலே இந்தக் காரியதரிசியானவர் நடத்திக் கொண்டுவருகிறார், எதேச்சதிகாரமாக. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்தக் காரியத்தை முதலில் கவனித்து, அதற்கு தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). இன்னும் ஒரு நிமிஷம் அனுமதிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



9th August 1965] [திரு. இரா. நாராயணன்]

சில கிராமங்களில் மருத்துவ வசதியே இல்லை. நமது கிராமங்களில் 20 மைலுக்கு அப்பால் தான் போய் மருத்துவ வசதி பெற வேண்டியிருக்கிறது. வேப்பூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் வசதி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மையை உயர்த்திவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிஷம் டைம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மை எந்தக் காலத்தில் அதிகமாக உயர்ந்தது? இருக்கப்பட்ட நிலத்தை இருக்கப்பட்ட குடியானவர்கள் அதற்கேற்ற உரத்தை, எருவைப் போட்டுப் பயிர் செய்கிறார்கள். அப்படிச் செய்தால், அதிகப்படி செய்தாலும் அந்த விளைச்சல் பாதிக்கப்படும். ஏறக்குறைய எவ்வளவு எரு இடவேண்டுமோ, எவ்வளவு ரசாயன உரம் போடவேண்டுமோ அதற்கேற்ற அளவில் போட்டு விவசாயம் செய்தால்தான் பக்குவமான வளர்ச்சி ஏற்படும். இல்லாவிட்டால் புகைந்து போய்விடும், பயிரே வராது. ஆகவே, சொல்லக்கூடிய அளவில் நாட்டில் விவசாய உற்பத்தி பெருக்கப்படவில்லை. அரசாங்கம் இதைக் கண்டிப்பாக ஆராயவேண்டும். தொழிலும் அபிவிருத்தி அடையவேண்டியதுதான். விவசாயமும் அபிவிருத்தி அடைய வேண்டியது தான். ஆனால், எல்லோரும் இருக்கிற நிலத்தில் கரும்பைச் சாகுபடி செய்துவிடுகிறார்கள். ஒருவருக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருந்தால், ஒரு ஏக்கரில் நெல் சாகுபடியும், ஒரு ஏக்கரில் கரும்புச் சாகுபடியும் செய்ய வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்தால்தான், நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொல்லி, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் கொண்டு வந்துள்ள இந்த நான்காவது திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாம் முதலாவது, இரண்டாவது திட்டங்களை நிறைவேற்றிவிட்டு, மூன்றாவது திட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறோம். அதிலே முக்கியமான கவனம் செலுத்தப்பட்டது, விவசாயத்திற்கு. விவசாயத்திற்கு வேண்டி, ஆரம்ப காலத்திலே, பெரிய அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். இரண்டாவது திட்டகாலத்திலும் பெரிய அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. அதைப் போலவே, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார்கள். விவசாயத்திற்கு என்று கிணறுகள் வெட்ட லோன்களும், மானியங்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காகக் கடன் கொடுக்கும்போது, ரூ. 2,000 என்றிருந்தது, இப்பொழுது ரூ. 3,000 ஆகி, 5,000 வரை கொடுக்கிறார்கள். ஆனாலும் அந்த லோன்கள் சரியான முறையில் கொடுக்கப்படுவதில் சிரமங்கள் இருக்கின்றன. அந்தக் கடன் தொகைகளை முழுதாகப் பயன்

[9th August 1965

[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]

படுத்தும் நிலைமை இல்லாமல் இருக்கிறது. கடன் தொகை 5,000 என்றால், பெரிய பெரிய நிபந்தனைகள் போடுகிறார்கள். அப்படிப்பட்ட நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும். சாதாரணமாகப் பார்த்தால், 100 பேர்கள் மனுப்போடுகிறார்கள் என்றால், அதிலே ஒருவருக்குக் கூட 5,000 ரூபாய் லோன் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. அதற்காக வேண்டி அரசாங்கமே இந்த ரூ. 5,000 கடனையும் கொடுத்து கிணறுகள் வெட்ட உதவிசெய்தால், விவசாயிகள் நல்ல முறையிலே செயல்படமுடியும். என் தொகுதியில், கிணற்றுக் கிடாவு பிர்க்கா பூராவும் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறது. அந்த இடங்களிலெல்லாம், மழை இல்லாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் முயற்சி செய்து வசதிகளைப் பெற முக்கியஸ்தர்கள் இல்லை அதிகாரிகளும், அழுத பிள்ளைக்குத் தான் பால் கொடுப்பது என்பது போல, இதையெல்லாம் கவனிப்பதில்லை. ஆகவே, என்னுடைய தொகுதி பிற்போக்கான நிலையில் இருக்கிறது. அதைக் கவனித்து, நான்காவது திட்டத்திலாவது ஆனைமலை ஆற்றிலிருந்து எங்கள் பகுதிக்கும் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில் கோதவாடிக் குளம் என்று ஒன்று இருக்கிறது. அந்தக் குளம் மழை இல்லாவிட்டால் வரண்டு போகிறது. அந்தக் குளத்தினால் பாசனவசதி பெறும் நிலங்களும் இருக்கின்றன. ஆகவே, அந்தக் குளத்தில் பரம்பிக்குளத் தண்ணீரை நிரப்பினால் பாசன வசதி கிடைக்கும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த ஐந்தாண்டுத் திட்டங்களால் பல கிராமங்கள் நன்மை அடைந்திருந்தாலும், முன்னேற்றம் தீவிரமாக நடைபெறவில்லை என்பதைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக, இன்னும் பல கிராமங்களில் குடிதண்ணீர் வசதியும் இல்லாத நிலைமை இருக்கிறது. என்ன காரணம் என்று பார்த்து, கூடிய விரைவில் அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவிக்க விரும்புகிறேன். அதே மாதிரி, விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூபாய்கள் கொடுப்பதாக இருந்தாலும், விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில், முன்பு நமது எம்.எல்.ஏ. பேசியபடி, வாங்கிய கடனைத் திருப்பித்தர பாங்கிகள் பணம் கொடுப்பதில் ஏற்பட்ட கஷ்டங்கள் இருக்கின்றன. அந்த பணங்களெல்லாம் கூடிய விரைவில் விவசாயிகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதி வெடரினரி ஆஸ்பத்திரி வடசித்தூரில் முக்கியமான மெயின் செண்டராக இருந்தது. இப்பொழுது அதை எடுத்துவிட்டு, பொள்ளாச்சிக்கு மாற்றி, எங்கள் தொகுதி ஆஸ்பத்திரியை ஒரு சப் செண்டராகச் செய்து விட்டார்கள். பஞ்சாயத்து யூனியன் அதற்காகப் பாடுபட்டு, ரூ. 20,000 வசூல் செய்து அந்தக் கட்டடத்தை ஏற்பாடு செய்தும், அதை சப்-செண்டராகச் செய்திருக்கிறார்கள், அதை மறுபடியும் வெடரினரி ஆஸ்பத்திரியாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



[திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர்]
9th August 1965]

என்னுடைய தொகுதியில் 27 மைல் தூரத்திற்குப் போக்குவரத்து வசதியே கிடையாது. எங்கே போவதாக இருந்தாலும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதி மக்களிடம், எப்படியும் பஸ் போக்குவரத்து ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி, ஒரு வருஷமாகப் பாடுபட்டு, அதற்கு வேண்டிய ப்ளான், ஸ்கெச் எல்லாம் தயார் செய்து, ஜனத்தொகை அடிப்படையில் என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் அறிந்து வேண்டியவற்றையெல்லாம் செய்தபிறகு, கடைசியாக, கலெக்டர் ஆபீசிலிருந்து, சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனாலும் இன்றைக்கு அது தடைபட்டியிருக்கிறது. காரணம், அங்கே ஸ்டேட் பஸ் குறுக்கே போகிறது என்பதனால் இதைக் கொடுக்கவில்லை. ஏன், ஸ்டேட் பஸ் போனால் என்ன கெடுதல் வந்துவிடும் என்று தான் தெரியவில்லை. என் தொகுதி மக்களுக்கு நான் என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. இதை அரசாங்கம் பரிசீலனை செய்து, ஸ்டேட் பஸ் போனாலும், எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லையென்று வேறு பஸ் ரூட் போகலாம் என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் விவசாயிகளுக்கு ட்ராக்டர் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. அதேபோலத்தான் புல் டோசர் கொடுப்பதிலும். இதிலெல்லாம் இருக்கும் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கூடிய விரைவில் கிடைக்கச் செய்யவேண்டும்.

அரிசனங்களுக்கு வீடு கட்ட என்று இடங்கள் கொடுக்கிறார்கள். அதிலும் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. கால தாமதம் இல்லாமல், அவர்களுக்கு இடங்கள் கிடைக்கவும், அதோடுகூட இந்த நான்காவது திட்டத்திலாவது, யாரும் வீடு இல்லை என்கிற பிரச்சினையே இல்லை, எல்லோருக்கும் வீடுகள் கொடுக்க வேண்டும் என்கிற வகையில் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காகத் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

**திரு. செ. கோ. விஸ்வநாதன் :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது சபை முன் வைக்கப்பட்டு, விவாதிக்கப்படுகிற நான்காவது திட்டத்தைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மூலமாக நாம் பலன் பெற்று இருக்கிறோமா இல்லையா என்று பார்க்கும்போது, பேசிய உறுப்பினர்கள் மூலமாகவும், மத்திய அமைச்சர்கள் முதல் அகில இந்தியத் தலைவர் வரை எல்லோரும் திட்டம் முழுமையாக வெற்றி பெறவில்லை என்றுதான் உணர்கிறார்கள் என்று அவர்களுடைய பேச்சுக்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. அதே போலத்தான் எங்கள் கட்சிக்காரர்களும், நாம் நமது இலக்கைப் பெறமுடியவில்லை என்று சொல்லுகிறோம். பொதுவாகப் பார்க்கும் போது, நம்முடைய அரசாங்கம் அதிகமான தொகைகளைச் செலவிட இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். விவசாயம், கல்வி இவற்றிற்கு அதிகமாகச் செலவிட இருக்கிறார்கள். அதே நோக்கிலே மற்றத் துறைகளுக்கும் தொகைகள்

வழங்குகிறார்கள். அப்படி பார்க்கும் போது, இந்த நாட்டில் சுகாதாரம் மிக மிக மோசமான நிலையில் இருக்கிறது. பொதுச் சுகாதாரமும், பெரிய நகரங்களில் கூட குடி தண்ணீர் பிரச்சினையும் மிக நெருக்கடியான நிலையில்தான் இருக்கிறது. கோடை காலங்களில் மக்கள் மிக்க அவதிப்படுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்களுக்காகச் சர்க்கார் கொடுக்கும், மானியத் தொகையையும், கடன் தொகையையும் அதிகப்படுத்தினால் ஒழிய நான்காவது திட்டத்திலும் அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலைமைதான் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மருத்துவ நிலையங்கள் வைக்க இடநெருக்கடி இருக்கிறது. இருக்கிற நோயாளிகள் தங்கள் நோயை கவனிக்கச் செய்ய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. வளர்ந்து வருகிற ஜனத்தொகைக்கு ஏற்ப, மருத்துவ மனைகளும், பணியாளர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது. ஆகவே, சுகாதாரத்தை நல்ல முறையில் வைக்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் திட்டம் வெற்றி பெறும் வாய்ப்பை அடையும். நல்ல சுகாதாரம் இருந்தால்தான், மக்கள் திட்டத்தை நிறைவேற்றும் சக்தியைப் பெறுவார்கள். ஆகவே ஆரம்ப சுகாதாரம், பாதிக்கப்பட்ட குடிதண்ணீர் இவற்றை மக்களுக்கு அளிக்க சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் செம்மையாக வாழமுடியும். ஆகவே நான்காவது திட்டத்தில் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதே முறையில், கைத்தறியாளர்களுடைய நிலைமை மிக மிகப் பாதிக்கப்பட்டதாக இருந்துகொண்டிருக்கிறது. பொதுவாக, கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கைத்தறியாளர்கள் அதிகமான எண்ணிக்கையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவரை கூட்டுறவுச் சங்கங்களில் தறியாளர்கள் அதிகமாகச் சேராததற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு வேண்டிய சலுகையை அங்கிருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் தராததன் காரணமாக அதில் உற்சாகம் குன்றி, கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படக் காலதாமதம் ஆகிறது. கைத்தறியாளர்கள் கூட்டுறவுத் துறையில் பெருமளவுக்குச் சேரும் வகையில் சர்க்கார் மூலமாகக் கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பட்டுக் கைத்தறியானது மிக மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் துணியின் தேக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. நாகரிகமான மற்ற துணிகள் வந்ததன் காரணமாகப் பட்டுக் கைத்தறி மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அந்தத் துணிகளெல்லாம் மற்ற மாநிலங்களில் விற்கப்படுவதற்கு வேண்டிய வசதிகளை நம்முடைய சர்க்கார் மேற்கொண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கு வேண்டிய வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



சாலைப் பராமரிப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது, பெரும் பங்கினைக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். கிராமச் சாலைகள் என்றும், ஜில்லாச் சாலைகள் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, நபர் ஒன்றுக்கு 40 காசு விதம் மானியமாக அளித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை நீக்கி, ஒவ்வொரு வட்டாரத்தில் இருக்கும் ரோடுகளையும் மைல் கணக்கில் கணக்கிட்டு அதற்கேற்றபடி உதவித் தொகை ஒதுக்க வேண்டும். ஜனத்தொகை அடிப்படையில் ஒதுக்குவதன் காரணமாக, அதிக ஜனத்தொகை இருக்கும் இடத்தில் பணம் அதிகமாகச் செலவிடப்பட்டு, குறைவாகச் சாலைகள் இருக்கும் இடத்திற்கு ஒதுக்கிய தொகை மிச்சப்படும் நிலைமை இருக்கிறது. சாலைகளின் நீளம் அதிகமாக இருக்கும் சில வட்டாரங்களில் அது பாதிக்கப்படுகிறது. ஆகவே, அந்தத் தொகையை மைல் கணக்கில் அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க நான்காவது திட்டத்தில் வகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, கிழக்குக் கடற்கரை சாலை ஒன்று அமைக்கவேண்டும் என்று நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நிச்சயமாக அமைப்பதன் மூலமாக நம்முடைய மாநிலத்தினுடைய போக்குவரத்து நிலைமை சீர்படக் கூடும். நான்காவது திட்டத்தில் முதலிலே அதைத் துவக்குவதற்கு வேண்டிய வழிவகை கண்டு, அதை விரைவில் அமைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் பால் பஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. ஈரோடு போன்ற நகரங்களிலிருந்தும், பக்கத்து மாவட்டங்களிலிருந்தும் பால் வந்து கொண்டிருக்கிறது. அதனால் போக்குவரத்துச் செலவு அதிகமாகிறது. பால் பஞ்சத்தை நீக்குவதற்கு சென்னை நகரத்தை அடுத்திருக்கும் பல பெரிய தாலுக்காக்களில் பால் பண்ணைகளை அமைப்பதன் மூலமாகப் போக்குவரத்துச் செலவு குறைவதோடு, உடனடியாகப் பால் சென்னை நகரத்திற்குக் கிடைக்கக்கூடும். அத்தகைய ஒரு விரிவான திட்டத்தை துவக்க வேண்டும். சென்னை நகரத்தை அடுத்திருக்கும் 30 மைல் வட்டாரத்திற்குள் பால் பண்ணைகளை அமைப்பதன் மூலம் பால் சீக்கிரமாகவும், கெடாமலும் வந்து சேர வாய்ப்பு இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏறக்குறைய மூன்று லட்சம் மீனவ மக்கள் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய வசதியையும் வாய்ப்பையும் நிச்சயமாகச் செய்வதன் மூலம் நம்முடைய நாட்டின் வருவாயும் உயர்வதோடு, உணவு நெருக்கடியும் ஓரளவுக்குத் தீரும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அந்தத் துறையிலும் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து, நான்காவது திட்டத்தில் எந்த எந்த அளவிற்கு விருத்தி செய்யவேண்டும் என்பதையும் சர்க்கார் உணர்ந்து செயல்படவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கின்றேன்.

* **திரு. சா. ராமசாமி:** தலைவர் அவர்களே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பில் முக்கியத்துவம் வாய்ந்த விவசாயத்தைப் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. விவசாய அபிவிருத்தி பற்றிய பிரச்னையில் ஆண்டுதோறும் விவசாயிகளுடைய தேவை பூர்த்தி பற்றி அமைச்சர் அவர்கள் கூறாமல் இருப்பதில்லை. இருப்பினும் உணவுப் பஞ்சம் நாளுக்கு நாள் நீடித்துக் கொண்டே இருக்கிறது. சுயதேவை பூர்த்தியான பிறகும் உணவுப் பஞ்சம் ஏற்படுவதற்கான சூழ்நிலை என்ன என்பதைப் பற்றிய நிலைமையை ஆராய்ந்து அதற்கான முடிவு எடுப்பதற்கு வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்படவில்லை. இப்படிச் சரியான முறையிலே அபிவிருத்தி ஏற்படாததற்குக் காரணம், தவறான கணக்குகள் கொடுப்பதுதான் என்பது புலனாகிறது. அதாவது, விளைவினுடைய கணக்கை கீழ் மட்டத்தில் இருக்கிறவர்கள் அதிகமான முறையில் கணக்குக் காட்டுகிறார்கள் என்பதுதான். இதில் இருக்கும் பிரசினை கணக்குகள் சரியான முறையில் இல்லை என்பது. விவசாயிகள் எந்தெந்த அளவில் முன்னேறாமல் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு, விவசாயப் பிரச்னையை எந்தெந்த வகைகளில் கையாண்டால் அபிவிருத்தி ஏற்படும் என்று கண்டறிந்து, சூழ்நிலைக்கேற்றவாறு அவைகளைத் திருத்தியமைக்கவேண்டும்.

முதலாவதாக, இப்பொழுது கூட்டுறவு நிறுவனத்தின் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. நீண்ட காலத் தவணை முறையில் அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படவில்லை. அந்த முறையில் கொடுப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும். எருக் கடன் ஆண்டுக்கு ஆண்டு கொடுக்கப்படுகிறது. உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்கிறவர்களுக்கு உடனடியாக உரம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதில்லை. மேலும், விளைவில்லாத பகுதிகளில் கட்டாயப்படுத்தி நிலங்களையும் உழவுக் கருவிகளையும் ஜப்தி செய்து எடுத்துவிடுகிறார்கள். இதன் மூலமாக பல விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இந்த முறையிலும் விவசாயிகளுக்கு ஓரளவு சலுகை தருவதற்கான வழிவகை செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியில், மின்சாரத்தைப் பொறுத்தவரையில் முன்னேற்றம் இல்லாமலிருக்கிறது. 1961-ம் ஆண்டு கடைசியில் தேர்தல் நேரத்தில், இப்பொழுது உணவு அமைச்சராக இருக்கிற அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது, மணகதி, தாப்பளூர், கோடாரிகருப்பூர்: உதயநத்தம் ஆகிய நான்கு கிராமங்களில் மின்சார நிலையங்கள் வைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்கள். இன்று வரையில் அந்த ஊர்களுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. 1961-ம் ஆண்டு கடைசியில் தேர்தல் நேரத்தில் மின்சார நிலையத்திற்கான அடிக்கல் நாட்டியிருந்தும், இன்று வரையில் மின்சாரம் வழங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. என்னுடைய தொகுதியில் இரண்டொரு கிராமங்களுக்கு மின்சாரம் வந்திருந்தபோதிலும், அப்படியே நிறுத்தப்பட்டு, இன்று வரையிலும் விவசாயம் சம்பந்தமான காரியங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுவது தடையாக இருக்கிறது. சில இடங்களில் த்ரீ-பேஸ்டு



லைன் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுக்கப்படாத இடங்களில் விவசாயப் பம்ப் செட்களுக்குத் தேவையான மின்சாரத்தை எடுப்பதற்கு நிலைமை உருவாவதில்லை.

உடையார்பாளையம் தாலுக்கா பிற்பட்ட பகுதி மட்டுமல்ல, குடிநீர்ப் பிரச்னையிலும் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், அடிக்கடி யானைக்கால் நோய், நரம்புச்சிலந்தி, காலரா போன்ற நோய்கள் வருகின்றன. கொள்ளிடத்திலிருந்து தாப்பளூர் வழியாக ஜெயம்கொண்டம் வரையிலும், வெள்ளாற்றிலிருந்து செந்துறை வரையிலும் தண்ணீரைக் கொண்டுவரவேண்டும் என்று மாவட்ட மன்றங்களில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்று வரையிலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றினால் மிகப் பலனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அது மட்டுமல்ல, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் மேல்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க 20,000 ரூபாய்வரை செலவழிக்கிறார்கள். நான் கூறும் திட்டத்தின் வாயிலாக 20 பஞ்சாயத்துக்கள் பலன் அடையும். ஒவ்வொரு பஞ்சாயத்தும் 20 ஆயிரம் ரூபாய் செலவழித்தும் போதுமான அளவிற்குக் குடி நீர் கிடைப்பதில்லை. இதுபோன்ற முறைகளைக் கையாண்டால் மிகவும் வசதியாக இருக்கும்.

உடையார்பாளையம் தாலுக்காவில் ஜெயம்கொண்டம் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தினால் தாப்பளூர் பகுதி மக்களுக்கும் வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், நமது நாட்டில் இலவச ஆரம்பக் கல்வி அளிப்பதாகக் கூறுகிறோம். இருந்தாலும், கிராமப் பகுதிகளில் இருக்கும் ஏழை விவசாயிகளின் குழந்தைகள் படிப்பதற்கான சூழ்நிலை அங்கு இல்லை. அந்த நிலை உருவாவதற்கு முடியவில்லை. எல்லாக் குழந்தைகளுக்கும் சலுகை அளித்திருக்கிறோம் என்றாலும், படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. காரணம், அந்தத் திட்டம் வெற்றிபெறுவதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தவில்லை. கட்டாயக் கல்விப் பொறுப்பை அந்தந்தப் பஞ்சாயத்துத் தலைவரிடம் ஒப்படைத்திருக்கிறோம். ஐந்தாறு வயதுள்ள குழந்தை பள்ளிக்கு செல்லவில்லையென்றால், தலைவருக்கு வேண்டிய குழந்தையாக இருந்தால், அதைவிட்டுவிடுகிறார்கள். குறிப்பாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய ஆசை இது. நான் பிறந்த நாட்டிலே ஐந்து வயது ஆனவுடன் ஜனனக் கணக்குப் பதிவேட்டின்படி அந்தக் குழந்தையின் பெற்றோருக்கு 'உம்பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டுமென்ற, தாக்கீது அரசாங்கத்தில் இருந்தே போகவேண்டும். அந்தப் பெற்றோரும் அந்தப் பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். அப்படி அனுப்ப வசதி இல்லாத பெற்றோராக இருந்தால் அந்தக் குழந்தையை அரசாங்கமே எடுத்துக்கொண்டு அதற்கு கல்வி அறிவு புகட்டி, தொழில் கல்வி அளித்து நாட்டிலே தானே உழைத்துச் சம்பாதித்து வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். உணவு

வசதி இருந்தால் தான் படிப்பில் கவனம் செல்ல முடியும். ஆகவே வசதி அற்ற பிள்ளைகளை அரசாங்கமே தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டு நல்ல கண்காணிப்பில் கல்வி அறிவு அளிக்கவேண்டும், அப்போது தான் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என் தொகுதியைப் பொறுத்தவரையில் மருதையாறு திட்டத்தையும், கொள்ளிடம் ஆற்றுப் பாலம் கட்டுவதையும் நிறைவேற்ற இருப்பதாகக் காணப்படுகிறது. இவை நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. ஆகவே, இவற்றை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் ஆண்டிலேயே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. தோ. மு. நல்லசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரவேற்கத்தக்கது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், திட்டம் அமுலாக்கப்படுவதிலே பல குறைகள் இருக்கலாம். அந்தக் குறைகள் எல்லாம் காலப் போக்கில் அப்புறப்படுத்தப்பட வேண்டியவை. அதிலே அமைச்சர்கள் மட்டும் அல்ல, சட்டசபை உறுப்பினர்களும், பொது வாழ்வில் அக்கறை உள்ளவர்களும் ஒட்டுமொத்தமாக முயற்சி செய்தால் தான் அத்தகைய குறைபாடுகள் நிவர்த்திக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே, நம் தமிழகத்தைப் பொறுத்த வரைக்கும் கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் நல்ல முறையில் அமலாக்கப்பட்டிருக்கிறது என்பது என் கருத்து.

சென்ற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நாம் ஒதுக்கியது 291 கோடி ரூபாய் தான் என்று சொன்ன போதிலும் 340 கோடி ரூபாய் அளவுக்குச் செலவிட்டிருக்கிறோம் என்ற உண்மையை தெரிந்துகொள்ளும்போது நாம் மகிழ்ச்சி அடைகிறோம். இன்னும் செய்யப்பட வேண்டிய திட்டங்கள் இருந்தாலும், செய்திருக்கக் கூடிய திட்டங்களின் மூலமாக நாம் முன்னேறியிருக்கிறோம் என்று எண்ணத் தோன்றுகிறது.

இப்போது, குறிப்பாக அறிக்கையில் சொல்லும்போது நமது முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த நான்காவது திட்டம் 815 கோடி ரூபாய் திட்டமாக அமைய இருந்த போதிலும், வேளாண்மைத் துறையில் நமது சாதனைகளைப் பொறுத்தே இத்திட்டத்தின் வெற்றி அமையும் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற மூன்று திட்டங்களைப் பார்க்கிறபோது 22 சத விகிதம் விவசாய உற்பத்தி பெருகி இருப்பதை விவரமாகக் கொடுத்திருக்கிறார்கள். முதல் திட்டத்தின் துவக்கத்தில் உணவு தானிய உற்பத்தி 38 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. அது இரண்டாவது திட்ட இறுதியில் 53 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. மூன்றாவது திட்ட இறுதியில் அதுவே 65 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளதை விளக்கமாகக் கொடுத்திருக்கிறார்கள்.





அப்படியே, ஒவ்வொரு துறையிலும் விவசாயத்திற்குத் தேவையான மற்றப் பண்டங்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் உற்பத்தியை அதிகப்படுத்துவதிலும் கவனம் செலுத்தி வருகிறோம். குறிப்பாக நைட்ரஜன் உப்பை எடுத்துக் கொண்டால், ஒரு லட்சத்திலிருந்து 4 லட்சம் டன் வரை உபயோகிக்கக் கூடிய நிலையை அடைந்திருக்கிறோம் என்பது பெருமைப்படுவதற்குரியதாகும்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் நல்ல உரம் தேவைப்படுகிறது. நல்ல விதையும் தேவைப்படுகிறது. எல்லாவற்றையும் விட பாசனத்திற்குத் தண்ணீர் தான் முக்கியமானது. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது

" We have reached the limits of utilization of water resources and further significant expansion of irrigation will be possible only if neighbouring States agree in the National interest ".

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது மேற்குத் திசையில் ஓடக்கூடிய நதிகளின் தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ள கேரள அரசாங்கம், மைசூர் அரசாங்கம் ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதாக இருக்கிறது. அவர்களுடைய ஒத்துழைப்பின்பேரில் தான் நிறைவேற்றியாகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நானும் ஒத்துக்கொள்கிறேன்.

இருந்தாலும் என் தொகுதி சம்பந்தப்பட்ட வரையில், என் தாலுக்கா சம்பந்தப்பட்ட வரையில் இவ்வளவு காலமாக நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் எதுவும் என்னுடைய தாலுக்காவிற்குப் பிரயோஜனப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

குறிப்பாக, சென்ற ஐந்தாண்டுத் திட்டத்திலேயே நொய்யலாறு திட்டத்தை எடுத்துக் கொண்டோம். அதைப் பரிசிலித்துத் தயாரிப்பதற்கே 2 லட்சம் ரூபாய் வரையில் இலாகாவினர் செலவழித்திருக்கக் கூடும். ஆனால் அந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மைசூர் அரசாங்கத்தின் சம்மதம் பெறவேண்டியிருக்கிறது என்று சொல்லி அதை நிறைவேற்றாமல் விட்டுவிட்டார்கள். அதே சமயத்தில் சற்று நேரத்திற்கு முன்பு பேசிய மாரப்ப கவுண்டர் அவர்கள் பவானி ஆற்றுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பவானி ஆறும் காவேரியை நோக்கி வரக்கூடிய உப நதி தான். நொய்யல் ஆறும் காவேரியை நோக்கி வரக்கூடிய நதி தான். இருந்தாலும் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட்ட திட்டம் நான்காவது திட்ட வரைவு நகலில் காணப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டும் அல்ல. அமராவதி சம்பந்தமாக கிளைவாய்க்காலை ரீமாடல் செய்வதற்கு ஒரு பெரிய திட்டம் தயாரித்து, அதை அங்கிருந்து பிரதம என்ஜினியருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அது எனக்குத் தெரியும். அதுவும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகலில் சேர்க்கப்படவில்லை. எங்கள் தாலுக்காவில்

உள்ள விவசாயிகளுக்குச் சர்க்கார் நீர்ப்பாசன வசதி மட்டும் செய்து கொடுத்தால் போதுமானது. உரம், விதை, போன்றவற்றுக்குக் கூட உதவி செய்யவேண்டும் என்பதில்லை. தண்ணீர் மட்டும் கொடுத்தால் மண்ணைப் பொன்னாக்கக் கூடிய விவசாயிகள் இருப்பதனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே நொய்யல் ஆறு திட்டத்தையும், **அமராவதி வாய்க்கால் ரீ** மாடல் திட்டத்தையும் நிச்சயமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதுபற்றி மராமத்துத்துறை அமைச்சரிடமும் கூறினேன். அவசியம் இவற்றைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தி முடித்துக் கொள்கிறேன். **வணக்கம்.**

*** திரு. செ. மாதவன்:** கனம் தலைவர் அவர்களே, நான்காவது திட்டத்தைப்பற்றி ஆராயும்போது, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் பொறுத்த வரையில் நாம் பெற்ற அனுபவங்களை நினைவூட்டிக்கொள்வது சரியாகும் என்று நினைக்கிறேன். சில நாட்களுக்கு முன்னால் நமது தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கக் கூடிய கருத்து கூர்ந்து நினைவூட்டிக் கொள்ள வேண்டிய கருத்தாகும். பெரிய திட்டங்களைப் போட்டு அதில் பகட்டான விளம்பரம் செய்து அதைப்பற்றிப் பல வெளியீடுகள் அச்சிட்டுக் காண்பிப்பதைவிட நாம் போட்ட திட்டங்களின் சாதனையை, நாம் அடைந்த பலன்களைக் கூர்ந்து நோக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள். நாம் அனுபவத்தில் பெறுகின்ற நிலையும் அதே நிலைதான். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பின்னால் கூட நமக்கு சமுதாயத்தில் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு நின்று திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இத்தகைய அரசியல் நிலைமை திட்டங்களின் வெற்றிக்கு வழிவகுக்காது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். திட்டங்களை உருவாக்குவதிலேயே மாநில அளவில் திட்டக் குழு வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. திட்டங்கள் தீட்டும்போது இல்லாவிட்டாலும், அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறபொழுது அவை ஒழுங்காக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கத்தக்க ஏற்பாடு வேண்டும். திட்டங்கள் தோல்வியுறுவதற்குக் காரணம் திட்டங்களை நிறைவேற்றுகிற போது போதுமான கண்காணிப்பு இல்லாததேயாகும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திட்டங்கள் வகுக்கும் போது மத்திய அரசாங்கத்தின் பங்கு என்ன, மாநில அரசாங்கத்தின் பங்கு என்ன என்பதைப் பார்க்க வேண்டும். உண்மையில் குடியாட்சித் தத்துவ அடிப்படையில் இன்றைக்குத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றனவா என்றால், இல்லை என்று சொல்லக் கூடிய சூழ்நிலை தான் இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 31 சத விகிதம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 51.6 சத விகிதம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 63.5 சத விகிதம் என்பதா? இப்படி மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் குவிக்கப்படுவதுடன் இல்லாமல் பொருளாதார அதிக முக்கியத்துவ உணர்வும் ஏற்பட்டுவிட்டிருப்பது குடியாட்சித் தத்துவத்திற்கு பொருத்த



மானதா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, பஞ்சாயத்து மன்றங்களை நம்பித் திட்டங்களை விடுவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் பார்க்க வேண்டும். அது எவ்வளவு தூரம் தோல்வியில் முடிந்திருக்கிறது என்று பார்க்கவேண்டும். இந்தத் திட்டங்கள் வகுக்கப்படும்பொழுது, பின்தங்கிய பகுதிகள், பின்தங்கிய மாவட்டங்கள் என்ற முறையிலே தனியாகப் பரிசிலனை செய்யப்படுவதில்லை. பொதுவாக, மாநிலத்தை எடுத்துக்கொண்டு, அந்த அளவிலேதான் திட்டங்கள் போடப்படுகின்றன. ஆகவே, தனியாகப் பின்தங்கிய பகுதிகள், மாவட்டங்கள் என்ற முறையிலே திட்டங்களைப் போடவேண்டும்.

தண்ணீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரையில், அரசாங்கம் ஒரே கருத்தைத்தான் பலமுறை வற்புறுத்தி வருகின்றது, 'நாம் நம்முடைய நீர்நிலைகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு விட்டோம்' என்று. இதைத் தவிர வேறு மாநிலங்களை அணுகி அங்கேயிருந்து தண்ணீரைப் பெற்றுப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதற்காக என்ன முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது? கேரள அரசாங்கத்துடன் நம்முடைய அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்களே, மைசூர் மாநிலத்துடன் பேசினார்களே, என்ன ஆயிற்று? இன்னும் இதுபற்றி முடிவு ஏற்படாததற்குக் காரணமென்ன? இதைப்பற்றி கட்சிக் கூட்டத்திலேயாவது பேச்சு வார்த்தை நடத்தினார்களா? இல்லாவிட்டால் மத்திய அரசாங்கத்திலே இதற்கென்று ஒரு துறையிருக்கிறதே, அந்தத் துறையினிடமாவது இதைப்பற்றிப் பேசினார்களா? ஆகவே, இதைப்பற்றி விரைவில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். குழாய்க் கிணறு வெட்டிவிட்டோம், சப்டெரேனியன் வாட்டர் ரிசோர்ஸஸைப் பயன்படுத்திவிட்டோம் என்று சொல்கிறார்களே தவிர, இன்னும் இந்தத் திட்டத்தில் முழுக் கவனம் செலுத்தவில்லையென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். திட்டங்களை நிறைவேற்றும் வேலையும் மாநில அளவிலேதான் மேற்கொள்ளப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. எனவே, மாவட்ட அதிகாரிகளுக்குப் பரவலாக அதிகாரங்களைக் கொடுத்து, ரெட் டேபிசத்தைக் குறைப்பதற்கு வழிசெய்யவேண்டும். நாம் சமுதாயத்தின் அமைப்பையும், திட்டங்களினுடைய முறையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அரசாங்கத்திற்கு உணவுப் பொருள்களை, நுகர்வுப் பொருள்களைச் செய்வதிலே முழுப் பொறுப்பும் இருக்கவேண்டும். பொதுத்துறையைச் சார்ந்திருக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். சில மாதங்களுக்கு முன்பு சிமிண்ட் மில்ஸ், ஸ்பின்னிங் பேக்டரிஸ் போன்ற தொழில்களை இனிமேல் அரசாங்கம் ஏற்று நடத்தும் என்று தொழில் அமைச்சர் அவர்கள் கருத்து வெளியிட்டார்கள். ஆனால் அவர்கள் வெளியிட்ட கருத்து கொள்கையளவிலேதான் இருக்கின்றதே தவிர, அதை எந்த அளவுக்குப் பின்பற்றி வருகிறார்கள் என்று சொல்லமுடியாது.

திட்டத்திற்கு நிதி சேர்ப்பதில் திட்டக் கமிஷனுடைய அறிக்கையைப் பார்த்தால், வெளிநாட்டுச் செலாவணி எந்த அளவுக்கு இருக்கப்போகிறது, திட்டத்திற்கு விடுமுறை கொடுக்கலாமா என்ற தத்துவங்களைப் பொறுத்துத்தான் திட்டத்தின் அளவும்

[திரு. செ. மாதவன்] [9th August 1965

இருக்கப்போகிறது என்பது தெரிகிறது. திட்டத்திற்கு நிதி எப்படிச் சேர்ப்பது, வரி போட்டா அல்லது வரியற்ற வருமானங்களைப் பெருக்கியா என்பதைச் சிந்திக்கவேண்டும். சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிக்கவேண்டுமென்றால் வரியற்ற வருமானத்தை, நான்-டாக்ஸ் இன்கம்மைப் பெருக்கியாக வேண்டும். எந்த அளவுக்கு வரியற்ற வருமானத்தை பெருக்குகின்றோமோ அந்த அளவுக்குத் தான் திட்டங்களினுடைய பலன்கள் இருக்கும். வரியைப் போட்டே ஆளவேண்டுமென்று நினைப்பது சமதர்ம சமுதாயத்திற்கும், திட்டத்திற்கும் பயன்படாது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ரூரல் செக்டாரிலிருந்து எந்த அளவுக்குச் செல்வத்தைப் பெறலாம் என்ற கருத்து இருந்து வருகிறது. முதலாவது திட்டத்திற்காக ரூரல் செக்டாரிலிருந்து 5 கோடியே 25 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போல மீண்டும் விவசாயிகளிடமிருந்து இந்தத் திட்டத்திற்கும் வரிவசூலிக்கின்ற கருத்து, நிலவரியை உயர்த்தவேண்டுமென்ற கருத்து, திட்டக் கமிஷனிடம் இருந்து வருகிறது. இதை முதலமைச்சர் அவர்கள் வன்மையாக எதிர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திட்டங்களைப் போடுவதற்கு முன்பாக அந்தத் திட்டங்களினால் விளையக்கூடிய பயன்களை நாம் அறிய வேண்டும். இன்று ரூபாயின் மதிப்பு 17 காசாகக் குறைந்துவிட்டது. திட்டங்களின் விளைவுகள் ஏழைகளுக்குப் பயன்படவில்லை. ஆகவே, அந்த அளவுக்குத் திட்டங்களை வகுக்காமல் ஏழைகளுக்குப் பயன்படத் தக்கவிதத்தில் அரசாங்கம் திட்டங்களைப் போடுவதைப் பொறுத்துத்தான் அதனுடைய விளைவுகளும் இருக்கும். ஆகையால் திட்டங்களைப் போடுவதற்கு முன்பே, திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்பே, அதனுடைய பயன்களைச் சிந்தித்து அதற்குத் தகுந்தாற்போல் திட்டங்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

12-30 p.m. * **Sri C. CHIRANJEEVULU NAIDU**: Mr. Speaker, Sir, I would like to say a few words on the Draft Outline of the Fourth Five-year Plan, which is before the House for discussion. I welcome the Fourth Five-Year Plan. Planning is essential for the underdeveloped countries. Planning is not new to this country. Even prior to Independence, there has been a National Planning Commission under the Chairmanship of Sri Jawaharlal Nehru. We have programmed to develop this country on a planned and progressive basis. So the Plan is an imperative need for this country, but while making the Fourth Five-Year Plan and executing it, we must bear in mind that the items of expenditure under several heads must not contribute to inflation in this country. As we have seen in recent times, the several amounts that we spend under the several heads contribute to inflation. I therefore request that this aspect should be borne in mind.

The Plan, which it is stated is aimed mostly at improving agriculture, is not quite encouraging. The problems of the agriculturists are many. From time immemorial the agriculturists have



9th August 1965] [Sri C. Chiranjeevulu Naidu]

been suffering in several ways. We have been talking much about agriculture. Though the agriculturist is said to be the backbone of the country, the assistance and the incentives provided to him are not satisfactory. We have been asking for crop insurance and cattle insurance, but nothing has been said about it in the Draft Plan. The agriculturist must be assured of a reasonable income; he must be assured of his crops and he must be assured of his progress. All of us are interested in improving agriculture. But in actual execution, several restrictions are imposed. The incentives given to the agriculturists are not adequate. Our Hon. Chief Minister, who himself hails from the agricultural community, should see to it that they are given all the help and encouragement.

In this connection I would suggest that the consolidation of land holdings may be given top priority while executing the Fourth Plan. The fragmentation of land holdings has not helped to increase the production. The consolidation of landholding avoiding thereby fragmentation would go a long way to step up food production. The effect of fertilisers and pesticides on the crop should also be taken into consideration. We now see that the yield is deteriorating slowly after the application of the fertilisers. A research can be made about this, at least at the State level, to find out how far the application of chemical fertilisers and pesticides has affected food production.

The rural indebtedness has not gone down, but, on the other hand it is increasing day by day. We must not shut our eyes to the progress that has been achieved during the last 15 years. At the same time, when we raise the standard of living of a man, we must see that he is able to maintain that standard and even progresses more. The same applies to the nation also. If the nation is accustomed to grow at a certain rate of development, it must be allowed to grow at that rate, if not more. At the same time, we must proceed slowly and cautiously in spending money on the various schemes.

As regards co-operation, I would like to say one word. The assistance given to the agriculturists is not adequate. Recently, insistence is made by the State Co-operative Bank and the Reserve Bank for non-overdue coverage by the Central Bank while extending loans to co-operative societies. The Central Banks find it difficult to make the recoveries to maintain non-overdue coverage and provide loans to other ryots. I request the Government to kindly look into this matter. [The agriculturists must get proper assistance in proper period.]

Regarding Industries, the policy of lop-side development of industries must be avoided. The concentration of industries in one place may pose or create several problems for the Government and also for the people. This could be avoided if only we develop industries in different places. Otherwise, we may get

[Sri C. Chiranjeevulu Naidu] [9th August 1965

more problems and we would not be in a position to solve them. So, I request the Government to consider all these aspects of the matter. With these words, I resume my seat.

MR. SPEAKER : The hon. Member Sri T. P. Alagamuthu, can move his amendment.

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

'Add at the end the following :—

" and on such consideration this House recommends that the pending Kollimalai Reservior Scheme to construct a reservoir across the Ayyor river near Puliyancholai in Tiruchi district be included in the Fourth Five-Year Plan ".'

The amendment was duly second.

* **திரு. சா. கணேசன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் விளக்க உரைகளின் மீது என்னுடைய கருத்துக்களைப் புலப்படுத்திக்கொள்ள முன்வந்திருக்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

திட்டத்தின் இலக்கு—அது உண்டா இல்லையா என்பது வேறு விஷயம்—என்ன என்பதிலே சந்தேகம் இருந்தாலும், திட்டப் பேச்சுக்கு இலக்கு ஒன்று நிச்சயமாக இருந்திருக்கிறது, இந்தச் சபையிலே. திட்டத்தைப் பற்றிப் பேசியவர்களுக்கு எல்லாம் ஒரு இலக்காக நாங்கள்—சுதந்திராக் கட்சி—இருந்தோம். இதனை அவர்கள் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவ்வாறு பயன்படுத்திக் கொண்டமைக்காக அவர்களுக்கு நன்றி கூடத் தெரிவிக்க வேண்டும். சிலர் திட்டத்திலுள்ள விஷயங்களை விமர்சிக்க மறந்தாலும் கூட, எங்களைப்பற்றி விமர்சிக்கத் துளியும் மறக்கவே இல்லை. கட்சிக்கு வளமூட்டுவதற்காக மெய்யற்ற ஒன்றையும் கூட லாவகமாக உண்மை போல் உருமாற்றிக் காட்ட முடியும் என்பதையெல்லாம் மிகத் திறமையாகச் செய்து காட்டினார்கள் சில கனம் உறுப்பினர்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டு முதற்கண் உரியதாகும்.

அப்படிப் பேசுகின்றபோது கனம் உறுப்பினர் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். எங்கள் கட்சி உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் பேசுகின்றபோது, 'திட்டத்தைச் சிலநாட்கள் ஒத்தி வைத்து இதுவரை ஏற்பட்ட பலாபலன்களைக் கணிக்கவேண்டும்' என்ற கருத்தைத் தெரிவித்ததற்காக, " ஆற்றிலே போய்க் கொண்டிருக்கிற படகை ஓட்டிக் கொண்டிருப்பவனைப் பார்த்து, ' துடுப்பை எறிந்து விடு ' என்று சொல்வதைப் போல்தான் அவர்களுடைய ஆலோசனை இருக்கிறது " என்ற உவமையைக் கூறி மன மகிழ்ச்சியடைந்தார்கள். அந்த உவமையை மனப்பூர்வமாக வரவேற்கிறேன்; அருமையான உவமை என்றே நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். படகு அக்கரைக்குப் போகாமல் கடலை நோக்கிப் போய்க் கொண்டிருக்குமானால்,



9th August 1965] [திரு. சா. கணேசன்]

துடுப்பைப் போடுகின்றவன் கடலை நோக்கிப் படகு போகாமல் தடுக்காமல், கடலை நோக்கியே செல்லுகின்ற முறையிலேயே துடுப்பை வலித்துக் கொண்டிருப்பானேயானால், காற்றிலே படகு கொஞ்சம் இப்படித் திரும்பி கரையைச் சேரலாம் என்ற நிலையில் அவன் அந்தத் துடுப்பைப் பறித்து எறிந்திருக்க வேண்டும். எதிர்க் கட்சிக்குச் செயல் உரிமை கிடையாது அல்லவா? சொல்லுகின்ற உரிமைதான் உண்டு. ஆதலினாலே சொன்னார். இதை விருப்பு வெறுப்பு அற்ற முறையிலே நோக்கி திட்டத்தை ஓராண்டுக் காலம் ஒத்தி வைத்து அதைப் பற்றிச் சிந்திக்கலாமல்லவா! கட்சியிலே தீர்மானம் போட்டு விட்டோம் என்பதற்காக, தீர்மானத்திற்காக விஷயங்களை அணுகுவது என்பது நெறியன்று, முறையன்று. இதையெல்லாம் மனத்திலே கொண்டு பார்க்கின்றபோது, நன்மை தீமை புலப்படுகின்றபோது, எப்படிச் செய்யவேண்டுமென்பது நமக்கெல்லாம் புலப்படும்.

ஒரு பாங்கு அல்லது ஒரு கடைக்காரன் வருஷத்தில் இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்கள் கூட ஸ்டாக் எடுப்பதற்காக, லாப நஷ்டத்தைக் கணக்கிடுவதற்காக வியாபாரத்தை நிறுத்துகின்றான். ஒரு சிறு கடையினுடைய லாப நஷ்டத்தைக் கணக்கிட இரண்டு நாள், மூன்று நாள் சிந்திக்க வேண்டுமென்றால், இவ்வளவு அதிக எண்ணுள்ள இவ்வளவு பெரிய திட்டங்களைப் போட்டுச் செய்யும்போது அதன் லாப நஷ்டத்தை, பலாபலன்களைக் கணக்கிடும் நிலைமை ஏற்படுமானால், இவ்வளவு பெரிய பிரம்மாண்டமான திட்டங்களைத் தொடங்கி அதனால் ஏற்பட்ட லாப நஷ்டம், நன்மை தீமை, சாதக பாதகங்கள், வின் வியயங்கள், கையாடல்கள் ஆகியவற்றைக் கணித்து அறிந்து அவற்றை நீக்குவதற்கான மார்க்கங்களைத் தேடிக் கொடுப்பதற்கு வழிவகை ஏற்படும். அது வேண்டாமா? அதற்காகத்தான் ஓராண்டுக் காலம் திட்டத்தை நிறுத்தி யாவது வையுங்கள் என்று கூறுகின்றோம். அதை விட்டு இது ஓடிக் கொண்டே இருக்கட்டும் என்று சொல்வது நெறிப்பட்ட வழியா என்பதை விருப்பு வெறுப்பற்ற நிலையிலே சிந்திக்க வேண்டும். அன்றியும் அவர்கள் (கனம் உறுப்பினர் தட்சிணாமூர்த்தி கவுண்டர்) இன்னொரு எண்ணத்தையும், வேண்டுகோளையும் விடுத்தார்கள். விவசாயிகளுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி, அவர்களுக்குப் பரிபூரணமாகச் சுதந்திரம் கொடுத்து அவர்கள் விரும்பியதை விளைவிக்கவும், விரும்பியவாறு விற்கவும் வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் கூறியதை வரவேற்கிறேன். அதைக் கூறியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே காலத்திலே, மற்றவர்கள் மட்டும் குறைந்தவர்களா, மட்டமானவர்களா, தேவை இல்லாதவர்களா? விவசாயிகள் எந்த அளவுக்கு இன்றியமையாதவர்களோ அதே அளவுக்கு இன்றியமையாதவர்கள் வியாபாரிகள். இன்றைய நிலையை மட்டும் வைத்துப் பார்க்கக்கூடாது. நேற்றைய நிலையையும் நாளைய நிலையையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பன்னூறு மைல்களுக்கு அப்பால் இருந்து பல்வேறு சரக்குகளைக் கொண்டு வந்து வியாபாரம் செய்திருக்கிறார்கள் என்ற நிலை இருந்ததை தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்

டிருப்பார்கள். தொல்காப்பியத்தில் கூட 'காப்பதற்கான பட்டாளம் வைத்துக் கொண்டிருக்கும் உரிமை மன்னருக்கும், வணிகருக்குந்தான் உண்டு,' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலையை உணர்த்துகிறது. இந்த உண்மையையும், உண்மைக்கு அடிப்படையான காரணத்தையும் உணரவேண்டும். இதையெல்லாம் பார்க்கிறபோது இந்த அளவுக்காவது உணர்ந்து கனம் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சொல்ல முன் வந்ததை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

இதே மாதிரி கனம் உறுப்பினர் திரு. மகாலிங்கம் அவர்கள் ஒன்று சொன்னார்கள். அவர் சொல்லுகின்றபோது, "தி.மு.க.-வுக்கு ஒரு கொள்கை இருக்கிறது. விக்கு ஒரு கொள்கை இருக்கிறது. சுதந்திராவுக்கு ஒரு கொள்கை இருக்கிறது. இந்த மூவரும் சேர்ந்து தேர்தலில் காங்கிரஸை எதிர்க்கப்போகிறார்கள் என்று அறிக்கையிலிருந்து அல்லது பத்திரிகைச் செய்திகளில் இருந்து அல்லது அவர்களுடைய பேச்சுகளில் இருந்து புலனாகிறது" என்று குறிப்பிட்டார்கள். இதிலே என்ன தவறு என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. காங்கிரசுக்குள்ளே இருப்பவர்களாலேயே வேறு வேறு தினுசான அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன. கனம் வெங்கட்டராமன் அவர்கள் ஒரு வகையான ஆட்சி முறை வேண்டுமென்று சொல்கிறார்கள்; கனம் பக்தவத்சலம் அவர்கள் வேறு ஆட்சி முறை இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். திரு. காமராஜர் அவர்களோ இல்லை, இல்லை, இந்த ஆட்சி முறைதான் நீடிக்க வேண்டுமென்று சொல்கிறார். இப்படி ஒரு கட்சிக்குள்ளேயே அபிப்பிராய வேறுபாடுகளைப் பார்க்கிறோம். இந்தியாவில் இந்துக்கள் மட்டுந்தானா இருக்கிறார்கள், இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள், கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள், பார்சிகள் இருக்கிறார்கள், யூதர்கள் இருக்கிறார்கள், எத்தனை மொழி, ஜாதி, மதங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்? அவ்வளவு பேரும் எப்படி 'இந்தியர்கள்' என்று கூறிக் கொண்டு வாழ்கிறார்கள்? எங்களுக்குள்ளே பொருளாதாரக் கொள்கையிலே வேறுபாடு இருந்தாலும் எதிர்க்கட்சிகளாக இருப்பவை காங்கிரசுக்கு எதிராக ஒன்று சேருவதிலே என்ன தவறு? இதையெல்லாம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஐந்தாண்டுத் திட்ட விமர்சனத்தில் ஒருவரைப் பற்றி ஒருவர் விமர்சனம் செய்வது தேவையற்ற பயனற்ற ஒன்று. நான் இதிலே எல்லாம் புகவே விரும்பவில்லை; புகுந்திருக்கவும் மாட்டேன். இந்தப் புத்தகத்திலே இருக்கின்ற லாப நஷ்டத்தை, அவரவர்கள் கண்டபடி அவரவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதாக இருந்தால் நம்முடைய சபைக்கும் நன்மை ஜனநாயகத்திற்கும் நன்மை. திட்டத்திலே இருக்கின்ற புள்ளி விவரங்கள், மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்கள், அதனால் ஏற்படுகின்ற நன்மை தீமைகள், லாப நஷ்டம் இவற்றையெல்லாம் கணித்துப் பேசுவது, சிறப்பும் பொறுப்பும் உடையதாக இருக்கும். அப்படியின்றி எங்களைப்பற்றி விமர்சனம் செய்ய முற்பட்டதால்தான் நான் அதற்கு விடை சொல்ல மட்டும் முன் வந்தேன் என்று கூறி இந்த அளவோடு இதை முடிக்கிறேன்.





சுதந்திரக் கட்சி திட்டத்தையே எதிர்க்கிறது என்றார்கள் யார், எங்கே, எதிர்த்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டாமா? திட்டத்தை நாங்கள் என்றுமே எதிர்த்தது இல்லை. பெரிய காரியங்களைச் செய்வதோ, பிரமாண்டமான, பிரமிக்கும்படியான காரியங்களைச் செய்வதோ, திட்டமல்ல. திட்டம் என்பது என்ன என்பதை நாம் புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. ரஷ்யாவில் திட்டமிருக்கிறது, அமெரிக்காவில் திட்டம் இருக்கிறது. உலகத்தில் எங்கு திட்டம் இல்லை? சமைக்க சாம்பார் வைப்பதாக இருந்தாலும் திட்டம் வேண்டும். இரண்டு விசைக் கத்தரிக்காயை வாங்கிக் கொண்டு வந்து 4 பருப்பைப் போட்டால் சாம்பாராகி விடுமா? அதற்கு ஒரு படி பருப்பைப் போடவேண்டும். நாம் பேசுவதற்கும் திட்டம் வேண்டும். கால அளவு, பேசுகின்ற முறை எல்லாம் இருக்கிறது. திட்டம் இல்லாமல் உலகிலே ஒன்றும் இல்லை.

திட்டம் என்றால் என்ன? நம் தேவை, நமக்கிருக்கிற சக்தி, அதை நிறைவேற்றுவதற்குரிய சாத்தியக்கூறுகள், அதற்கேற்ற காலம், அதைப் பக்குவப்படுத்த வசமான, சிறப்பான இடம், இவற்றையெல்லாம் கணித்துச் செய்வதுதான் திட்டம். எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல பலன் தருமா—நல்லது என்பதை மறந்து விடப்படாது. தீமையற்றதுதான் நல்லது என்பதை பரிமேலழகர் உரை படித்தவர்கள் 'நல்ல' என்ற சொல்லின் பொருளை நன்கு உணர்ந்திருப்பார்கள்—எனக்கு ஒன்று நன்மையாக இருக்கலாம், சோடா குடிப்பது எனக்கு நன்மையாக இருக்கலாம், அதனால் பிறருக்கு அது தீமை விளைவதாக இருந்தால் அது நல்லதல்ல, பிறருக்குத் தீமை இல்லாது சிலருக்கு அல்லது ஒருவருக்கு நன்மை பயப்பது இருக்கிறதே அதுதான் நன்மை, இந்த நல்ல பலன்கள் அதில் உண்டா—என்பதை ஆய்ந்து, ஆராய்ந்து, தெரிந்து, தெளிந்து செயல்படுவதற்குப் பெயர்தான் திட்டம், திட்டத்தை யார் மறுக்கிறார்கள்? இதற்கு வள்ளுவன் வழி காட்டுகிறான்.

பொருள், கருவி, காலம், வினை; இடனொடு
ஐந்தும் இருள் தீர எண்ணிச் செயல்.

அற்புதமாகச் சொல்கிறான் செயல் வகை பற்றி. எழுத்துக் கூட மாறி விடக் கூடாது என்பதற்காகக் குறிப்பு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். 'இருள் தீர எண்ணிச் செயல்' என்கிறான். உரை நமக்குத் தெரியும். பொருள் என்றால் தன் கைப்பொருள். தன் கைப்பொருள் என்றால் இந்தியன் பாங்கில் பல லட்சம் ரூபாய் இருக்கிறது என்று அதை வைத்துக் கொண்டு திட்டம் போடக் கூடாது. என் கணக்கில் எவ்வளவு இருக்கிறது, 50 ரூபாய் இருக்கிறதா 500 ரூபாய் இருக்கிறதா என்று கணித்துத் திட்டம் போட வேண்டும். ஆக, பொருள் என்பது தன் கைப்பொருள். கருவி என்றால் தளவாடம்—சிப்பந்தி. காலம் என்றால் வேறு ஈடுபாட்டிற்குஅவசியமில்லாத சமயம். வினை என்றால் தீமையோ, நட்டமோ இல்லாத பணி. இடம் என்பது பயன் பெருகக் கூடிய வாய்ப்பான இடம். இடம் என்று கூறும்போது, காரைக்குடியில் ஒரு டாம்

கட்ட வேண்டுமென்றால் என்ன அர்த்தம்? பயன் வேண்டுமென்றால் அதை மேட்டூரில் கட்டவேண்டும். அதைத்தான் குறிக்கிறது இடம். இக்குறளுக்குப் பொருள் கூறுவதை ஆங்கில மொழியில் பார்த்தால் மேலும் விளக்கம் பெறலாம். போப் முதலியவர்களைக் காட்டினால் பல வேறுபட்ட கருத்துக்களைக் கூற முயலக்கூடும். எனவே வ.வெ.சு. ஐயர் எழுதிய உரையை இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன். காரணம் அவர் ஓர் உயர்ந்த தேசபக்தர், நமக்கு கிட்டதட்ட குரு நிலையில் இருந்தவர், தமிழ் நாட்டுப் பண்பாட்டை நன்கு உணர்ந்தவர், பன்மொழி வல்ல பேரறிஞர் வி.வி.எஸ். ஐயர் அவர்களின் ஆங்கில உரை என்ன? அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளதைப் பார்த்தால் நமக்கு மேலும் தெளிவேற்படும்.

"Five things should be carefully considered in the doing of ALL actions, namely, the resources in hand, the instrument, the proper time, the nature of the action and the proper place for its execution".

'Resources in hand' என்றால்,

நமக்கு வரும் என்று எதிர்பார்ப்பது, பிறர் தருவார் என்று எதிர்பார்ப்பது, எப்படியாவது ஈட்டி விடலாம் என்று நம்புவது அல்ல. சுதந்திரக் கட்சி இதைத்தான் கூறுகிறது. நானும் கூறிக் கொண்டே வருகிறேன். திட்டமிடலாகாது என்று கூறவில்லை. எல்லாவற்றையும் ஆய்ந்து, தெரிந்து, தெளிந்து செய்யவேண்டும் என்பது தான் எங்கள் வாதம். நமக்குத் தேவை பெரிதாக இருக்கலாம். ஆனால் அதை நிறைவேற்றுகிற வாய்ப்பு, வளம் நமக்கிருக்கிறதா, அதை நிறைவேற்றுவதற்குரிய ஆற்றல் நமக்கிருக்கிறதா என்பதை எல்லாம் கணித்து அறிந்து அந்த நெறியில் செல்லவேண்டும். இதை இரண்டு மூன்று முறை கூடச் சொல்லியிருக்கிறேன் இந்த மன்றத்தின் முன்னால். திட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. திட்டம் போடுவதையும் நாங்கள் எதிர்க்கவில்லை. ப்ளானை எதிர்க்கவில்லை. ப்ளானிங்கையும் எதிர்க்கவில்லை. ஆனால் இந்த "சோகால்டு ப்ளான்" ஒன்றைப் போட்டு அதை அணுகுகிற முறையை தேவை என்று மட்டும் ஒன்றைக் கருதித் திட்டம் போடும் முறையிருக்கிறதே அதைத்தான் நாங்கள் பலமாக இந்த நாட்டுப் பிரஜைகள் என்ற ரீதியில் இந்த நாட்டுச் சுகதுக்கங்களில் மற்றவர் எவரையும் விட எங்களின் அக்கறை அல்லது உரிமை குறைந்ததல்ல என்ற உணர்வில்தான் இதைப் பேசுகிறேன். சுருங்கச் சொன்னால் "எண்ணித் துணிக" என்கிறோம். துணிந்து விட்டோம், பின் எண்ணுகிறோம் என்று நினைக்கக் கூடாது, நடப்பது நடக்கட்டும். "ஆரம்பித்துவிட்டால் ஆனது ஆகட்டும்" என்று சொல்வது திட்டமல்ல. ப்ளான் போட்டாகிவிட்டது. இரண்டு ஆண்டுகள் நிறுத்துங்கள், நடந்த நிலையைக் காணுங்கள், பலாபலன்களை கூறிட்டு அளவிட்டுப் பாருங்கள் என்று சொல்கிறோம். நடந்திருக்கிற விரயங்கள், முறை கேடுகள், அளந்தறிய வேண்டும். பிழைகள், தவறுகள் எவ்வளவோ இருக்கலாம். ஊழல்கள் என்று மட்டும் சொல்லவில்லை. எந்தப் பெரிய திட்டத்திலும் விரயம் இருக்கலாம். அதற்காகத் திட்டத்தை மறுக்கவில்லை. அற்புதமான பணியில் கூட விரும்பாமலேயே, எதிர்பாராமலேயே நடைமுறையில் சில பிழைகள் குறைகள் ஏற்படக் கூடும். அதைப் பற்றியெல்லாம் நான் குறை கூறவில்லை. ஆயிரம் ரூபாய் செலவழிக்கும் போது 100 ரூபாய் விரயமானால் அதைக்கூடப் பொருட்படுத்தவில்லை. தவறு என்று கூறவில்லை. ஆனால் 1,000 ரூபாய் போட்டு 900 ரூபாய் போய்விட்டது என்றால் என்ன லாபம்? கடன் வாங்காமல் விட்டிருந்தால் உள்ளதாவது இருக்குமே. அன்று இச்சபையில் யாரோ சொன்னார்கள், "வட்டிக்குக் கடன் வாங்கி அட்டிகை வாங்கிவிட்டு, கடன்காரன் நெருக்குகையில் அட்டிகையை விற்று வந்த பணத்தைப் பார்த்தால் வட்டியைத்தான் கட்ட முடிந்தது. கடன் தீரவில்லை" என்று செய்வதைத் திறமையாகச் செய்யவேண்டும். முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முயலலாமா? சூரியனை மறைக்க சுளகைத் தேடலாமா என்று கேட்கிறேன். இவை நாட்டுப் பழமொழிகள் தாம். ஆகவே நாங்கள் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்ல வேண்டாம். அது இங்கு பணியாற்றுகிற சபையில் உள்ளவர்களின் உரிமைக்கு, பொறுப்பிற்கு அப்பாற்பட்டது என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். எல்லோருக்குமே, ஆளும் கட்சியினர் அல்லது எதிர்க்கட்சியினர் என்றில்லாது எல்லாக் கட்சியினருக்கும் இந்தத் திட்டப் பிரச்னை வந்தவுடனே எதிர்ப்புக்குரிய இலக்காக நாங்கள் இருக்கிறோம். அப்படிப் பார்க்கிறபோது எல்லோரும் ஒன்று, நாங்கள் மட்டும் தான் உண்மையான எதிர்க்கட்சி என்பது புலனாகிவிட்டதல்லவா? அதற்காக நான் மகிழ்ச்சியுறுகிறேன். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுமாதிரி, இல்லாததை, சொல்லாத ஒன்றைச் சொன்னதாகச் சொல்வது--அப்படியானால் அதை நிரூபிக்க வேண்டும் என்று விருது கூறிச் சவால் விடுகிறேன். அதுவும் இவ்வளவு பெரிய மகாசபையில் அப்படி ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்லி வருவது நியாயமும் அல்ல, தர்மமும் அல்ல, ஒழுங்குமல்ல என்று கண்டிப்பாகக் கூறி அதற்கு மேலே நான் போக விரும்பவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** முதல் அமைச்சர் அவர்கள் நாகரீகமாகச் சொல்லி என் கருத்தை ஈர்க்க முயலுகிறார்கள். இந்தத் திட்டத்தையும் எதிர்க்கவில்லை. இதை அமைப்பதற்கு அங்கீகரித்திருக்கிற முறையை, இதைச் செயல்படுத்துகிற முறையை, இதிலுள்ள வழுக்களை, குற்றங்களை, பிழைகளை இவற்றை மறுக்கிறோம். இத் திட்டம் என்றால் முதல் திட்டம், இரண்டாம் திட்டம், மூன்றுவது என்றில்லையா. திட்டத்தின் நல்லவை பல இருக்கின்றன. அவற்றை வேண்டாம் என்று கூற வில்லை. உதாரணமாக கதர் உற்பத்தி செய்வதை மறுக்கவில்லை. அது திட்டத்தில் வருகிறது. ஆனால் கதரில் மில் நூலை கலக்கக் கூடாது; அதை எதிர்க்கிறேன். விரயமாவதை எதிர்க்கிறேன். பிரசாரத்திற்காக லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுவதை எதிர்க்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** மில் நூல் கலக்கப்படாததை எதிர்க்கிறீர்களா?

**திரு. சா. கணேசன் :** அப்படி கலப்பதைத்தான் எதிர்க்கிறேன். ஒழுங்காக பேச விடமாட்டேன் என்று நீங்கள் குறுக்கிட்டு இடையூறு பண்ணும்போது ஏற்படுகிற தொல்லைப்பாடுதான் இது. இது பற்றிய விஷயங்கள் சுத்தமாக இருக்கவேண்டும் என்பதற்காக கஷ்டப்பட்டு குறிப்புகள் எடுத்து வந்திருக்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இன்ப விளைவுக்கான குறுக்கீடுதான்.

**திரு. சா. கணேசன் :** இப்படி குறுக்கிட்டு என் நோக்கத்தையும், கருத்தோட்டத்தையும் தடுக்கின்ற இதனால் பயன் விளையும் என்றால் அதை மறுக்கவில்லை. இதனால் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றால் அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். உலக வங்கிக் குழு இந்த தேசத்திற்கு வந்தது. அவர்கள் இந்திய நாட்டிற்கு வந்து நம் பொருளாதார ஈடுபாட்டையும், பொருளாதார வளத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் ஆய்ந்து ஆலோசனை செய்து அதுபற்றிய குறிப்புகளை சமர்ப்பித்துச் சென்றதை நாம்
1-00 p.m. எல்லோரும் அறிவோம். அதிலே முக்கியமாக மூன்று பகுதிகளைக் காண்போம். இதை சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். (1) மக்களின் ஆர்வத்தை அழித்து சோர்பேறியாக்குவதின்மூலம் சுயமுயற்சியற்றவர்களாக நாட்டு மக்களை ஆக்குகிறீர்கள். (2) தொட்டதை வளப்படுத்தாமல் தொகையை விரிவு படுத்துவதையே நெறியாக கொண்டிருக்கிறீர்கள்Expansion without concentration) அதை நமக்கெல்லாம் புரியக்கூடிய மரபுத்தொடரில் சரியாகச் சொன்னால், 'ஆழ உழாமல் அகலமாக உழுகிறார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். (3) இறக்குமதியைக் குறைக்கவேண்டும், வேளாண்மையில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இப்படி செய்தால் தான் நாடு வளம் பெற முடியும் என்று சொல்லியிருக்கின்ற அறிக்கையில், பொருத்தமான இடத்தை எடுத்து இப்போது சொல்கிறேன். ஆனால் மதிப்புக்குரிய, மத்திய சர்க்காரின் நிதி அமைச்சர் அவர்களோ 'நான் நிதி மந்திரியாக இருக்கும் வரையில் நாடு திவாலாக விட மாட்டேன்' என்று சொல்லியிருக்கிறார். நன்றி, இவர் என்ன சிரஞ்சீவியா ? நான் எந்த தனி மனிதரைப் பற்றியும் குறைவாகப் பேசவில்லை, ஒரு மனிதன் எத்தனை நாட்களுக்குத்தான் வாழ்ந்திருக்க முடியும், நான் இவரைப்பற்றி சொல்லவில்லை, அவர் 'சதாயுஷ்' வாழட்டும். அதாவது 120 வயது வரை வாழட்டும். ஆனால் காந்திஜி என்ன சொன்னார், 'உங்கட்குப் பின் யார்' என்று கேட்டபொழுது ? நாட்டினுடைய எதிர்காலத்தைப் பற்றி நாடு பார்த்துக்கொள்ளும் என்றார். காலஞ்சென்ற பண்டித நேரு அவர்களும் இப்படியேதான் சொன்னார். ஆனால் இவர் நான் இருக்கும் வரை திவாலாக விட மாட்டேன் என்று சொல்லுகிறார். இந்த மாதிரியான உணர்ச்சி வருவதினால் தான் இவ்விதம் எல்லாம் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை ஆளும் கனத்தார்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? அல்லது மறுக்கிறார்களா என்பதைப்பற்றி ஒரு செய்தியும் இல்லை என்பதை நான் சொல்ல வேண்டிய தேவையில்லை. மொத்தமாக எடுத்துக்கொண்டுப் பார்த்தால், கெவர்ன்மென்ட், அரசாங்கம் சர்க்கார் என்றெல்லாம்





நாம் சொல்லுகிறோம். இவ்விதம் சொல்வதின் பொருள் என்ன? அச்சொற்களின் பொருள் ஆட்சி புரிவது என்பது தான். நாம் இப்போது போய்க்கொண்டிருக்கின்ற நிலையைப் பார்த்தால், இன்னும் சில நாட்களில் ஆட்சி செய்கின்ற ஒரு முறையே தேவையில்லை என்ற நிலை வந்துவிடலாம். நாம் ஆள்வதற்கே வேலையில்லாத அளவுக்கு பல வழிகளில் இன்றையதினம் ஆட்சி திசைமாறிப் போய்க்கொண்டிருக்கிறது. வாணிகம் சர்க்கார் மயம்; வியாபாரம் சர்க்கார் மயம்; வேளாண்மையை எடுத்துக்கொண்டால் சர்க்கார் மயம்; தொழிற்துறையை எடுத்துக்கொண்டால் சர்க்கார் மயம். எல்லாத் துறைகளுமே சர்க்கார் மயமாகிக்கொண்டிருந்தால் இனி மேல் யார் யாரை ஆளுவது? சர்க்கார் என்ற ஒன்றிற்குத் தேவையே கிடையாதே. இந்த கொள்கையின் அடிப்படையில் தான் நாங்கள் எங்கள் கோட்பாடுகளை சொல்லிக் கொண்டு வருகிறோம், எழுதிக்கொண்டு வருகிறோம். பெருந்தொழில்களை சர்க்கார் நடத்தட்டும், சர்க்காரால் தான் செய்ய முடியும். பெருமளவில் முதல் போட வேண்டும். பிறர் தலையிட அஞ்சக்கூடிய நிலை இருக்கும். அவ்விதம் இருக்கின்ற பெருந்தொழில்களை சர்க்கார் நடத்தலாம். அது அல்லாமல் பெரிய இலாக்காக்கள், தபால் தந்தி போன்ற இலாகாக்கள், ரயில் போன்ற போக்குவரத்து இலாகாக்கள்,—வெள்ளைக்காரன் காலத்தில் தனியாக நடத்துவது சாத்தியமாய் இருந்திருக்கலாம்—இப்பேர்ப்பட்ட இலாகாக்களை எல்லாம் சர்க்கார் நடத்த வேண்டும். அதே போன்று பெருந்தொழில்களுக்கு ஆக்கம் தரக்கூடிய முறையில் பல்வகை இயந்திர சாதனங்களைச் செய்யக் கூடிய மூல இயந்திரங்களை தயார் செய்யக் கூடிய தொழில்களையும் சர்க்கார் நடத்தலாம், அதையும் யாரும் ஆட்சேபிக்கவில்லை, ஆட்சேபிக்கவும் மாட்டார்கள், ஆனால் சர்க்கார் ஈடுபடுகின்ற தொழிலைப்பார்த்தால்—நான் இதைச் சொல்லுகிறேன் என்று யாரும் வருத்தம் கொள்ளக்கூடாது—அப்பளம் போடுகின்ற தொழிலில் சர்க்கார் ஏன் ஈடுபட வேண்டும்? பாதரட்சை செய்கின்ற தொழிலில் சர்க்கார் ஏன் ஈடுபட வேண்டும்? மற்றவர்கள் ஈடுபட முடியாது என்ற காரணத்தோடு சொல்லுகின்ற தொழிலில் சர்க்கார் தலையிடுவது பயன்தரத்தக்கதாக அமையும். ஆனால் சாதாரண அப்பளம் போட்டுவிற்கும் தொழிலில் சர்க்கார் ஈடுபட என்ன அவசிய நிலை வந்துவிட்டது? இவ்விதம் தேவையில்லாத பல தொழில்களில் சர்க்கார் தலையிடுவதின் காரணமாகத்தான் பற்றாக்குறை ஏற்படுகிறது, பற்றாக்குறை என்று வந்தவுடன் கண்ட்ரோல் இவையெல்லாம் வந்துவிடுகிறது—அரசாங்கத்தின் அதிகாரம் எந்த அளவுக்கு இருக்கவேண்டும் என்பதைப்பற்றி காந்திஜி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் "காந்தி வழி"யிலிருந்து படிக்கிறேன்; "அரசாங்கத்தின் அதிகாரம் விரிவடைந்து கொண்டே போவது எனக்கு பெருந்திகிலாக இருக்கும். அதனால் சுரண்டல் குறைந்து நன்மை ஏற்படுவதுபோல்த் தோன்றினாலும் அது மிகப் பெருந் தீங்கையே இழைத்துவிடுகிறது. ஏனெனில் எந்த முன்னேற்றத்திற்குமே ஆணிவேர் போன்ற மனிதனுடைய தனித்தன்மையை அது அழித்துவிடுகிறது . . " என்று காந்தியடிகள் சொல்லியிருக்கிறார்கள். இதை மனத்தில் கொண்டு தான் சிலவற்றையன்றி அனைத்தையும் சர்க்கார் எடுக்கவேண்டாம் என்று விண்ணப்பித்துக் கொண்டு வருகிறோம். இவ்விதம்

[திரு. சா. கணேசன்] [9th August 1965

சொல்லப்படுவதற்கு செவி சாய்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அதற்கு மறுப்பதோடு, இவர்கள் தேச விரோதிகள், திட்டத்தை மறுப்பவர்கள், திட்டம் வேண்டாம் என்று சொல்கிறவர்கள் என்று தவறுதலாக விமர்சனம் செய்து பேசிவருகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் அஞ்சவில்லை. சுயநலம் கருதி எவரிடமிருந்தும் ஏதாவது பலனை எதிர்பார்த்தால் அல்லவா நாம் இதற்கு அஞ்சவேண்டும்? நாம் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்பதை உலகம் அறியும். இப்போது இருக்கின்ற ஆட்சி முறையைப் பார்த்தால் சதுர் வேதங்கள் என்று சொல்வார்களே அந்த நான்மறை வேதங்களைப்போல ஆளும் கணத்தார்க்கு 'கண்ட்ரோல், லைசன்ஸ், பெர்மிட், கோட்டா ஆகியவை இருந்து வருகின்றன. இதனால் பல்வகை பல்துறை உத்தியோகப் பட்டாளம் தான் பெருகிக்கொண்டு வருகிறது. இதன் மூலமாக உண்மையான, நேர்மையான, நெறியான, செம்மையான நிர்வாகங்கள் நடக்கின்றனவா என்பதை நாம் பார்க்க வேண்டும். இம்முறையால் இந்தியாவில் இன்றைய தினம் சுமார் 80 லட்சம் சர்க்கார் சிப்பந்திகள் இருக்கிறார்கள். பயங்கரமாக இந்த எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. இதன் காரணமாக எற்படுகின்ற பயன் என்ன? பொய், மோசடி, ஏமாற்றுதல், பதுக்கல், கருஞ்சந்தை, விலையேற்றம், தன்னம்பிக்கையறுதல் முதலிய ஒழுங்கீனங்கள் இவைகள் எல்லாம் தோன்றி வளர்ந்து வருகின்றன. இது சுதந்திரக் கட்சியின் கருத்து மட்டும் அல்ல. 1947-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் தேதியுள்ள 'அரிஜன்' பத்திரிகையில் காந்தியடிகள் 'கண்ட்ரோல் ப்ரீட்ஸ் ஈவில்' (Control Breeds Evil) என்ற தலைப்பில் எழுதியிருப்பதை அப்படியே வாசித்துக் காட்டுகிறேன்.

"Control gives rise to fraud, suppression of truth, intensification of the black market and to artificial scarcity. Above all it unmans the people and deprives them of initiative, it undoes the reaching of self-help they have been learning for a generation"

இதையே நாங்கள் சொன்னால் நாங்கள் நாட்டுத் துரோகிகள் என்று அழைக்கப்படுகிறோம். காந்திஜியோடு சேர்ந்து நாங்களும் நாட்டுத்துரோகிகளாக இருப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்; மகிழ்ச்சியும் உள்ள நிறைவும் கொள்கிறோம். ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதில் நமக்கு லாப நஷ்டம் என்ன என்பதையோ, சாதகபாதகம் என்ன என்பதையோ, நன்மை தீமை என்ன என்பதையோ ஆராய்ந்தோமா? இவற்றைப்பற்றி ஆராய்ந்து ஏதாவது விவர-விளக்க அறிக்கை தந்திருக்கிறோமா? அதனால் மக்கள் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களை கணித்தோமா? செலவு செய்ததில் ஏற்பட்ட, நியாய அநியாயங்களை, ஒழுங்கீனங்களை, அளவிட்டோமா? இவற்றால் நம் நாட்டில் ஒழுக்கம் வளர்ந்திருக்கிறதா என்பதை தெரிந்து தெளிந்து கண்டிருக்கிறோமா? இந்த மூன்று திட்ட காலங்களிலும் உணவு உற்பத்தி உண்மையாகவே பெருகிற்று அல்லவா? இவற்றை எல்லாம் கணித்தோமா? நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோமா? இவற்றில் நாம் எந்த கணக்கையும் போட



9th August 1965] [திரு. சா. கணேசன்]

வில்லை என்பது மட்டுமல்ல, நம் குறை; உள்ள வளமும் குன்றச் செய்திருக்கிறோம். உணவுத்துறையில் மாறான நிலை ஏற்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி தன்னிறைவுடைமை மட்டுமில்லாமல், பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நம் நாடு வாய்ப்பும் வளமும் பொருந்தியது. இதை நாம் சரியான முறையில் செயல்படுத்தாமல் இருந்ததின் காரணமாகத்தான் இன்றையதினம் உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவு மட்டுமின்றி, ஏராளமாக உபரி நிலையில் நாம் வளமாக விளங்க முடியும். அப்படி ஏற்படாமல் போனதற்கு காரணம் அரசாங்கமும் அவர்களின் கட்சிக் கொள்கையுமே என்பதை நான் வருத்தத்துடன் கூறிக் குற்றஞ்சாட்டுகிறேன். இதற்குக் காரணம் என்ன? நெல் விளையும் நிலங்களில் பணப்பயிர் விளைவிக்கக் கூடாது என்று ஏதாவது நாம் சட்டம் கொண்டு வந்திருக்கிறோமா? நெல் விளையும் நிலங்களில் பணப்பயிர் செய்ய அனுமதித்திருப்பது பெருந்தவறு கரும்பு பருத்தி, மஞ்சள் போன்ற பணப் பயிர்களுக்கு நாம் ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். உணவுப் பொருட்களில் முக்கியமாக இருக்கின்ற நெல் பயிர் செய்யும் குறிப்பிட்ட இடத்தில் பணப் பயிர்தான் விளைக்கவேண்டும்; இல்லாவிட்டால் தண்டத்தீர்வை விதிப்போம் என்றெல்லாம் விதி செய்திருக்கிறோம். இதன் காரணமாக எத்தனை ஆயிரம் ஏக்கர் நெல் விளையும் நிலங்கள் கரும்புக்கு மாற்றப்பட்டன, எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பருத்திக்கு மாற்றப்பட்டன, எத்தனை ஆயிரம் நிலங்கள் புகையிலைக்கு மாற்றப்பட்டன, மஞ்சளுக்கு மாற்றப்பட்டன என்பனவற்றை கணக்கிட்டால் நான் சொல்வதிலுள்ள உண்மையும் அல்லது இன்மையும் நன்றாகப் புலப்படும். இன்னும் சொல்லுகிறேன்; இனியாவது—இப்போது பேசுகிறபோதுகூட கனம் உறுப்பினர் நடராஜன் அவர்கள் சொன்னார்கள்—பெரும் தொழில்களை அரசாங்கம் நடத்துவதற்கு எடுத்துக்கொள்ளலாம், நூல் ஆலை போன்றவைகளை வருகிறவர்களுக்கு விட்டுவிடவேண்டும், அல்லது கோவாப்பரேட்டிவ் செக்டார் என்று சொல்லுகிறோமே அந்தத் துறைக்கு விட்டுவிட வேண்டும் என்று—நான் சொல்லுகிறேன், உணவுப் பிரச்னையானது உண்மையாக, செம்மையாக, தீர்க்கப்படவேண்டுமானால் கண்டிப்பாக இந்த தேசத்தில் இனி கரும்பு ஆலைகள் ஏற்படுவதைத் தடை செய்ய வேண்டும். சர்க்கரைக்கு உண்மையிலேயே எங்கே பஞ்சம் இருக்கிறது? சர்க்கரை இருந்தால்தான் ஃபாரின் கரன்ஸி வருகிறது என்று சொல்லலாம். ஃபாரின் கரன்ஸி இருந்தால் தான் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யலாம் என்று சொல்லலாம். சர்க்கரையை ஏற்றுமதி செய்வதற்கு நாம் எவ்வளவு செலவு செய்கிறோம்? சர்க்கரை இங்கே என்ன விலைக்கு விற்கிறது? அமெரிக்காவில் நம் செலவில் கொண்டுபோய் என்ன விலைக்குக் கொடுக்கிறோம்? ஏற்றுமதி, இறக்குமதி சிப்பந்திகள் சம்பளத்தையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் நமக்கு மிஞ்சுவது சைஃபர் தான். சர்க்கரையை ஏற்றுமதி செய்வதில் 60 காசு, 40 காசு டாலர் கரன்ஸி கிடைக்கிறது. அதற்காக எவ்வளவு செலவிடுகிறோம்? இந்த நிலையில் பிரச்னையை அணுகிப் பார்த்தால், உணவுப் பிரச்னையைத் தீர்க்க உரிய, சீரிய, நேரிய முறையை கொள்ளவில்லை

என்று நன்றாக உணர முடியும். விவசாயத் துறையில் வேண்டாத கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்து, விவசாயிகளை நெஞ்சு ஓடியும்படி செய்து தட்டுக்கெட வைக்கும் முறையில் சட்டங்கள் செய்திருக்கிறோம். இதனால், எதிர்பார்த்தபடி பிரமாதமாக உணவுப் பொருள்கள் உற்பத்தியாகாமல் உணவுத் தட்டுப்பாடுதான் வந்து, ஃபேமிலி கார்டு வந்தாயிற்று, ரேஷன் கார்டு வரப்போகிறது, அப்புறம் பஞ்சம் வந்து, வற்கடம் வரவேண்டியது தான் பாக்கி. பஞ்சம் என்பதற்கும் வற்கடம் என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. பஞ்சம் இருந்தால் கஷ்டப்பட்டு வயிற்றுக்கு வேண்டியதைத் தேடிக்கொண்டு விடலாம். வற்கடம் வந்தால் கஷ்டப்பட்டாலும் தேடிக்கொண்டுவிட முடியாது. வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அந்த மாதிரி வந்து விடுமோ என்றுதான் அச்சப்படுகிறேன்.

திட்டமிடுவது எதற்காக? நாடு வளம் பெற, மக்களின் நலன் பெருகுவதற்காக. அதற்காக ஒரு சில காலத்திற்குக் கொஞ்சம் கஷ்டப்படவேண்டும் என்றால் கஷ்டப்படலாம். சாகிற வரையில்—கிட்டத்தட்ட ஒரு தலைமுறை ஆகப் போகிறது, 20 ஆண்டுகளுக்குக் கொண்டு வந்து விட்டோம், "பின்னால் வரப் போகிறது, பின்னால் வரப் போகிறது" என்று முழுக்க முழுக்க கஷ்டப்பட்டுக்கொண்டே தான் இருக்க வேண்டுமா? 'இன்றைக்கு கையில் இருக்கிற களாக்காய் நாளை வரும் பலாக்காயை விடப் பெரிது' என்பது பழமொழி. 'இன்று இருக்கிற பலாக்காயை விட்டெறிந்து விட்டு நாளை வரப் போகிற டலாக்காயை பார்' என்பது புது மொழியாக, திட்ட மொழியாக வந்து விடுமோ என்று நான் எண்ணுகிறேன். இதையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். விருப்பு-வெறுப்பில் பேசவில்லை, கட்சிக் கோட்பாட்டில் பேசவில்லை, இருதயபூர்வமாக எது சரி என்று தோன்றுகிறதோ அதைத் தான் சொல்லுகிறேன். முடிந்த வரையில் நாம் வரி போட்டு விட்டோம். இனி போடுவதற்கு வழி இல்லை என்றுதான் மறைமுக வரிகளைப் போடுகிறோம். இப்படி மறைமுக வரிகளைப் போடுவதால் 1½ சல்லி நெருப்புப் பெட்டி 7 சல்லிக்கு விற்கிறது. காரணம் என்ன? வரி. இதே போலத் தான் ஒவ்வொன்றும். அதற்கு மேல் திட்டம் இல்லாமல் கடன் வாங்க ஆரம்பித்து விட்டோம். எந்தத் துறையிலும், எந்த மனிதனும் கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் வரும். கடன் வாங்க வேண்டிய நிர்ப்பந்தமே வராது என்று சொல்ல மாட்டேன். நிர்ப்பந்தம் வரக்கூடிய நிலையில் கடன் வாங்கத் தான் வேண்டும். ஒரு அபாயம், ஒரு அமயம் சமயம் இருந்தால் வாங்கலாம். திடீரென்று ஒரு தீமை வந்து விட்டது, அல்லது ஒரு பிரசவம், அல்லது ஒரு கலியாணம் வந்து விட்டது, அதைச் சமாளிப்பதில் பற்றாக்குறை என்றால் அதற்காகக் கடன் வாங்கலாம். ஆனால், பிறந்தது முதல் சாகும் வரையில் கடன் வாங்குவதே தொழில் என்று வைத்துக் கொள்வது முறையா? இன்று இருக்கிற நிலையில், போய்க்கொண்டிருப்பதைப் பார்த்தால் வள்ளுவன் கூறியிருக்கிறானே, 'நாடென்ப நாடா வளத்தன' என்று, அதற்கு எதிரிடையாகவே நாம் நாட்டை ஆக்கிக்கொண்டிருக்கிறோம் என்றுதான்





கூறத்தோன்றுகிறது. நம் நாடு சிறந்த நாடு, பண்பட்ட நாடு, நாகரிகம் மிகுந்த நாடு, மற்ற பல நாடுகளில் மக்கள் வேட்டி கட்டத் தெரியாது இருந்த காலத்திலேயே வேதம் ஓதிய நாடு என்றெல்லாம் பேசுகிறோம். ஆனால் இன்றைக்கு ஒரு நாடு பாக்கி இல்லாமல், "தருவாயா, தருவாயா" என்று நாடுகிற நாடாகத் தான் இருக்கிறது. இதைக் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். பெருமை, சிறுமை பற்றிக் கூட அல்ல, அனுகூலத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். கைப்பொருளை வைத்துச் செய்திருந்தால் இவ்வளவு ஆகியிருக்காது. எவ்வளவு பெரியவர்களானாலும், எவ்வளவு மேதையாக இருந்தாலும், அனைத்தையும் கண்காணித்துச் செவ்விய முறையில் செயல்படுத்துவது என்பது சாத்தியம் இல்லாத ஒன்று. ஆகவே, இதை உணர்ந்த வள்ளுவன்,

> 'குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
> றுண்டாகச் செய்வான் வினை'

என்று பேசினான். இப்போது நிலைமை என்ன? நிறைய வாங்கி முடிந்து ஆகி விட்டது. இனி வாங்க முடியுமா என்ற நிலைக்கு வந்திருக்கிறோம். இதை நாம் மறந்து விடப்படாது. ரஷ்யா பெரிய நாடு; அவர்களுடைய கொள்கைக்குள் போக நான் விரும்பவில்லை—அந்தக் கொள்கை அவர்களுக்கு இஷ்டம். அவர்கள் பெரிய திட்டங்களைப் போட்டார்கள். அமெரிக்கா பெரிய திட்டங்களைப் போடுகிறது. அமெரிக்காவிலே சர்க்கார் போடுகிற திட்டத்தைவிட தனியார் போடுகிற திட்டங்கள் பெரியனவாகவும் இருக்கின்றன. டென்னெசிவாலி திட்டத்தைப் பார்த்தால் தனியார் திட்டமே சர்க்கார் திட்டத்தின் அளவுக்குப் போனதைக் கண்டு உலகமே பிரமித்துப் போயிற்று. அவ்வளவு பிரமாண்டமாகப் போடுகிறார்கள். நாம் திட்டம் போடும்போது அந்த மாதிரி போட வேண்டுமென்று எண்ணுகிறோம். டென்னெஸி வாலி ஸ்கீமை நினைத்துப் பார்க்கிறோம். அவ்வளவு வளர வேண்டும் என்று எண்ணுகிற உணர்ச்சியைப் பாராட்டுகிறேன் வரவேற்கிறேன், வணக்கமும் புரிகிறேன். ஆனால், ஆனை லத்தி போடுகிறதே என்று ஆடு நினைத்தால் என்ன ஆகும்? யோசித்துப் பார்க்க வேண்டும். ஆனை போடலாம் அது அவ்வளவு பெரிசு; ஆடு போட முடியுமா? ஆனையைவிட ஆடு ஒன்றும் பிறப்பில் குறைந்ததல்ல. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று பேசும் வள்ளுவனே "சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்றும் பேசுகிறான். இதை எல்லாம் நாம் மனத்தில் கொள்ள வேண்டாமா? நம் தேவைக்குத் தகுந்தபடி, நம் சக்திக்குத் தகுந்தபடி, நம் அமைப்புக்குத் தகுந்தபடி அல்லவா நாம் திட்டம் போட வேண்டும்? அதை விட்டு, ரஷ்யா போடுகிறது, அமெரிக்கா போடுகிறது என்று ஆர்ப்பாட்டங்கள், விளம்பரங்கள் —அவர்கள் செய்யலாம்—நாம் செய்யலாமா? இதைச் சிந்திக்க வேண்டும். சொன்னார்கள் சில பேர்கள் 'ப்ளான் ஆர் பெரிஷ்' என்று. 'திட்டமிடு அல்லது கெட்டழி' என்று சொல்லுகிறார்கள். ஆனால் 'ப்ளான் ஆர் பெரிஷ்' என்று சொல்லுகிறார்களா அல்லது 'ப்ளான் அன்ட் பெரிஷ்' 'திட்டமிட்டே கெட்டழி' என்று சொல்லுகிறார்களா என்று கேட்க வேண்டியிருக்கிறது. 'திட்டம் போடா

விட்டால் அழிந்து விடுவான்' என்றால் செம்மையாகத் திட்டமிடா விட்டால் செத்தே போய்விடுவான். செம்மையாகத் திட்டமிட்டால் தான் திட்டம் வாழ வைக்கும். செம்மையாகப் போடாவிட்டால் திட்டமே அழிக்கும். இதை மனத்திலே கொள்ளவேண்டும் என்று நான் விண்ணப்பித்துக்கொள்கிறேன். வள்ளுவன்—

'ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை' —என்றும்,

'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்'

என்றெல்லாம் அந்தக் காலத்திற்காக மட்டும் சொல்லி வைக்க வில்லை. எந்தக் காலத்துக்கும், எந்த நாட்டுக்கும், எந்த மக்களுக்கும் ஏற்ப மலர்ந்ததே பொய்யாமொழி— வள்ளுவன் குறள் என்று சொல்லுவதற்கில்லை—பொய்யாமொழி. இதை விண்ணப்பித்துக் கொள்ளுவதை விட எதிர்க்கட்சியில் இருக்கிற எனக்கு வேறு என்ன செய்ய முடியும்? செயல்முறையில் கொண்டுவர முடியும்?

இனி, குடும்பத் திட்டம். இந்த தேச நாகரிகத்திற்கு, இந்த நாட்டு பண்புக்கு, மனித ஒழுக்கத்திற்கு, இது வரையில் இருந்து வருகிற நெறிமுறைக்கு இது செவ்வியதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். உணவு பற்றவில்லை, ஆகவே மக்கள் தொகையைக் குறைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். உணவுப் பற்றாக் குறையை ஏற்படுத்திவிட்டு மக்களைத் தோன்றாமல் செய்வது என்று சொன்னால், இந்த மாதிரி தேசத்திலே ஏராளமான மக்கள் தேவைப்படும். ஆட்டம் பாமில் காரியத்தைச் சாதித்துக் கொள்ளக் கூடிய நாட்டில் வேண்டுமானால் கஷ்டம் இல்லாமல் இருக்கலாம். பெரும் போர் போன்றவை ஏற்படுமானால், அப்போது ஏராளமான ஜனங்கள் வேண்டியிருக்கும். அறுவை, மருந்து, கருவி என்று இவைகளுக்கு எத்தனை லட்சம் ரூபாய் செலவு? இது நெறியானதா? வரி, வரி என்று வரியை வாங்கி அந்த வரியைக் கொடுக்கும் மக்களை வளராமல் தடுப்பதற்கு பதில் இதற்குச் சுலபமான வழி இருக்கிறதே. சுகாதார இலாகாவையும், மருத்துவ இலாகாவையும் இரண்டு வருஷம் மூடி விட்டால் ஜனத்தொகை தானாகக் குறைந்து விடுமே. பல கோடி ரூபாய் அதனால் மிச்சம்கூட ஏற்படும். எதற்காக அறுவை சிகிச்சை செய்துகொண்டிருக்க வேண்டும்; அது போய் செத்துப் போகாமல் இருக்க வேண்டும் என்று எதற்காக மருந்துகொடுத்தும் இன்ஜெக்ஷன் செய்தும் கொண்டிருக்கவேண்டும்? ஒன்றுக்கொன்று நிச்சயமாக முரணாகப் போகிறது. தெய்வ நம்பிக்கை இருப்பதால் சொல்லுகிறேன்— தெய்வ நம்பிக்கை இல்லாதவர்கள் தயவுசெய்து கோபித்துக் கொள்ளவேண்டாம்—இது மனித எல்லைக்கு அப்பாற்பட்டது. இதில் தலையிடுவது, நாத்திக மனோபாவத்தை வளர்க்கிறோம் மனத்திலே உள்ள நம்பிக்கையால் சொல்லிக் கொள்கிறேன். இல்லாதவர்கள் தான், ஒழுக்கத்தைப் போற்றுகிறவர்கள்தான் இதில் அக்கறை காட்டவேண்டும். யார் மீதும் நான் குறை சொல்லவில்லை, பழி சொல்லவில்லை. அப்படி நான்





மனத்திலே உள்ள நம்பிக்கையால் சொல்லிக் கொள்கிறேன். இந்த முறையினால் சமுதாயத்தில் எவ்வளவு ஒழுக்கக்கேடுகள் ஏற்படும், ஏற்பட்டுவிட்டது என்பதை கணித்திருக்கிறீர்களா? கவனித்திருக்கிறீர்களா? என்று புண்பட்ட மனத்தோடு நான் கேட்க விரும்புகிறேன். இந்த உலகம்தான் தாங்குகின்ற மக்களை போஷிக்க முடியாமல் தாங்கிக்கொண்டிருக்க இல்லை. அவர்கள் வாழ்வதற்காக, வளத்தைச் சுரப்பதற்கு என்றுமே அது தயங்கியது இல்லை. முதல் ஜீவன் தோன்றிய அநாதி காலத்திலிருந்து இப்பொழுது 200 கோடி, 300 கோடி ஜனங்களாக வளர்ந்துபோய் விட்டார்கள். நிலத் தாய் தன் உடலிலிருந்து அமுதத்தைச் சுரக்க மறந்ததோ அன்றி மறுத்ததோ இல்லை. மறுத்ததை கண்டிருக்கிறோமோ? இல்லை. இதைப்பற்றி காந்தியடிகள் எத்தகைய மனப் பண்பாட்டோடு எழுதுகிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"This little globe of ours is not a toy of yesterday. It has not suffered from the weight of over-population, through its age of countless millions. How can it be that the truth has suddenly dawned upon some people that it is in danger of perishing of shortage of food unless the birth-rate is checked through the use of contraceptives".

என்று 1965-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 14-ம் தேதி ஹரிஜனில் அவர்கள் எழுதியுள்ளார்கள். அடுத்தது "ஸ்டெரிலைஸேஷனைப் பற்றியது.

"I consider it inhuman to impose sterilization law on the people. But in cases of individuals with chronic diseases, it is desirable to have them sterilized if they are agreeable to it. Sterilization is a sort of contraceptive and though I am against the use of contraceptives in case of women, I do not mind voluntary sterilization in case of man since he is the aggressor".

இதையெல்லாம்கூட மனத்திலே கொள்ளவேண்டாமா? அதுவும் காந்தியடிகள் கனவு கண்ட ராம ராஜ்யத்தை நிலை நாட்டுவதற்காகவே தாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடிய கண்ணியம் மிக்க ஆளும் கட்சியினர்கள் இதை மனத்திலே கொண்டு செயல்பட வேண்டாமா என்பதை சிந்திக்கவேண்டும் நன்றாக. இப்படித்தான் எத்தனை எத்தனையோ விஷயங்கள்.

இனி சர்க்கார் துறைக்கு வருகிறேன். எனக்குத் தந்த ஒரு மணி நேரப் பேச்சில் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்வதற்கு நேரம் இல்லை. எனவே சில விஷயங்களை மட்டும் சுட்டிக் காட்டிச் செல்கிறேன். சர்க்கார் தொழில் துறையில் ஏற்பட்ட, ஏற்படுகிற, ஏற்படக்கூடிய, நன்மை தீமைகளை நாம் சிறிது பார்ப்போம். சர்க்கார் தொழில் துறையில் ஏற்பட்ட நன்மையோ பெரிதில்லை; லாபமுமில்லை. நன்மையே ஏற்பட இல்லை என்று சொல்ல இல்லை. ஓரளவுக்கு நன்மையும் ஏற்பட்டிருக்கிறது. எதிர்பார்த்த அளவுக்கு இல்லை அல்லது வேண்டத்தக்க அளவுக்கு ஏற்பட

[திரு. சா. கணேசன்] [9th August 1965

இல்லை, லாபம் கிடைத்ததா, இல்லை. ஏதோ ஒன்று, இரண்டு துறைகளைத் தவிர. நான் அகில இந்தியாவையும் சேர்த்துப் பேசுகிறேன். ஒன்று, இரண்டு துறைகளைத் தவிர லாபம் கிடையாது என்பதற்கு நூற்றுக்கணக்கான தொழில் துறைகளை எடுத்துக் கொண்டு, அவைகளின் 'பாலன்ஸ் ஷீட்டுகளைக்' காட்டி நிரூபிக்க முடியும். நேரம் இன்மையாலே ஒன்று இரண்டை மட்டும் இப்பொழுது இந்தச் சபையில் சமர்ப்பிப்பதற்கு விரும்புகிறேன்.

வெளி ஊருக்குப் போவதற்கு முன்பு இங்கே நடப்பதைப் பார்ப்போம். மாதவரத்தில் என்ன திட்டம் போட்டோம்? எவ்வளவு செலவழித்தோம்? எந்த முறையில் அதை செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, உணர்ச்சியோடு அதிலே ஈடுபட்டோம்? 1962-ல் நிகர லாபம் என்ன? ரூபாய் 14.16 லட்சம் நட்டம். திட்டத்தாலே வளர்ச்சி என்று சொல்லுகிறார்கள். அதை நான் இந்த விஷயத்தில் மறுக்க இல்லை. வளர்ச்சியை இப்பொழுது பார்க்கலாம். 1961-62-ல் ரூபாய் 14.16 லட்சம் நட்டமாக இருந்தது, 1962-63-ல் ரூபாய் 24.10 லட்சம் நட்டம். 1963-64-ல் ரூபாய் 40.06 லட்சம் நட்டம். புள்ளி பேசுகிறது. வளர்ச்சி எதிலே? நட்டத்திலே வளர்ச்சி. இதைவிட வேடிக்கை, பாலில் சேதாரம், அதாவது கெட்டுப் போனது, சிந்தியது எவ்வளவு? எவ்வளவு அதில் குறையலாம்? ரூபாய் 7½ லட்சம் பெறுமான பால் சிந்திப் போயிற்று அல்லது கெட்டுப்போய்விட்டது. இதை நம்மாலே புரிந்து கொள்ள முடியவில்லை. என்னுடைய மூளை சின்ன மூளை. உலக விவரம் தெரியாதவனாக இருக்கலாம், என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்கு நான் குற்றவாளி அல்ல. இவ்வளவு அற்புதம். ஏன் இவ்வளவு ஊழல்? நெறிமுறைத் தவறுகள்? அங்கே நடக்கின்றன. மூன்றாவது ஆண்டு அங்கே சென்றபொழுது இதையெல்லாம் கண்டு குறிப்பிட்டு எஸ்டிமேட் கமிட்டி எழுதியிருந்ததே? அதன்மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன? எடுத்துக்கொள்ளமாட்டோம். எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. அந்தத் துறையைப் பற்றி நான் அறிவேன். நான் அறிந்த சில விஷயங்களைச் சொல்கிறேன். இவ்வளவு நட்டம் வருவது கூடப் பெரிது அல்ல. இதையெல்லாம்விட நமக்குக் கருவி சாதனங்களை வழங்கிய பிறநாட்டினர் நம்மைப் பார்த்து என்ன நினைப்பர் மானம் கப்பல் ஏறிப்போகிறது என்று சொல்வார்கள் இதையெல்லாம் பார்த்தால் மானம் கப்பல் ஏறி டென்மார்க் போகிறது என்ற நிலை ஏற்படாதா? இதைப் பார்த்தவர்கள் எவ்வளவு கேவலமாக நம்மை எண்ணுவார்கள். இதிலே மற்றொரு வேடிக்கை, ரங்கபாஷ்யம் என்ற ஒருவர் இந்தத் துறையிலே இருந்தார், இந்தத் துறையிலே இவர் நிபுணத்துவம் பெறும் நிமித்தம் டென்மார்க் முதலான தேசங்களுக்கு இவரை அரசாங்கம் அனுப்பி வைத்தது பெரிய அளவில் பணம் செலவிட்டு. இந்தத் துறையிலே அவர் தேர்ச்சி, அனுபவம் பெற்று இங்கே வந்தார். வந்தவுடனேயே நெய்வேலிக்கு உத்தியோக மாற்றம் செய்து அனுப்பி வைக்கப்பட்டார். பால் பண்ணைத் துறையிலே நிபுணத்துவம் பெறுவதற்காக அனுப்பப்பட்டுத் தேர்ச்சி வந்த அந்த ஸ்ரீ ரங்கபாஷ்யம் என்பவர் நெய்வேலிக்குச் சென்று பழுப்பு நிலக்கரியிலிருந்து பால் கரக்கப்



9th August 1965] [திரு. சா. கணேசன்]

போகிறாரோ என்னவோ தெரியவில்லை. அங்கே உத்தியோகம் ஆயிற்று அவருக்கு. இது என்ன நியாயம்? என்ன தேவை? விரும்பத்தக்கதா? பலன் உள்ளதா? (கனம் கக்கன்: அக்கிரமம் செய்தாலும் மாற்றப்படக்கூடாது என்கிறீர்களா?) அக்கிரமம் பண்ணினால், என்ன என்று சொல்லுங்கள். அவர் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு தண்டியுங்கள். ஏன் அப்படிச் செய்யவில்லை? அப்படி வரும்பொழுது இருக்கிற விஷயங்கள் தெரிகின்றன. காரியங்களைச் சொல்லுங்கள், ஒத்துக் கொள்கிறேன். அக்கிரமம் பண்ணினார் என்று நிரூபியுங்கள் தகுதி, பயிற்சி, அனுபவத்திற்கு எவ்வளவு வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம். இவ்வளவு செலவழித்து தகுதி, பயிற்சி, அனுபவம் பெற்றவரை ஏன் மாற்ற வேண்டும்? அக்கிரமம் செய்தார் என்று நிரூபிக்கப்பட்டு விட்டால் அவர்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது. அங்கே என்ன என்ன அக்கிரமம் நடக்கின்றன என்று நான் இப்பொழுது சொல்கிறேன். நான் பட்டியல் கொடுக்கிறேன்.

பண்ணையுடைய சக்தி ஒரு நாளுக்கு 75,000 லிட்டர் தயாரிக்கக் கூடியது. 1963-64-ல் 24,000 லிட்டர்தான் தயாரிக்கப்பட்டது. இந்த ஆண்டிலே நான் அனுமானிக்கிறேன் 15,000 அல்லது 18,000 லிட்டருக்குள்ளே அங்கு தயாரிப்பு நடக்கிறது. 75,000 லிட்டர் ஆற்றல் இருக்கிறது. உதாரணமாக 75,000 மூட்டைகள் போடுவதற்கு கோடவுன் கட்டப்பட்டிருக்கிறது. இப்பொழுது கோடவுனில் இருப்பது மாக்ஸிமம் 18,000 மூட்டைகள். இது பற்றாது என்று சொல்லி, இன்னொரு கோடவுன் கட்டப்போகிறது என்று சொல்லுவது எவ்வளவு நியாயம்? அப்படித்தான் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது மாதவரத்திலே 75,000 லிட்டர் தயாரிக்க இடம் இருக்கிறது. எதற்காக அதை விஸ்தரிப்பது ரூபாய் 40 லட்சம் செலவிலே? இதைத்தான் நான் கேட்கிறேன். 75,000 தரக்கூடிய ஒன்று 18,000 தான் தருகிறது. இன்னும் 57,000 கொள்ள முடியும். அப்படி இருக்கிறபொழுது, அதை மேற்கொண்டு ரூபாய் 40 லட்சம் செலவில் விஸ்தரிக்கப்போகிறோம் என்று சொல்லப்படுகிறது. உள்ள அளவுக்கே வேலை இல்லாதபோது விஸ்தரிப்பு ஏன்? நாங்கள் போய் பார்த்தோம் அங்கே. நிலைமை என்ன? நாங்கள் நினைத்தோம், மாதவரத்தில் இருப்பது மாட்டுப் பண்ணை அல்ல, உத்தியோகஸ்தர் பண்ணையே என்று. மாடுகளைவிட எண்ணிக்கையில் அங்கு உத்தியோகஸ்தர்கள்தாம் அதிகம்.

ஆடிட் ரிபோர்ட் சுமார் 200 பக்கங்களில் குறைபாடுகள், தவறுகள், பிழைகள், முறைகேடுகள் இவற்றையெல்லாம் குறித்துக் கொண்டு போய் கொடுத்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற கமிஷனர் அதை அகவுண்ட்ஸ் ஆபீஸரிடம் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டார். ஆடிட் ரிபோர்ட்டை எப்படிக் கவனிக்க வேண்டும்? அதை வாங்கி வைத்துக்கொண்டு, இரண்டு, மூன்று நாட்களுக்காவது அதைப்பற்றி ஆடிட்டிங் அதிகாரிகளுடன் விவாதம் பண்ணி, எங்கே தவறு இருக்கிறதோ அதற்கு விளக்கம் சொல்லவேண்டும் விவரம் தெரிந்து, தவறு இல்லாவிட்டால் தவறு

இல்லை என்று தெளிவுபடுத்த வேண்டும். தவறிருந்தால் அதைத் திருத்திக்கொள்ளவேண்டும். இப்படி ஒன்றையுமே கவனிக்காமல், அகவுண்ட்ஸ் ஆபீஸரிடம் கொடுத்துவிட்டுப் போங்கள் என்று சொல்லிவிட்டார். ஆடிட்டிங் ஆபீஸர்கள் இருக்கும்பொழுதே, அவர்களுடன் பேசாமல் 'டிஸ்கஸ்டு' என்று போட்டு—'டிஸ்கஸ்டோ' அல்லது 'டிஸ்கஸ்டடோ'—கையெழுத்திட்டுவிட்டு, வெளியே இருக்கும் ஆடிடிங் அதிகாரியிடம் கொடுத்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது. 200 பக்கங்கள் கொண்ட ஆடிட் ரிபோர்ட் கொடுத்திருக்கிறார்கள். அதைப் படித்தார்களோ, படிக்கவில்லையோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். ஆனால், ஒரு 'இஞ்சு' கூட அந்த ரிபோர்ட்டைப் பற்றி டிஸ்கஷன் அங்கு நடக்க இல்லை. எதற்காக ஆடிட்டர்கள் என்று சிந்திக்கவேண்டும். இதையெல்லாம் நாம் நன்றாக புலப்படுத்திக்கொண்டால், இதனால் ஏற்படுகின்ற விளைவு நன்கு தெரியும். இந்த லக்ஷணத்தில், இந்த அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது தெரியுமா? படிப்பதற்கு நேரமில்லை, இருந்தாலும் படிக்கிறேன்.

"தற்போது பாலும், பாலைச் சேர்ந்த பொருள்களும், மக்களால் குறைந்த அளவே பயன்படுத்தப்படுகின்றன; பால் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம், பாலையும் பாலைச் சார்ந்த பொருட்களையும் மக்கள் தற்போது குறைந்த அளவில் பயன்படுத்துவதற்குப் பதிலாக அதிக அளவில் பயன்படுத்த வழி செய்தல்". அவர்கள் கொடுக்கிற பால் ஒரு வேளை காப்பிக்குக் கூடப் போதவில்லை. நிலைமை இப்படி இருக்கும்பொழுது, அதற்கு மேல் பால்கோவா கொடுப்பதற்கு திட்டம் போடுவதைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்? இப்பொழுது இருப்பதெல்லாம் செம்மையாக நடக்கிறதா? செம்மையாக நடத்திவிட்டு அல்லவா இன்னொன்றைத் தொடரவேண்டும். இப்பொழுது நடப்பதில் இவ்வளவு தவறு இருக்கிறது. நான் வேறு வழியில் குறை சொல்ல விரும்பவில்லை, நிச்சயமாக கையில் ஆதாரம் இல்லாத வரையில் ஒன்றை ஊகித்துப் பேச மாட்டேன். அதிலே இப்பொழுது இருக்கிற பிழைகளை திருத்துவதற்கு முன்னால், குப்பையைக் கூட்டுவதற்கு முன்னால் பந்தி வைக்க ஆரம்பிப்பது போல, ஏன் அவசரப்பட வேண்டும்? 'உடையவர் உண்டைக்கட்டிக்கு திண்டாடும் பொழுது, அடியார் அக்கார அடிசில் கேட்டாராம்' என்று ஒரு பழமொழி உண்டு, அதுபோல் உள்ள பாலுக்கே திண்டாடும்பொழுது, பால் பொருள்களைக் கொடுக்கப்போகிறார்களாம், அதற்காகப் பெரும் பணச் செலவில் திட்டம் வகுக்கவேண்டுமாம். நிறைவேறிய திட்

.m. 1 டத்தை அமலாக்கவில்லை என்பதை மறக்க அடிக்க இந்த மாதிரி ஜாலங்களா? மூடி மறைக்க சுற்றிவளைக்கிறார்களா? மாட்டுப் பண்ணையில் மாடுகளைவிட, அதிகாரிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அதனால்தான் இத்தனை அவகேடுகளும்.

இனிஅடுத்ததாக கதர். கதர் இலாகாவிலே எற்படும் விரயம் தாங்கமுடியாததாக இருக்கிறது. கதர் உற்பத்தி விவரம் ஒரு அளவு 149-வது பக்கத்தில் தந்திருக்கிறது.

MR. DEPUTY SPEAKER : I hope the hon. Member will finish his spech in five or ten minutes and I think the House has no objection to sit till then.





**திரு. சா. கணேசன்:** இன்னும் 10 நிமிஷங்கள் கொடுத்தால் போதும். இப்பொழுது அதைப் படிப்பதற்கு நேரம் இல்லை. பக்கத்தை மட்டும் சொன்னதுடன் அமைகிறேன். இதிலே அரசாங்கம் வாங்குவது எவ்வளவு, பொது மக்கள் வாங்குவது எவ்வளவு, இதிலே கதர் நூல் அல்லாதது எவ்வளவு, சேதாரம் எவ்வளவு, உத்தியோகஸ்தர்கள் சம்பளம் எவ்வளவு, போக்கு வரத்து செலவு எவ்வளவு, இதெல்லாம் தெரியவேண்டும். நேரிடையாக உற்பத்தியாளர்களுக்குப் போகாத செலவு எவ்வளவு? இது தவிர, காதி கமிஷனிடம், 1961, 1962, 1963 ஆக மூன்று ஆண்டுகளில் சுமார் நாலு கோடி ரூபாய் உதவி நிதி பெற்றிருக்கிறது. இதிலே ரூ. 62 லட்சம் திருப்பிக் கொடுத்தது. பாக்கி கிட்டத் தட்ட 340 லட்சம். இதற்கு இன்னும் அத்தாட்சி அளிக்கப்பட இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் தனிப்பட்டவர்கள் ஸ்தாபனத்தில் நடந்திருந்தால் விடுவார்களா? இந்த நிலை சென்னை ஆட்சிக்கும், கதர் துறைக்கும் இழுக்கு அல்லவா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இங்கு ஆடம்பரச் செலவுகளும், கதர் தத்துவத்திற்கே முரணான செயல் முறைகளும் நடப்பதால் இதைக் கவனிக்க வேண்டும். எனக்கு ஒரு கார்டு இந்த இலாகாவிலிருந்து வந்தது. அதில் கதர் வாங்கவேண்டும் என்பது கோரிக்கை. எப்படிப்பட்ட கார்டு? க்ரீடிங் கார்டு போல, ரூ. 2 பெறுமானமுள்ள கார்டு, எப்பொழுதுமே கதர் தவிர வேறு எதுவும் வாங்காத எனக்கு கதர் வாங்கச் சொல்லி, இவ்வளவு விலை உயர்ந்த கார்டு போட வேண்டியது அவசியம் தானா? ஒவ்வொரு எழுத்தும் பெரிய பெரிய அளவிலே எம்பாஸ்கூட இல்லாமல், ப்ரிண்டிங்கிலேயே 1/10 இஞ்சு உயர உப்பும்படி அப்படிச் செய்து ரூ. 2 பெருமானமுள்ள கார்டு அனுப்பியிருக்கிறார்கள். அது பொருத்தமானதா? இப்படிக் காந்தியடிகள் சொன்னாரா? கதருக்கு இவ்வளவு பணம் ஏன் விரயம் செய்ய வேண்டும்? இது கதர் தத்துவத்திற்கே முரணானது இல்லையா? ஆணி வேரில் வெந்நீர் ஊற்றிப் பொசுக்கப்படுகிறது இல்லையா என்று சிந்திக்க வேண்டாமா?

கதர் துறையில் உள்ள குற்றங்குறைகளைக் கண்டறிய, அவற்றைக் கவனித்து ரிபோர்ட்டு செய்ய, தகுதியுள்ள, திறமை வாய்ந்த நேர்மை உள்ள ஒரு குழுவை அமைக்கவேண்டும். அதன் ரிப்போர்ட்டைச் சபைக்குக் கொணர வேண்டும்.

சர்க்கார் வளர்க்கின்ற கோ-ஆபரேடிவ் ஃபாரம் பற்றி பிரமாதமாகப் பேசப்பட்டது. ஒரு தரம் போய்ப்பார்க்கலாம் என்று சென்றேன். கூட்டுறவு அமைச்சரும் பத்திரிகையில் காளப்பநாயகன் பாளையத்தில் உள்ள கூட்டுறவுப் பண்ணைபற்றி பாராட்டிச் சொல்லியிருந்ததைப் படித்தேன். போய்ப் பார்த்து வரலாம் என்று சென்று பார்த்தேன். பார்த்ததைப் படமும் எடுத்து வந்திருக்கிறேன். இதோ இது சர்க்கார் பண்ணை, இதோ ரோடு, ரோட்டுக்கு இந்தப் பக்கத்தில் கோவாபரேடிவ் பாரம். அந்தப் பக்கத்தில் தனியார் பண்ணை. இதோ படத்தில் இருக்கிறது பார்க்கலாம். அந்த பண்ணை நெம்பர் கே. 1657, போர்டோடு படம் எடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே என்ன நடக்கிறது. இந்தப் பக்கம், இது கூட்டுறவுப் பண்ணைப் சோளம்; அந்தப் பக்கம்

[திரு. சா. கணேசன்] [9th August 1965

தனியார் பண்ணை சோளம்; இந்தப் பக்கம் கூட்டுறவுப்பண்ணை வாழைகள்; அந்தப்பக்கம் தனியார் பண்ணை வாழை, தனியார் பண்ணையைவிட இந்தக் கூட்டுறவுப் பண்ணை எந்த விதத்திலும் உயர்ந்ததாக இல்லை என்பதில்லை. ஆனால் கூட்டுறவுப் பண்ணை எவ்வளவு மோசமாக இருக்கிறது. யாராவது பொய் என்று சொன்னால், நானே என் செலவில் கூட்டிக் கொண்டு போய்க் காட்டுகிறேன்; பார்க்கட்டும். நான் யார் மீதும் அபாண்டமாகக் குற்றம் சொல்லவேண்டும் என்று சொல்லவில்லை. கூட்டுறவு தத்துவம் என்ன? இந்தப் பண்ணையைப் பார்த்தால், அநாதி மாதிரி இருக்கிறது. இம்மாதிரி கூட்டுறவுக் கெல்லாம் சர்க்காரிலிருந்து பணம் கொடுக்கக் கூடாது. கூட்டுறவு என்று யாரோ 50 பேர்கள் சேர்ந்து வைத்தால், அதில் 50 பேர்களும் பண்டம் வாங்கலாம். அதற்கு வழியிருக்கலாமா? அதை ஆதரிக்கலாமா? அதற்குச் சர்க்கார் நினைத்தபடி கடன் கொடுக்கலாமா? எவ்வளவோ விதமான கூட்டுறவுச் சங்கங்கள், ப்ரொட்யூசர்ஸ் சங்கம், கன்ஸ்யூமர்ஸ் சங்கம், பாங்கிங் சங்கம், மார்க்கட்டிங் சங்கம், மல்டி பர்பஸ் சங்கம் என்று எத்தனையோ வகைகள் உண்டு சிலர் சேர்ந்து ஆயிரம், ஐநூறு ஷேர் தொகை கொடுத்துவிட்டால், ஐந்து லட்ச ரூபாய்கூடச் சர்க்கார் தருகிறது. ஒரு கூட்டுறவுச் சங்கத் தலைவர் அல்லது செக்ரடரி அல்லது மற்றவர் 1,000 ரூபாய், 5,000 ரூபாய் கையாண்டார் என்று செய்தி வராத நாள் மூன்று உண்டா? ஊழலற்ற சங்கம் குதிரைக் கொம்பாகிவிட்டது, இதையெல்லாம் உண்மையான கூட்டுறவுத் தத்துவத்தோடு நடத்தினால், இந்த அக்கிரமங்களெல்லாம் வராது. சர்க்கார் இவற்றிற்கெல்லாம் லோன்கள்கூடக் கொடுக்கக்கூடாது. இதெல்லாம் ஸ்டேட் பாங்கி மூலம் கொடுக்க வேண்டும். அப்பொழுது தவறு நடக்க அதிக வாய்ப்பிருக்காது. லாபநஷ்டம் அதில் சம்பந்தப்பட்டவர்களையே பொறுக்க வழி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், அந்த செக்ரடரி அல்லது டைரக்டர் அல்லது ப்ரெசிடெண்ட் கைதாகி தண்டனையடைய வேண்டிய நிலை ஏற்படும். அதனால் அந்தமாதிரிக் குற்றங்கள் ஏற்படாமல் இருக்கும். நஷ்டம் ஆகிவிட்டால் இன்றைக்கு சர்க்கார் லோன் தானே என்று சர்க்கார் தலையில் போட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். யார் யார் டைரக்டராக இருக்கிறார்களோ அவர்களையெல்லாம்தான் பாதிக்கும் என்று சட்டத்தையே திருத்தி அமைக்க வேண்டும்.

கோவில் நிலங்கள் தனி மனிதர்களிடமிருந்து மீட்கப்பட வேண்டும். அதெல்லாம் 200, 300 வருஷங்களுக்கும் முன்னால், மாறி மாறி இவர்களிடம் வந்திருக்கின்றன. இதையெல்லாம் எடுத்து, 4 ஏக்கர், 6 ஏக்கர் என்று பிரித்துக் கொடுத்து, உழவர்கள் நேரடியாகச் சாகுபடி செய்யும் நிலையை உண்டாக்க வேண்டும். அதற்கான மேல் வாரத்தை நிர்ணயம் செய்து, வருமானம் நேரிடையாகக் கோயில்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். இந்த நிலங்கள் யாரிடத்தில் இருந்தாலும் அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும். ஏனென்றால், அவை 'இல்லீகல்' ஆக அவர்களிடம் போய்ச் சேர்ந்திருக்கின்றன. ஏராளமான



9th August 1965] [திரு. சா. கணேசன்]

சொத்துக்களை யார் யாரோ அனுபவித்து வருகிறார்கள். கோவிலுக்குக் கிடைக்க வேண்டியவை முழுதும் வருமானால் கோயில் நிர்வாகம் செம்மையாக நடப்பதுடன் கலைக்கு, கல்விக்கு என்று செலவழிக்கவும் வழி ஏற்படும். கோவில்களும் செழிக்கும். கோவில்கள் செழிக்கின்றன என்றால் என்ன பொருள்? சமுதாயம் வாழ்கிறது வளர்கிறது என்றுதான் பொருள். மக்கள் வாழ்கிறார்கள். சோஷலிசம் என்று பேசுகிற, அதில் நம்பிக்கை உள்ள இந்த சர்க்காருடைய தலையாய கடமை இது என்று ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

சென்னையில் நெருக்கடியைப் போக்க, இங்கே எல்லா இலாகாக்களும் இருப்பதைப் போக்க வேண்டும். பல இலாகாக்கள் தேவையில்லாமல் சென்னையில் இருக்கின்றன. இந்து அறநிலைய இலாகாவிற்கு இங்கு என்ன வேலை? அது தஞ்சாவூரில் அல்லவா இருக்க வேண்டும். அங்கே நாலாபுறமும் கோயில்கள் இருக்கின்றன. அதே போல, பொதுப்பணித்துறை இங்கே இருப்பானேன்? இங்கிருந்து கன்யாகுமரி வரை போக வேண்டியிருக்கிறது. அதைத் திருச்சியிலோ அல்லது வேறு இடத்திலோ வைக்கலாம். அதே போல ஹைகோர்ட்டை மதுரை அல்லது வேறு இடத்திற்கும், எலக்ட்ரிசிடி போர்டை ஈரோடு போன்ற வேறு இடத்திற்கும் மாற்ற வேண்டும். அத்தனை டாம்களும் இங்கேயா இருக்கின்றன? அவைகள் கோவையை, சேலத்தை, மதுரையை, நெல்லையை ஒட்டியே உள்ளன. எனவே இவை போன்றவற்றைத் தக்க இடங்கட்கு மாற்றினால் சென்னையில் நெருக்கடி குறையும். இங்கே உட்கார்ந்து கொண்டு அங்கெல்லாம் போய்வர காலமும், சக்தியும், பணமுந்தான் எவ்வளவு விரையமாகின்றன.

அடுத்து, மிடில் இன்கம் க்ரூப்புக்கு வீடுகள் கொடுக்கிறார்கள். ரூ. 5,000 நிலத்திற்கு என்று கேட்டால், அவர்கள் எங்கே போவது? ரூ. 1,000 முதற்பணம், இருபதாண்டில் நிலம், வீடு, ஆகியவற்றின் தொகையை நியாயமான வட்டிசேர்த்து வசூல் செய்கிறோம் என்று சொன்னால் அவர்கள் வாழ்வார்கள். ஆனால், நிலத்தின் கிரயத்தை ரூ. 5,000 கொடுக்க முடியாத காரணத்தினால், யாருக்காவது அதை கொடுப்பது, ஏலம் போடுவது என்று நடக்கிறது. யார் வேண்டுமானாலும் போய் வாங்கலாம், சாவன்னா கணேசன் போய் வாங்கலாம் . . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்த மாதிரி நடக்கிறது என்று யார் கனம் அங்கத்தினருக்குச் சொன்னார்களோ? ஏலம் போடுவதில்லை. யாராவது கொடுக்க முடியாவிட்டால், போர்டே வாங்கி அல்லாட்டுமெண்டுப் பிரகாரம் கொடுக்கப்படுகிறது.

**திரு சா. கணேசன்:** இன்னும் 2 தினங்களில் அமைச்சர் அவர்களிடத்தில் அந்த நிலம் ஏலம் போடப்பட்டது பற்றிய விவரத்தைக் கொண்டுவந்து தருகிறேன். செய்தி தந்தவர்கள் தவறாகத் தந்திருந்தால், அதையும் தெரிந்துகொள்கிறேன்.

வரலாற்று நூல்கள் செம்மையாக எழுதப்படவேண்டும். கல்வெட்டுகள் எல்லாம் திரட்டப்பட வேண்டும். திரட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன. அவை திரட்டப்பட்டு, வம்சா

[திரு. சா. கணேசன்] [9th August 1965

வளிப்படி காலவாரியாக, இட வாரியாக, துறை வாரியாகத் தொகுத்து அச்சிடப்பட வேண்டும். அச்சிட்ட பின்னர், அதன் அடிப்படையில் தான் நம்முடைய வரலாறு எல்லாம் செம்மையாக ஆகும். ஆங்கிலத்தில் History must begin from the south என்று சொல்வார்கள். ஆனால், வடக்கிலே ஆரம்பித்துக் கொண்டு வருகிறது ; கஷ்ட காலம் ; நம் மாநிலத்தில்தான் கி. பி. ஆருவது நூற்றாண்டிலிருந்து இன்று வரை தொடர்ந்து எல்லாத் துறை சாசனங்களும் கல்லிலே கிடைக்கக் கூடியனவாக இருக்கின்றன. இந்து ஆலயங்கள் மட்டுமல்லாமல் சமண ஆலயங்களிலும் ஏராளமான கல்வெட்டுகள் இருக்கின்றன. சமண ஆலயங்கள் பல, அம்மதத்தினர் பெரும்பாலும் எண்ணிக்கையில் குறைந்து அருகிப் போன காரணத்தால், இடிந்து சிதைந்து சிதிலமடைந்து வருகின்றன. அவற்றையெல்லாம் உடனே சர்க்கார் மேற்கொள்ள வேண்டும்; பாதுகாக்க வேண்டும். பாதுகாத்தால் அவற்றிலிருந்து விவரங்கள், செய்திகள், முதலிய அருமைப்பாடுகள் எல்லாம் நமக்குக் கிடைக்கும். அத்துடன் ஆங்காங்கு கிடைக்கும் சமணத் திருவுருவங்களை யெல்லாம் திரட்டிக்காட்சிக் கூடங்களாகவாவது வைக்கவேண்டும். அதன் பயன் பெரிது என்பதை நான் மிகவும் வற்புறுத்தியமைகிறேன். கடைசியாக, பம்பையாறு, கீரியாறு, இடுக்கித் திட்டம் அல்லது ' அப்பர் ' பெரியாறு திட்டம் மூலமாகக் கிட்டத்தட்ட எட்டு லட்சம் ஏக்காராவாவது பாசன வசதி பெறும் என்று அனுமானிக்கப்படுகிறது. அந்தத் துறையில் எனக்கு நிபுணத்துவம் இன்மையினால் அதைப்பற்றி அறுதியிட்டு ஏதும் சொல்வதற்கில்லை. அதை இந்தத் திட்டத்திலே கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும்.

டாக்டர் லோகனாதன் அவர்கள் எழுதிய குறிப்புப்படி, அதோடு நாமெல்லாம் இந்தத் தேசம் ஒன்று இந்திய தேசம் ஒன்று. இது ' ஒருமைப்பாடு உடைய நாடு ' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும் நிலையில், கோதாவரி, கிருஷ்ணா நதிகளில் விரயம் ஆகும் நீரையெல்லாம் திரட்டி இங்கே கொண்டுவந்து சேர்த்தால் இன்னும் குறைந்தது முப்பது லட்சம் ஏக்காராக்களுக்காவது சாகுபடி செய்ய வாய்ப்பு உள்ளதாக இருக்கும் என்று கணிக்கப்படுகிற காரணத்தால் டாக்டர் லோகனாதன் ரிப்போர்ட்டில் அப்படி இருக்கிறது— இதையெல்லாம் ஆய்ந்து, தெரிந்து, தெளிந்து செயல்பட முயற்சி செய்து, இந்தத் திட்டத்திலே கொண்டுவா முடிந்தால் அதையும் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அவற்றிற்குரிய கவனத்தை ஆளுங்கணத்தார் செலுத்தவேண்டும் என்று வேண்டி என்னுடைய உரையை முடிக்கின்றேன். **வணக்கம்.**

Mr. DEPUTY SPEAKER : The House wil now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

**Nil.**



9th August 1965]

### B. Reports, notifications and other papers.

*54. Committee on Estimates for 1964-65—Second Report of the Committee on Women's Welfare Department.

55. Report of the Committee on Estimates for 1964-65 on the State Khadi and Village Industries.

56. Report of the Committee on Estimates for 1964-65 on the Industrial Estates.

* Laid on the table of the House on 7th August 1965.

## APPENDIX I.

[*Vide* answer to starred question No. 95 at page 435.]

The following schemes have been sanctioned under the crash programme :—

(1) The State Family Planning Officer working in the office of the Director of Medical Services has been transferred to the Public Health Department to look after Family-Planning work in Rural areas, especially in the Primary Health Centres. The Government have sanctioned the creation of the post of Assistant Director of Medical Services (Family Planning) to deal with Family Planning work on the surgical side in Government medical institutions, other than Primary Health Centres.

(2) Sanction has also been accorded to the—

(*a*) appointment of field workers to canvass eligible fathers to undergo vasectomy operation and to the appointment of Liaison Officers for screening those who are brought for Operation, in order to prevent malpractices;

(*b*) appointment of four Women Family Planning Educators in the Children's Wing of the Women and Children Hospital, Egmore;

(*c*) appointment of twelve District Family Planning Officers of the grade of Tahsildars with twelve Lower Division Clerks and twelve peons;

(*d*) employment of a Nurse in each approved Government Surgery including Primary Health Centres to assist the Medical Officers in sterilization work;

(*e*) opening of full-time vasectomy surgical units in 12 District Headquarters Hospitals and in Government Raja Mirasdar Hospital, Thanjavur and in Erskine Hospital, Madurai, and the employment of field workers to canvass eligible fathers to be brought for sterilization. The field workers will be paid a remuneration of Rs. 10 per case canvassed and operated; and

(*f*) construction of a twenty beded ward and two operation theatres in the Kasturba Gandhi Hospital, Madras in order to offer better facilities to mothers to undergo salpingectomy operation.

விரைவுத் திட்டத்தின்கீழ் பின்வரும் வேலைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:—

(1) இந்த மாநிலத்தில், கிராமப் பகுதிகளில் சிறப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்பக்கட்டுப்பாடு வேலையைக் கவனித்துக்கொள்ள மருத்துவத்துறை நெறியாளர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த குடும்பக்கட்டுப்பாட்டு அதிகாரி பொது சுகாதாரத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். ஆரம்ப சுகாதார நிலையங்கள் நீங்கலாக மற்ற அரசாங்க மருத்துவ மனைகளில் குடும்பக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகளைக்





கவனித்துக்கொள்ள அரசாங்கம் (குடும்பக்கட்டுப்பாடு) மருத்துவத்துறை உதவி நெறியாளர் பதவி ஒன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கியுள்ளது.

(2) பின் வருவனவற்றிற்கும் அங்கிகாரம் வழங்கப் பட்டுள்ளது:—

(ஏ) அறுவை சிகிச்சை செய்து கொள்ளத் தகுதி வாய்ந்த பிரச் தந்தையர்கள் அச்சிகிச்சையைச் செய்துகொள்ளும்படி சாரம் செய்யத் தொண்டர்களை நியமித்தல், முறைகேடான பழக்க வழக்கங்களை நிறுத்தும் பொருட்டு, அறுவை சிகிச்சை செய்து கொள்ள வருபவர்களிடம் தொடர்புகொள்ள தொடர்பு அதிகாரி களை (Liaison Officers) நியமித்தல்,

(பி) மகளிர்-சிறுர் மருத்துவ மனையில் சிறுர்ப்பிரிவில், மகளிர் குடும்பக்கட்டுப்பாட்டுப் போதகர்கள் நான்கு பேரை நியமித்தல்,

(ஸி) தாசில்தார்கள் தரத்தில் 12 மாவட்ட குடும்பக்கட்டுப் பாட்டு அதிகாரிகளையும் 12 கீழ்நிலை எழுத்தர்களையும் 12 கடை நிலை ஊழியர்களையும் நியமித்தல்,

(டி) அரசாங்க அனுமதி பெற்றுள்ள அறுவை சிகிச்சை நிலையம் ஒவ்வொன்றிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ அதிகாரிகளுக்கு அறுவை சிகிச்சையின்போது துணை புரிவதற்கு செவிலி ( rse ) ஒருவரை நியமித்தல்,

(இ) 12 தலைமையிட மருத்துவ மனைகளிலும், தஞ்சாவூர் அரசாங்க ராஜாமிராசுதார் மருத்துவ மனைகளிலும், மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையிலும் முழுநேரம் பணியாற்றும் வாசக்டமி அறுவை நிலையங்களைத் திறத்தல், அறுவை சிகிச்சை செய்துகொள்ளத் தகுதிவாய்ந்த தந்தையர்களை அச்சிகிச்சை செய்துகொள்ளும்படித் தூண்டுவதற்குத் தொண்டர்களை நியமித்தல் இவ்வாறு பிரச்சாரம் செய்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டால், அத்தொண்டருக்கு ரூபாய் 10 ஊதியமாக அளிக்கப்படும்,

(எப்) மகளிர் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள அவர் களுக்குச் சிறந்த வசதிகளைச் செய்து தருவதற்காக, சென்னை கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட வார்டும், இரண்டு அறுவைச் சிகிச்சைக் கூடங்களும் கட்டுதல்.

## APPENDIX II.

[*Vide* answer to starred question No. 137 at page 449.]

(*a*), (*b*) and (*d*) One hundred and ten sheep died in July and August 1964 and two on 14th October 1964. Of these, six sheep died due to various sheep diseases namely pneumonia, enteritics, gastroenteritis and John's disease and the rest died of suspected poisoning due to drenching of the sheep on 25th August 1964, with a drug mistaken for 'Phenovis'. The total number of deaths in August and in the subsequent months out of 413 sheep drenched on 25th August 1964 with the drug mistaken for

[9th August 1965

'Phenovis' was 202. Immediately on receipt of telephonic report from the Superintendent of the farm on 26th August 1964 about the death of some sheep and ailment of the rest after their drenching, the Director of Animal Husbandry deputed the Professor of Therapeutics to the Hosur Farm to investigate the cause of death and give treatment to the ailing sheep. The Veterinary Disease Investigation Officer (Sheep and Goat) and the Deputy Director of Animal Husbandry (Livestock) were also deputed to the Farm to investigate into the matter. Thus steps were taken immediately to save as many of the ailing sheep as possible. As a result of the steps taken 211 out of 413 sheep drenched with the mistaken drug were saved.

Subsequently the Government deputed a Board Member to make a detailed enquiry into the incident and on the report of the Board Member, Government are taking disciplinary action against the persons whose negligence in their duties resulted in the mishap.

64919

(c) The book value of the six sheep that died of various diseases and the 202 sheep due to their drenching with a mistaken drug is about Rs. 3,451.

(அ), (இ) ... (ஏ) 1964 ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் 110 செம்மறியாடுகள் இறந்துவிட்டன. 1964 அக்டோபர் மாதம் 14-ந்தேதியில் மேலும் 2 ஆடுகள் இறந்துவிட்டன. இவற்றில் 6 செம்மறியாடுகள், நிமோனியா, குடல் காய்ச்சல், இரைப்பைக் காய்ச்சல், ஜான்ஸ் நோய் ஆகிய நோய்கள் கண்டு இறந்தன. எஞ்சியவை, 1964 ஆகஸ்டு மாதம் 25-ந் தேதியில் "பினோவிஸ்" என்னும் மருந்துக்குப் பதிலாக வேறு மருந்தைக் கொடுத்ததினுல் இறந்துவிட்டன. 1964 ஆகஸ்டு மாதம் 25-ந் தேதியில் அவ்வாறு தவறுதலாக மருந்து கொடுக்கப்பெற்ற 413 ஆடுகளில், ஆகஸ்டு மாதத்திலும் அடுத்துவந்த மாதங்களிலும் இறந்த ஆடுகளின் மொத்த எண்ணிக்கை 202 ஆகும். இம்மருந்து கொடுக்கப்பட்ட பின்னர் சில ஆடுகள் இறந்துவிட்டது பற்றியும், மற்றும் சில நோயுற்றது பற்றியும் 1964 ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி மேற்படி பண்ணை மேற்பார்வையாளர் தொலைபேசி மூலமாகத் தகவல் கொடுத்தவுடன் கால்நடைப் பண்ணைத் துறை நெறியாளர் ஆடு இறந்துபோனதற்கான காரணத்தைக் கண்டறியவும், நோயுற்ற ஆடுகளுக்குச் சிகிச்சை அளிக்கவும், நோய் சிகிச்சைத் துறைப் பேராசிரியரை ஹோசூர் கால்நடைப் பண்ணைக்கு அனுப்பிவைத்தார். இவ்விஷயத்தினைப் பரிசீலிக்க ஷ பண்ணைக்கு (செம்மறியாடு, வெள்ளாடு) கால்நடை நோய் ஆராய்ச்சி அதிகாரியும். கால்நடைப் பண்ணைத் துறை துணை நெறியாளரும் கூட இதைப்பற்றி ஆராய்வதற்கு அங்கு அனுப்பப்பட்டார்கள். கூடிய மட்டில் நோயுற்ற ஆடுகளைக் காப்பாற்றுவதற்கு இவ்வாறு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதன் விளைவாக, தவருன மருந்து கொடுக்கப்பெற்ற 413 செம்மறியாடுகளில் 211 ஆடுகள் காப்பாற்றப்பட்டுள்ளன.

பிறகு இந்த நிகழ்ச்சி குறித்து விரிவான விசாரணை நடத்துவதற்காக வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் (Board Member) ஒருவரை அரசாங்கம் அனுப்பிவைத்தது. அவருடைய அறிக்கைப்படி கடமையில் அசட்டையாயிருந்து ஆடுகள் இறக்க நேர்ந்ததற்குக் காரணமாயிருந்த நபர்களின்மீது அரசாங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(உ) பல்வேறு நோய்களினுல் இறந்துபோன 6 ஆடுகள், தவருன மருந்து கொடுக்கப்பட்டதனுல் இறந்த 202 ஆடுகள் ஆகியவற்றின் மதிப்பு சுமார் 3,451 ரூபாய் ஆகும்.